

# கருணைக்கடல்

# காகபுஜண்டர்

முனைவர் இரா.செல்வக்கணபதி

ஸ்ரீ நந்தினி அருட்கூடம்
திருப்பட்டினம்
2001

கருணைக் கடல்

# காகபுஜண்டர்

ஆசிரியர்.
முனைவர். இரா. செல்வக்கணபதி

வெளியீடு

ஸ்ரீ நற்பவீ அருட்கூடம்
ஸ்ரீ சிவசக்தி இல்லம்
எடத்தெரு, திருப்பட்டினம். 609 606.
ஏப்ரல் - 2001

முதற்பதிப்பு: ஏப்ரல் - 2001

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | கருணைக் கடல் காகபுஜண்டர் |
| ஆசிரியர் | : | முனைவர். இரா. செல்வக்கணபதி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு ஏப்ரல் - 2001 |
| பக்கங்கள் | : | 16 + 217 = 233 |
| வெளியீட்டோர்: | | ஸ்ரீ நற்பவீ அருட்கூடம்<br>ஸ்ரீ சிவசக்தி இல்லம்<br>எடத்தெரு,<br>திருப்பட்டினம். 609 606.<br>புதுவை மாநிலம். |
| விலை | : | ரூபாய் 55-00 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |

நூல் கிடைக்குமிடம்:-

நற்பவீ அருட்கூடம்

திருப்பட்டினம். 609 606.

புதுவை மாநிலம்

தொலைபேசி: (04368) : 23165, 26737.

அச்சிட்டோர்:-

ஆர்.கே. ஆப்செட், கீழவீதி, சிதம்பரம் - 608 001.

தொலைபேசி : 22941.

முனைவர் **இரா. செல்வக்கணபதி** எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்ப்பேராசிரியர்
*1/7பி, அபிராமி நகர்,*
*மயிலாடுதுறை 609 002.*

**கருணைக்கடல் காகபுஜண்டர்** என்ற இத்தமிழ்நூல் திருமலை திருப்பதி தேவஸ்தானம், சிறந்த நூல்கள் வெளியிடுவதற்கான உதவித்திட்டத்தின் கீழ் (Aid to Authors Scheme) வழங்கிய நிதி உதவி* பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இதற்காகத் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கும், அதன் நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன்.

**இரா. செல்வக்கணபதி**
மயிலாடுதுறை.

**KAGAPUJANDAR** - Tamil

Published with the Financial Aid by Tirumalai Tirupati Devasthanam under **Aid to Authors Scheme.*** I extend my heartful thanks to T.T.Devasthanam for this kindly help.

Dr. R. SELVAGANAPATHY,
Mayiladuthurai.

December-2001
Copies : 1000

* Tirupati T.T. Devasthanams - Executive Officer Letter Roc No. Edit. 8/926/01 dt.13.12.2001.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வரலாற்று மூலங்கள் | 1 |
| 2. | துளசி இராமாயணம் | 14 |
| 3. | தமிழ் நூல்களில் காகபுஜண்டர் | 119 |
| 4. | காகபுஜண்டர் - நூலாராய்ச்சி | 138 |
| 5. | காகபுஜண்டர் ஆலயம் | 187 |

## முன்னுரை

சிவபரம் பொருளின் அளப்படும் கருணையும், மகரிஷி காகபுஜண்டரின் பேரருளும், அருளாளர். நற்பவீயானந்த அம்பாஜி அவர்களின் அன்பும் துணை நிற்கக் 'கருணைக் கடல் காகபுஜண்டர்' என்ற இவ்வழகிய நூல் இன்று வெளியிடப்படுகிறது.

கடந்த ஓராண்டுக்கு முன் அருளாளர் அம்பாஜியை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அது நட்பாக மலர்ந்தது. நான் பல ஆண்டுகளுக்கு முன் எழுதி வெளியிட்ட 'கோரக்கச்சித்தர்' என்ற நூலைப் படித்திருந்த அவர், 'காகபுஜண்டர்' குறித்தும் அவ்வாறான ஆய்வு நூல் ஒன்றை எழுதித்தருமாறு என்னைப் பணித்தார். சித்தர் நூல்களில் பயிற்சியும், ஆராய்ச்சியும் உடையவனாக இருந்தும், காகபுஜண்டரைப்பற்றி நான் எதுவும் அறிந்திருக்கவில்லை.

திருப்பட்டினத்தில் காகபுஜண்டர் அருளாலயம் எழுப்பிக் குட முழுக்குக் கண்ட அம்பாஜி, 8-6-2000 குட முழுக்கு நாளன்று காலை, காகபுஜண்டர் குறித்து ஓர் உரை நிகழ்த்த ஆணையிட்டார். வரலாறு குறித்துத் தேடத் தொடங்கிய எனக்கு அடுத்தடுத்து, பலரது வாயிலாகப் பல தகவல்கள் கிடைக்கத் தொடங்கின. அவற்றுள் சிலவற்றைத் தொகுத்து என் உரையை அன்று நிகழ்த்தினேன். அவ்வுரை பலருக்கும் பிடித்திருந்தது.

காகபுஜண்டரின் திருவடிகளில் எனக்கு அன்பும் ஈடுபாடும் ஏற்பட்டது. அவர், துணைவியாருடன்

அமைந்திருக்கும் வண்ண ஓவியம் என் எதிரில் அமைய, நாளுக்கு நாள் புதிய புதிய செய்திகள் வந்து சேர்ந்தன. அம்பாஜியின் தூண்டுதலும், காகபுஜண்டர் விளைத்த உள்ளுணர்வும் என்னை மிகவும் பாதித்தன. வட மொழியிலும், இந்தி மொழியிலும், தமிழிலும் பல அரிய நூல்களும், ஏராளமான குறிப்புக்களும் கிடைத்தன. பல இடங்களுக்கும் நேரில் சென்றும், அன்பர்கள் பலரோடும், நூலகங்களோடும் கடிதவழித் தொடர்பு கொண்டும் வரலாற்றுக் குறிப்புக்களைத் தேடித் தொகுத்தேன்.

காகபுஜண்டர் வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டது முதல் உள்ளத்தில் ஓர் இனம்புரியாத அமைதியும், மகிழ்வும் நிலவுவதை உணர்ந்தேன். அவர் திருவுருவம் நெஞ்சில் பதிந்தது. தொட்டதெல்லாம் துலங்கும் பேறு வாய்ந்தது. மிகுந்த பக்தி உணர்வுடன் காகபுஜண்டர் உள்நின்று உணர்த்த, இந்த அருள் நூலை மூன்று மாதங்களில் எழுதி முடித்தேன். கற்பனைகளுக்கும், யூகங்களுக்கும் இடம் தாராமல் உள்ளதை உள்ளவாறு பதிவு செய்தேன். தமிழில் வழங்கும் காகபுஜண்டர் பாடல்கள் பலவும் பெரிதும் ஆராயப்பட வேண்டுவன என்று உணர்ந்தேன்.

அம்பாஜி ஆசியுடன் நூலை அச்சுக்குக் கொடுப்பதற்கு முதல் நாள், கோவை மாவட்டம், மாஸ்திக் கவுண்டன்பதி என்ற சிற்றூரில், அருள் ஒளிபரப்பிவரும், பதினாறு ஆண்டுகளே நிறைந்த பாலரிஷி ஸ்ரீ விஸ்வசிராசினி என்ற தெய்வ மகளைக் காணும் பேறு, மரபின் மைந்தன், தம்பி. திரு. ம. முத்தையா அவர்கள் அன்பால் அமைந்தது. பாலரிஷியோடு உரையாடுகையில்

மேலும் பல செய்திகளை உணர்ந்தேன். அவர்கள் உள்ளத்தில் குடி கொண்டு ஞானம் விளைப்பவரும் காகபுஜண்டரே என்பதை உணர்ந்து மெய்சிலிர்த்தேன். காகபுஜண்டர் தோத்திரம் ஒன்றை அருளுமாறு பாலரிஷியிடம் விண்ணப்பித்தேன். அருட்பிரவாகமாக, கம்பீரமான குரலில், இன்று வழங்கும் வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்கும் முற்பட்ட, வேதகால தேவபாஷையில் அந்தச் சுலோகம் வெளிப்பட்டது.

> 'ஓம் யஷ்வந்த்ர ஸ்தது க்ருஹஸ
> அஹன்யே ஆதவம தேதஸக்தோ திவ்ய
> நிமஸ காககுல பகுள காகவி
> புஜண்ட நித்யோ அகர ஸ்வரூபாம்
> பூரணம்'

இதனை ஓர் ஆசீர்வாதமாகவே கருதி இங்கே இணைத்துள்ளேன்.

காலதத்துவம் மனித ஆற்றல்களுக்குள் கட்டுப்படுவது அன்று. காலத்தை வென்று சிரஞ்சீவியாக வாழ விரும்பாதவர் எவரும் இலர். பலரும் பல வழிகள் உரைத்தனர். காகபுஜண்டர் உலகம் பிரளய காலங்களில் அழிந்து ஒழிந்த போதும் சாகாது வாழ்ந்தவர். யுகம் பல கண்டவர். சிரஞ்சீவி. இன்றும் வாழ்பவர். தாம் நீடூழி வாழும் இரகசியங்களை உரைக்கும் அவர், நாமும் அவ்வாறு வாழ அரிய பெரிய வாயில்களைக் காட்டுகின்றார். வியப்பூட்டும் அவர் வரலாறும், அரிய பல உரையாடல்களும், மனித குல மேம்பாட்டுக்கான அவரது அறிவுரைகளும் இந்நூலுள் முழுமையாகப் பதிவு

செய்யப்பட்டுள்ளன. உண்மை உணர்ந்து முயல்வார் நீடூழி வாழ்தல் உறுதி.

கோரக்கச்சித்தர் நூல் எழுதி நான் வெளியிட்ட பிறகு, நாகையை அடுத்த வடக்குப் பொய்கை நல்லூரில் கோரக்கர் ஜீவ சமாதி ஒளி பெற்றது. பல்லாயிரவர் அங்கே வரத் தொடங்கினர். கொளஞ்சியப்பர் அருள் வரலாற்றை எழுதி நான் வெளியிட்ட பின், மணவாள நல்லூரில் முருகப் பெருமான் நீதி தேவனாக உலகவரால் அறிந்து போற்றப்பட்டான். இன்று, கருணைக் கடல் காகபுஜண்டர் திருநூல் வெளிவருகிறது. திருப்பட்டினம் உலகெங்கும் வாழும் அன்பர்களை ஈர்த்து நிற்கும் என்பது உறுதி.

இந்நூலை ஐந்து இயல்களாகப் பகுத்து ஆராய்ந்து எழுதியுள்ளேன். பல்துறை அறிஞர்களும், நுணுகி ஆராய வேண்டிய ஓர் அருளாளர் இவர் என்பது என் எண்ணம்.

இந்நூல் எழுத என்னைப் பணித்து, பலகாலும் அரிய குறிப்புக்களை வழங்கி, தரவுகள் தேடிப் பெறவும், நூல்கள் வாங்கவும் அன்புடன் உதவி, காகபுஜண்டரின் அவதாரத் திருநாளாகிய பங்குனித்திங்கள் ஆயில்ய நாளில் (4-4-2001) இந்நூலை உரியவாறு வெளியிடச் செய்து உலகிற்கு வழங்கும் அருளாளர், நற்பவீயானந்த அம்பாஜி அவர்களுக்கும், அவர்தம் இல்லத்தாருக்கும், அவர் அருளறப் பணிகளுக்குத் துணை நிற்கும் அன்புமிகுந்த அருட் சேய்களுக்கும் நன்றி பாராட்டி வணங்குகின்றேன்.

என்னை அம்பாஜி அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, இந்நூல் வெளிவர உடனிருந்து உதவிய என் அன்புத் தம்பி, திருப்பட்டினம் கவிஞர். திரு. கோ. ஆனந்தகிருஷ்ணன் அவர்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக என்னை உள்ளவாறு நேசிப்பவரும், என் தமிழ் மீது ஆராக் காதல் கொண்ட பேரன்புடையவரும், சிவன் தாள் மலர்களில் நீங்காத பற்றுக் கொண்டு, அண்ணாமலையான் அடிக்கமலங்களில் பத்திமை பூண்டு, அன்பர்களால் ‘சைவச்செம்மல்’ என்று போற்றப் பெறுபவரும், திருவண்ணாமலையில் நல்ல தமிழ் வளர்க்கும், முத்தமிழ் இலக்கிய மன்றம், திருவள்ளுவர் திருவிழாக் குழு ஆகியவற்றின் செயலாளரும், வணிக வரித்துறையில் பெரும் பதவி வகிப்பவரும், வலது கை கொடுப்பதை இடது கை அறியாது வழங்கும் வள்ளன்மை மிக்கவருமாகிய என் அன்புச் சகோதரர். திரு. சோ. முத்து எம்.ஏ., அவர்கள் இந்நூல் வெளிவரத் தந்த ஆக்கமும் ஊக்கமும் பெரிது. அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டும் கடமையுடையேன்.

நான் வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் ‘ஏதேனும்’ ஒருவகையில் உதவி செய்து, என்னை நூல் எழுதும் முயற்சியில் ஊக்கப்படுத்தி வரும் என் இளைய சகோதரரும், சென்னை தமிழ் நாடு அரசு, குற்றவியல் வழக்குரைஞருமாகிய திரு. இராஜ. இளங்கோ,பி.ஏ., பி.எல், அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

பல்லாண்டுக்கால என் சிந்தனைகளைப் பதிவு செய்து, அடுத்தடுத்து நூல்களாக வெளிக்கொணர வேண்டும்என்றுஎன்னைப்பெரிதும்ஊக்கமூட்டி வரும் என் துணைவியாரும்,மயிலாடுதுறைநகராட்சித் தலைவரு மாகிய திருமதி. சந்திரா செல்வக்கணபதி, எம்.ஏ, பி.எட்., அவர்களுக்கு என் அன்பு.

நான் அச்சிட்டு வெளியிடும் நூல்கள் உருவாக ஆக்கம் சேர்ப்பதோடு, அவற்றின் கருத்துக்கள் மேல் நீண்ட விவாதங்கள் நிகழ்த்தி, என்னை மேலும் சிந்திக்க வைக்கும் என் அன்பு மகள் திருமதி. பாரதி நமசிவாயம் பி.எஸ்சி., என் அன்பு மகன் செல்வன். செ. அருண், பி.இ., இருவருக்கும் சிவன் திருவருளும், காகபுஜண்டர் நல்லருளும் கூடிவரப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் ஆர்.கே. பிரிண்டர்ஸ் உரிமையாளர் மற்றும் அலுவலர் களுக்கு என் பாராட்டுக்கள்.

வழக்கம் போல் சைவத்தமிழ் உலகம் இந்த உயரிய ஞானக்கருவூலத்தை ஏற்றுப் போற்றிப் பேரின்பம் எய்தும் என்ற நம்பிக்கையுடையேன்.

1/7 B, அபிராமி நகர்
கூறைநாடு
மயிலாடுதுறை - 609 002.

அன்பன்
**இரா. செல்வக்கணபதி**
4-4-2001

## KAKAPUJANDAR

Kakapujandar was a savant well-known in North India. He professed himself that he will survive the Deluge. He was a sage who lived for all Ages having contact with great souls like Sri Rama - being their contemporary.

There is a Ramayana work that holds his name **'Pujanda Ramayana'** even to-day in the North. He was a soul blessed by **Lord Shiva**. When he lived in the form of a **Crow**, he was kissed and blessed by **Lord Shiva**.

He was rightly be named as the fore-father of **Nadi Horoscope** and he was well versed in the various fields like Horoscope, Mathematics, Architecture, Medicine and Magic. Even to-day he is worshipped in deep reverence by the **Devas**, thirty three crores in number.

He was esoterically initiated by **Lord Shiva** Himself-regarding the history of **Lord Rama** and then-only the out coming of **Ramayana** to the world.

He brought forth the greatness of **Rama** and **Shiva** alike to the humanity. He enjoyed the marital status, his wife named **Bagula Devi** and their son **Roma Rishi.**

Once worshipped, the devotees had the conjoined benediction of the **Trio** along with the Five Forces of the Universe, plus the benedictions the Nine planets.

He was a vetron in exposing and expressing the Dharmic Norms - that holds the humanity in the righteous path.

His Life History may be classified into five chapters or cantos.

And in the first chapter, we get informations that go to make the Life - study of this great sage- both in Hindi, Sanskrit and Tamil. Based on the light thrown, one can probe further into the details - in the following chapters.

In the second chapter, we are exposed to more knowledge with the help of the Book of **Thulasi Ramayana** that goes by the name **'Ram Charitha Manus'**. which explains the contents of Four Conversations between **a) Yagnawalkya - Bharatwaj b) Lord Shiva - Parvathi c) Lord Shiva - Kakapujandar** and **d) Kakapujandar - Garuda.**

The poets describe the Four Conversations as the four foot steps that is set to reach the holy water **Ram Charitha Manus.**

In the Peroration of **Uthara Canto** - We are briefed the Life of Kakapujandar in Four phases. The

life of the Savant is told to Parvathi by Lord **Shiva** Himself. In the Second Phase, we are explained how Kakapujandar gets the benediction of **Sri. Rama** and in the Third, Kakapujandar himself explains his Life to **Garuda** - the Divine Bird. In the fourth phase Kakapujandar clears all the doubts of **Garuda.**

The Conversation of **Garuda** - Kakapujanda is pregnant with the norms and essence of Dharmic codes and conduct. More over, it explains in detail the greatness and secrets of **Lord Vishnu** - and **Sri Rama.**

In the Third phase we are exposed to more details in Tamil and Sanskrit - the history of Kakapujandar. They are worth doing Research. **Yoga Vashista** is a Book - in which **Vashista** - expalains the sanctity and Sublleties of **Dharma to Sri Rama** There we have hints on the life of Kakapujandar - in the section called **Pujanda - Exponation.**

Pujanta explains the Secrecy of Long - living. He Says those who live long do not have sins (in the form of pearls) embedded in the twine of Avarishness. And those who live a cerene life with crystal like thoughts of purity - do not come under the 'looks' of Yama. Those who live a life of celebecy - with no attachments to the mundane - worldly Life - are also elegible for eternity. Here we have an account that Kakapujandar was born to a Crow Called **Chanda** and a female swan.

By way of answering the intricate questions of VASHISTA, Bujanta explains his experiences that are invigorating in many an - Ages. Pujanta says he had the rarest experience of seeing with his eyes - an Earth Sans - mountains, forests and trees. He says he knew the origin of the Sun and the Moon. - as well as the incoming of Indira, Upendra etc. He says he was the eye - witness to the Scene when **Hiranyatshan** - the Demon Carried away this Earth Clandestinely to the Abyss, - and that was redeemed by **Vishnu** in the form of the Supreme **Boar.**

I knew the fomation of seas, - and the churning of the sea of Milk - by Demons and Devas. Pujanda goes a step further by saying that **Vashista** - the son of Bhrahma - is in his eighth Birth. Vishnu is reborn Six times, - as **Parasuram** - the son of Renuka. He also said that **Lord Shiva** has destroyed twice the **Yagna** of Dhaksha and thirty times the **Tripura** (The three Castles of the Demons). He makes us feel astoni shed by saying that **Vishnu** in going to incarnate Eleventh time.

The life history of Pujanda was mentioned in Tamil by **Veerai Alavanthar** - in the Ninetynine Verses of the work **Gnanavasishtam.** We get some more hints in the book **Abithana Chintha Mani.** There we get an information, that the Holy Look of **Lord Shiva** made a couple of swans conceive. The pair of Swans laid 21 eggs, and the last to come out of the **Egg,** - was in the

form of a **Crow** - which was later known as Kakapujandar.

The Fourth phase-we get an account of the works of Pujanta. The Extensive work **"The Kavya of Kakapujanda" - Comprises** of 1000 Verses There we get elaborate infomations on Astrology, Medicine, Maths, Hypnotism, Black Magic, and the art of Converting low metal to High. It is said that he had close contact with 22 savants (or) **Siddhas.** This book is in the form of **Anthathi.**

We get valuable advice on married Life, and Dharmic Norms. There are two books by name **'Pujanda Upanishad'** and **Pujandar Kural** (16-Couplets).

The contents of Three Books by name **'Vaidya Vadha Yoga Gnanam', 'Vaidhya Vadha Sutra'** and **'Meignana Vilakkam'** - are dealt with elaborate Vividness in this Fourth phase.

We get elaborate details of the Life of Pujanda - in the Fifth phase. Those details could be found in the inscriptions of the temple (or) sepalchre that is devoted to **Kakapujandar.** That could be seen at the place called **Thirumalai Rayan Pattinam** enroute the **bus - route Karaikkal - Nagappattinam.**

A good soul by name **Narbavi Anandha Ambaji** has erected this temple to **Pujandar.** The great soul **Ambaji,** himself is a savant - well versed in the Arts of **Yoga,** Medicine, Astrology etc. He learnt those rare

Arts from many a sudus (or) **Sanyasins,** - travelling the length and bredth of this Country.

**Kakapujandar** was supposed to have incarnated in the star **Ayilyam** - in the Tamil month - **Panguni.** Corresponding **March.**

Memorial Celebrations are being Carried on in a grand scale, every month and year by the devotees of **Kakapujandar**. - in connection with his Birth star **Ayilyam.**

In the Fifth phase we are being told the salient benefits we beget by the worship in this temple. It virtually beggers description. The temple waxes in the direction of progress & growth - every now and then.

# 1. வரலாற்று மூலங்கள்

## ஞான பூமி

உலகநாடுகள் பலவற்றுள்ளும், நம் பாரத தேசத்திற்குத் தனித்த ஒரு பேரிடம் உண்டு. இங்கே தோன்றி வாழ்ந்திருந்த மகான்களும், இருடிகளும், ஞானிகளும், சித்தர்களும் கணக்கில் அடங்காத எண்ணிக்கையுடையவர்கள். இவர்கள் வழங்கிய ஆன்மிக ஒளியில் பாரத நாடு ஞானத்தில் தலைநின்றது. கேளிக்கை நாட்டம் மட்டுமே கொண்டு உலகவர்கள் தடம் மாறிச் சென்ற காலை, பாரதம் அர்த்தம் நிறைந்த ஆன்மிகநெறியில் தலைநிமிர்ந்து நின்றது. இந்த ஞானம் பாரத மக்களை நன்னெறியில் உய்க்கத் துணை செய்தது. அன்பும், அருளும் நிறைந்த பொருள் பொதிந்த மானுட வாழ்வு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாரதத்தில் பரவி நின்றது. வியப்போடு உலகவர்கள் பாரதத்தை ஒரு ஞானபூமியாகக் கண்டு மகிழ்ந்தனர்.

### மகரிஷி

விண்முட்ட எழுந்த மலைகளும், பரந்து விரிந்த கடல்களும், பெருக்கெடுத்து ஓடிய ஜீவ நதிகளும் வெறும் ஜடப் பொருள்களாக நில்லாமல், பாரதத்தில் ஞானக் குறியீடுகளாக விளங்கின. இங்கே தோன்றி வளர்ந்த ஞானத்தின் குறியீடுகளாக வேதங்களும், உபநிடதங்களும், இதிகாசங்களும் உலகவரை ஈர்த்தன. மனிதம் வேறு, இறைமை வேறு என்ற இரண்டு நிலை ஒழிந்து, இப்பனுவல்கள் இம்மையிலேயே மனிதனை இறைமை நிலை பெற வழிகாட்டி நின்றன. இவை விளைத்த ஞானத்தின் உச்சியில், மனிதம் இறைமையோடு கைகோத்து உலாவரத் தொடங்கியது. இயற்கை நியதிகளை வென்று மேம்பட, ஞானத்தை ஊன்று கோலாகக் கொண்டு, ஞானியர் பலர் உலகவரை வியப்பில் ஆழ்த்தினர். அத்தகு மகரிஷிகளில் ஒருவராக, காலத்தை வென்று வாழ்ந்த சித்த மூர்த்தியாக, வியப்பூட்டும் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திய ஞானியாக வாழ்ந்த பேரருளாளர் காகபுஜண்டர்.

### வாழ்வின் இரகசியம்

நரை, திரை, மூப்பு, மரணம் என்பனவற்றை வென்று மேம்பட வேண்டும் என்பதே மனித இனத்தின் நீண்ட ஆசை. ஆனால், மனித குலம் இன்று வரை இந்த முயற்சியில் வெற்றி பெறவில்லை. ஆனால், முயற்சிகள் தொடர்ந்து கொண்டே உள்ளன.

அட்டமாசித்திகளில் வல்லவர்களும், கூடு விட்டுக்கூடு பாயும் சித்தர்களும் கூட, பன்னூறு ஆண்டுகள் வாழ்ந்ததாக மட்டுமே வரலாறுகள் பேசுகின்றன. இருடிகள் சிலர், சில ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்ததாகக் கேட்கப்படுகிறது. பெரிய பெரிய மதங்களை நிறுவியவர்களும், அவதார புருடர்களாகச் சித்திரிக்கப் பெற்றவர்களும் கூட சில ஆண்டுகளில் மறைந்தே போயினர். இந்நிலையில், பல்லூழி களையும் கடந்து, பலயுகங்களையும் வென்று, கணக்கிட முடியாத ஆண்டுக் காலம் ஒருவர் உலகில் வாழ்ந்திருந்தார் என்றால், அவரை அறிந்து கொள்ள நம்முள் ஆர்வம் எழுதல் இயற்கையே. நம்முன் விரியும், அருளாளர் காகபுஜண்டர் வரலாறு நம்மை வியப்பில் ஆழ்த்தும் என்பது ஒரு தலை. காலம் என்ற கடவுள் தத்துவத்தை வென்று, பல்லூழிகளிலும் அழியாது, பல யுகங்களிலும் ஒருவர் வாழ்ந்திருந்தார் என்றால் அவரை, அவர் வரலாற்றை, அவரது வாழ்வின் இரகசியத்தை, மனித குலத்திற்கு ஆய்ந்து வெளிப்படுத்துவது நமது கடமையாக முன்னிற்கிறது.

## சித்தர் அல்லர்

இந்திய நாடு தழுவிய ஓர் அருளாளராக, வியப்பூட்டும் பல அனுபவங்களை அறிந்து அறிவிக்க வல்ல ஞானமூர்த்தியாக, சித்தாடல்கள் வல்ல ஓர் இருடியாக, அற்புத ஞானம் நிறைந்த உபதேசங்களை வழங்கிய குருமூர்த்திகளாகக் காகபுஜண்டர் திகழ்கிறார். வடபாரதத்தில் இவர் அறியப் பட்ட

அளவு, தென்னாட்டில் இவரை மக்கள் அறிந்திருக்க வில்லை. நவநாத சித்தர்களில் ஒருவராகவோ, பதினெண் சித்தர் கூட்டத்தில் ஒருவராகவோ இவர் குறிக்கப் பட்டிருக்கவில்லை. தென் இந்திய மொழி களிலோ, சிறப்பாகத் தமிழ்மொழியிலோ இவர் வரலாற்றை விரிவாகக் கூறும் நூல்கள் பலவாக இல்லை. நாடி சோதிட வல்லார் சிலரும், சித்தர் ஆய்வில் தலைப் பட்டவர்களுள் மிகச் சிலரும் மட்டுமே தமிழ் நாட்டில் காகபுஜண்டரை ஓரளவு அறிந்துள்ளனர். இவர்கள் தரும் குறிப்புக்களைக் கொண்டு, ஒரு முழுமையான வரலாற்றைக் கண்டு காட்டுதல் இயலாதது.

## துளசி இராமாயணம்

காகபுஜண்டர் அருள் வரலாற்றை முழுமையாக அறிந்து தெளியத் துணை நிற்கும் அரிய நூல், இந்தி மொழியில் கோசுவாமி துளசிதாசரால் அருளிச் செய்யப் பெற்ற 'ஸ்ரீ ராம சரிதமாநஸம்' என்ற பெயரில் வழங்கும் துளசி இராமாயணமே யாகும். இதன் ஏழாவது உத்தர காண்டப் பகுதியில் காகபுஜண்டரின் அற்புதங்கள் நிறைந்த அருள் வரலாறுகளும், உலகவர்களை உய்விக்க வல்ல ஞான உபதேசங்களும் நிறைவாக இடம் பெற்றுள்ளன. இதில் குறிப்பிடப் படவேண்டிய செய்தி ஒன்று உண்டு. துளசி இராமாயணத்தின் மூலநூல் என்று பேசப்படும் வான்மிகி இராமாயணத்திலோ, தமிழில் கம்பரால் இயற்றப்பட்ட இராமகாதையிலோ காகபுஜண்டரைப்

பற்றிய எந்த ஒரு சிறு குறிப்பும் இடம் பெற்றிருக்க வில்லை. துளசிதாசர் தம் இராமாயணத்தை எழுத, 'புசுண்ட இராமாயணம்' என்ற ஒரு நூலையும் முன்மாதிரியாகக் கொண்டார் என்று ஒரு செய்தி அறியப்படுகிறது. எனவே, வடநாட்டில் புசுண்டர் இயற்றிய இராமாயணம் ஒன்று நிலவியிருந்ததாக அறிய வாய்ப்புள்ளது.

## ஞானவாசிட்டம்

வடமொழியில் 'ஞானவாசிட்டம்' என்ற ஒரு நூல் நிலவுகிறது. இந்நூல், இராமபிரானின் குலகுருவாகிய வசிட்ட முனிவரால், இராமபிரானுக்கு உபதேசிக்கப்பட்ட ஓர் ஆத்ம போத நூல் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இந்நூலில் பல அருளாளர்கள் வரலாறுகளை எடுத்துரைத்து, வசிட்டர் இராமபிரானுக்கு அறிவு கொளுத்தியதாகச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவ்வரலாறுகளுள் ஒன்றாகக் காகபுஜண்டர் வரலாறும் அமைகிறது. ஞானவாசிட்டத்தை ஸ்ரீ ஞானானந்த பாரதிய சுவாமிகள் என்பார் சுருக்கி உரைநடையில் மொழிபெயர்த்துள்ளார். அத்தியாயம் இருபதில் 'புசுண்ட உபாக்கியானம்' என இப்பகுதி இடம் பெற்றுள்ளது. முதலில் இவ்வரலாறு வசிட்டர்-இராமர் உரையாடல்களாகவும், தொடர்ந்து வசிட்டர்-காகபுஜண்டர் உரையாடல்களாகவும் அமைந்துள்ளது.

## புசுண்டன் கதை

தமிழ் மொழியில் காகபுஜண்டர் வரலாறு கூறும் ஒரு மொழிபெயர்ப்பு நூல் உள்ளது. 'ஞான வாசிட்ட அமல இராமாயணம்' என்ற பெயரில் வீரை ஆளவந்தார் என்ற முனிவர் ஒருவர், வடமொழி ஞான வாசிட்ட நூலைத் தமிழில் செய்யுள் யாப்பில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். இந்நூலுக்குத் திருநாகை அருணாசல சுவாமிகளின் முதன்மைச் சீடராகிய, பிறைசை அருணாசல சுவாமிகள் என்பார் உரை கண்டுள்ளார். இவ்வுரை, பதப்பொருள், பொழிப்புரை, தாற்பரியம் என்ற மூன்று பகுதிகளை ஒவ்வொரு பாடலுக்கும் கொண்டதாக விரிகிறது. இந்நூல் கி.பி. 1890 இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதனுள் 29 ஆவது கதையாகக் காகபுஜண்டர் வரலாறு 'புசுண்டன் கதை' என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது. இக்கதை 99 பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றை வடமொழி ஞானவாசிட்டத்தின் செய்யுள் நடையிலான மொழிபெயர்ப்பென்றே கூறலாம். நடைநலமும், தத்துவச் செறிவும், அறிவூட்டல்களும் நூலுள் நிறைந்து கிடக்கின்றன.

## அபிதான சிந்தாமணி

தமிழின் முதற் கலைக் களஞ்சியமாகக் கருதத்தக்கது ஆ. சிங்காரவேலு முதலியார் தொகுத்து வழங்கிய அபிதான சிந்தாமணி என்ற அரியநூல். 1910

ஆம் ஆண்டு இந்நூல் வெளிவந்தது. இந்நூலில் காகபுஜண்டரைப் பற்றிய இரண்டு குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று சித்தர் வழக்கை ஒட்டி எழுதப்பட்டுள்ளது. பிறிதொன்று ஞானவாசிட்டக் கருத்தைத் தழுவியதாக அமைந்துள்ளது. இவர், காகபுஜண்டரின் குமாரராக உரோமரிஷி என்பாரைக் குறித்துள்ளார். மிகச் சுருக்கமாகவே இந்நூல் காகபுஜண்டர் வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவற்றை வழங்கியுள்ளது. இந்நூலுள் 'புசுண்டர்' என்ற தலைப்பில் மேற்குறித்த வரலாறுகள் இடம் பெறச் செய்யப்பெற்றுள்ளன.

## ஞானப்பாடல்கள்

த. கோவேந்தன் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, சென்னை பூம்புகார் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள சித்தர் பாடல்கள் என்ற தொகுப்பில், 'ஞானப் பாடல்கள்' என்ற தலைப்பில் 'காகபுசண்டர் பாடல்கள்' என்ற உள் தலைப்பிட்டுச் சிலபாடல்கள் இடம் பெறச்செய்யப் பெற்றுள்ளன. முதல் பகுதியில் 79 பாடல்களும், இரண்டாம் பகுதியில் 65 பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இவையாவும் ஆசிரியவிருத்த யாப்பில் உள்ளன. இறுதியில் 'குறள் வெண்பா' என்ற தலைப்பில் 16 குறள்கள் தரப்பட்டுள்ளன. காகபுஜண்டர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் ஒன்றும் நூலில் இடம் பெற்றிருக்கவில்லை. இந்நூலின் முதற்பதிப்பு கி.பி. 1976 இல் வெளிவந்துள்ளது.

## பெருநூல்காவியம்

சென்னை தாமரை நூலகத்தார் 'காகபுசுண்டர் பெருநூல் காவியம் - 1000' என்ற தலைப்பில் எஸ்.பி.இராமச்சந்திரன் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கி.பி. 1992 இல் ஒரு நூலை வெளியிட்டு உள்ளனர். பதிப்புரையில் எஸ்.பி.இராமச்சந்திரன், காகபுஜண்டரை நேரில் கண்டு,துறவு பூண்ட தருமலிங்க சுவாமிகள் என்பவரின் அனுபவ மொழிகளை, அவர் கூற்றாகவே இடம் பெறச் செய்துள்ளார். பெரம்பூர் அநுமந்தன் என்ற அன்பர்வழங்கிய நூல் பிரதிகளையே தான் இந்நூலாக வெளியிட்டிருப்பதாகக் குறித்துள்ளார். இந்நூலில் 1000 ஆசிரிய விருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. பதிப்பாசிரியர் பல்வேறு உள்தலைப்புக்களைக் கொடுத்து, அவற்றின் கீழே பாடல்களைப் பதிப்பித்துள்ளார். ஆயிரம் பாடல்களும் 95 உள் தலைப்புக்களில் பிரித்தமைக்கப்பட்டுள்ளன. நூலின் நிறைவில், தர்மலிங்க சுவாமிகள் சில பாடல்களுக்கு வரைந்துள்ள உரைக்குறிப்புக்கள் அச்சிடப்பட்டுள்ளன. கி.பி. 1999 இல் இதே நூல் மீண்டும் வெளியிடப் பட்டுள்ளது. இதில் ஈரோடு குழந்தை சாமிக் கவுண்டர் என்பவர் எழுதிய, இந்நூல் பற்றிய 'ஆய்வுரை' என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இனத்தவர்?

'ஞான ஒளிவீசும் திருவண்ணாமலை' என்ற நூலின் ஆசிரியர், ஸ்ரீதேவநாத சுவாமிகள் பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும், என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். சென்னை நர்மதா பதிப்பகத்தார் கி.பி. 1998 இல் இந்நூலை வெளியிட்டுள்ளனர். இந்நூலில் காகபுஜண்டர் பற்றிய சிறுகுறிப்பு இடம் பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் காகபுஜண்டரை உரோமரிஷியின் ஆசிரியராகக் குறிக்கிறார். இவரைத் தமிழ் இனத்தவர் என்று வேறு குறிப்பிடுகிறார். காகபுஜண்டரை எந்த அடிப்படையில் இந்நூலாசிரியர் தமிழ் இனத்தார் என்று கண்டு தெளிந்தார் என்பது விளங்கவில்லை. காகபுஜண்டர் இயற்றியனவாக இவர், 'வைத்திய வாத யோகஞானம்', 'வைத்திய வாத யோக சூத்திரம்', 'மெய்ஞானவிளக்கம்' என்ற நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல்களின் அமைப்பு, அளவு, உள்ளீடு முதலியனவற்றைப் பற்றி இவர் குறிப்பேதும் தந்திலர். மேற்குறித்த மூன்று நூல்களும் அச்சில் வெளி வந்துள்ளனவாகத் தெரிகிறது.

## முரண்பாடுகள்

மேற்குறித்த, வரலாற்று ஆய்வுக்கு உதவும் தரவுகளின் துணைக் கொண்டு, தமிழ்மொழியில் காகபுஜண்டரின் விரிவான வரலாற்றை, முதன் முதலாகக் கண்டு காட்டும் முயற்சி இங்கே

மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்றை ஒழுங்கு செய்து எழுதுவதற்கு, தரவுகளின் இடையே காணப்படும் முரண்பாடுகள் தடைகளாக அமைகின்றன. இடையிடையே எழும் ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்குரிய, பிறவகை ஆதாரங்கள் கிடைத்தில. இயன்றவரை ஐயங்களைத் தெளிவாக்கும் முயற்சி, கிடைத்திருக்கும் வரலாற்று மூலங்களின் துணையோடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. சித்தர் நூல் பயிற்சி உடையாரும். பன்மொழி அறிஞர்களும் கூட, காகபுஜண்டர் வரலாறு குறித்து அறிந்திலாமையால், முடிபுகளைச் சரிபார்த்துக் கொள்வது கடினமாகவே நிற்கிறது.

## பெயர் ஆய்வு

காகபுஜண்டர் பெயரை மேற்குறித்த நூல்கள் பலவாறாக வழங்குகின்றன. புசண்டர், புசுண்டி, புசுண்டன் என்பன குறிக்கத்தக்கன. காகம் என்ற சொல்லும், புஜண்டன் என்ற சொல்லும் இணைந்து காகபுஜண்டர் என வந்துள்ளது. தமிழில் வழங்கும் காக்கை என்ற சொல் சமஸ்கிருதத்திலும், வட இந்திய மொழிகள் பலவற்றிலும் காகம் என்றே வழங்கப்படுகிறது. தமிழில் வழங்கும் சமயநூல்கள் மற்றும் சித்தர் இலக்கியங்களில், காகம் என்ற சொல்லும் எடுத்தாளப்பட்டுள்ளது. காகம் என்ற வடசொல்லுக்கு, அவிட்டம், அவிட்ட நாள், கீரி முதலிய வேறு பொருள்களும் அகராதிகளில் காணப்படுகின்றன.

## புஜங்கம்

'புஜங்கம்' என்ற சொல் பாம்பு என்ற பொருள் தரும் ஒரு வடசொல். இச்சொல் புசங்கம், புசங்கமம் என்றும் ஆட்சி பெற்றுள்ளது. பாம்பு என்ற பொருள் தரும் இச் சொல் திரிந்து புசண்டர், புஜண்டர் என உயர்திணைப் பெயராக அமைந்திருக்கலாம். இச்சொற்களைப் பற்றி நின்றே மேற்குறித்த நூல்கள் புசுண்டயோகியைக் காக்கை வடிவினராகவும், பாம்பின் வடிவினராகவும் சித்திரித்துள்ளன.

## காகம் - பலதொடர்

இந்திய இலக்கியங்களுள் காகம் என்ற முதற் சொல்லுடன் இணைந்து வரும் பல பெயர்ச்சொற்கள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. பல சொற்களில் காகம் என்பது காக்கையைக் குறிக்காது வேறுவேறு பொருள் தந்து நிற்கிறது. எள்ளுக்குக் காககுடம் என்பது ஒரு சொல்லாட்சி. காகதாளி என்பது கருங்காலி மரத்தைக் குறித்து வருகிறது. கஞ்சாப் பூண்டு குறித்து வரும் ஒரு சொல் காகதுண்டி எனப்படுகிறது. காகநதி என்பது காவிரிப் பூம்பட்டினத்தின் பெயர்களுள் ஒன்று. வேம்பு மற்றும் எலுமிச்சை மரங்களுக்குப் பொதுப் பெயராய்க் காகபலம் என்ற சொல் நிற்கிறது. காகரூடி என்பது பன்றியைக் குறித்து வருகிறது. இவற்றிலெல்லாம் முன்னிற்கும் காகம் என்ற சொல் 'காக்கை'யைக் குறித்து வரவில்லை என்பது உற்று நோக்கத் தக்கது.

**நாகம் - ஓர் ஆய்வு**

பாம்பு என்ற பொருள்தரும் 'நாகம்' என்ற சொல் தமிழ் மக்களிடையே பெயர்ச்சொல்லாகப் பலவாறு வழங்கப்பட்டுள்ளதைப் பலரும் அறிவர். நாகநாதன், நாகஜோதி, நாகம்மை, நாகராஜன், நாக பூஷணம், நாகலிங்கம் என்பன சில எடுத்துக்காட்டுக்கள். இவற்றை ஆராயுமிடத்து இம்முனிவரரை பாம்பாகவும், காகவடிவிலும் வாழ்ந்தவர் என்று கதை நடத்தும் மேற்குறித்த நூல்கள், தாம் உணர்ந்த சொற்பொருளுக்கு ஏற்ப, இவர் வரலாற்றை விரித்திருக்கக்கூடுமோஎன்று எண்ணவேண்டியுள்ளது.

மலையாள நாட்டில், திருவனந்தபுரத்தில் வாழ்ந்திருந்த அரசர்களுக்கு அவர்கள் பிறந்த நட்சத்திரங்கள் மேலேயே பெயரிட்டு வழங்கும் வழக்கு நிலவியிருந்துள்ளது. விசாகத் திருநாள், சுவாதித் திருநாள் என இவ்வாறு பெயர் அமைதல் உண்டு. தமிழ் நாட்டிலும் பரணீதரன், கார்த்திகேயன், கிருத்திகா, ரோகிணி, ரேவதி எனப் பிறந்த விண்மீன்களால் பெயர்கள் சூட்டப்படுதலைக் காணமுடிகிறது. சிவபெருமானை ஆதிரையான் என்றும், முருகனை விசாகன் என்றும் நூல்கள் குறிக்கின்றன.

**கலங்கரை விளக்கம்**

எனவே, காகம் என்ற சொல் தரும் அவிட்ட நாள் என்ற பொருளை முன்னிறுத்தி, அவிட்ட நாளில்

அவதரித்த ஒரு பெரிய மகரிஷி என்று கூட இவர் பெயரை விளங்கிக் கொள்ளவும் இடமுள்ளது. பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும் என்ற நூலில் ஸ்ரீ தேவநாத சுவாமிகள் 'பிரளய காலத்தில் அவிட்ட நட்சத்திரப் பதவியில் வாழ்ந்தவராதலின் இப்பெயர் வந்தது' என்று இவர் பெயர்க்காரணத்தைக் குறித்திருப்பது எண்ணத் தக்கது. நாடி நூல்களில் இவர் பங்குனி ஆயில்ய நாளில் அவதரித்தவர் என்ற குறிப்புக் காணப்படுவதாகக் கூறுகின்றனர். சீத்தலைச் சாத்தனார் என்ற தொடரில் உள்ள 'சீத்தலை' என்பதை, ஓர் ஊர்ப்பெயராக அறியாதவர்கள், சீழ்தலை என்று பிறழ உணர்ந்து, எழுத்தாணியால் குத்திக் கொண்டு மண்டையில் சீழ் பிடித்திருந்தவர் என்று விளக்கம் தந்த தமிழ்ப் புலவர்கள் சிலரும் நினைவிற்கு வருகின்றனர். பெயர்க்காரணம் யாதாக இருந்தாலும் இம் மகரிஷியின் உபதேசங்களும் அவர் வாக்கில் எழுந்ததாகக் கருதப்படும் நூல்களும் மனித குலத்திற்குக் கலங்கரை விளக்கங்களாக நின்று வழிகாட்டி நிற்றலை மறுத்தல் இயலாது.

# 2. துளசி இராமாயணம்

## இராமசரிதமானஸ்

காகபுஜண்டரின் வரலாற்றையும், ஆன்மிக, அறநெறி உபதேசங்களையும் விரிவாக அறிந்து கொள்வதற்கு இந்திமொழியில் உள்ள துளசி இராமாயணமே பெருந்துணையாக அமைகிறது. கி.பி.1576 இல் இந்நூல் துளசிதாசரால் எழுதி முடிக்கப் பெற்றது. துளசி தாசர் இராமனது வரலாற்றை, தூய்மை மிக்க வடநாட்டு புனித நீர் நிலைகளுள் ஒன்றாகிய 'மானசரோவர்' ஏரியாக உருவகித்துள்ளார். அவர், ஏரிநீர், நீராடுவாரைப் புறந்தூய்மை செய்வதுபோல், தமது இராமசரிதம் கற்பாரின் அகத்தைத் தூய்மைப் படுத்த வல்லது என்ற கருத்தில், துளசிதாசர் தம் நூலுக்கு 'இராம சரிதமானஸ்' என்று பெயர் சூட்டினார். துளசிதாசருக்கு அழியாப் புகழை இந்நூல் தேடித் தந்தது. இந்தி மொழி பேசும் மக்கள் இந்நூலை வேதநூல்களுக்கு ஒப்பாகக் கருதிப் போற்றி வருகின்றனர். இந்நூல் ஏழு சோபனங்களைக்

கொண்டுள்ளது. ஏரி என்ற உருவகத்திற்கு ஏற்ப உட்பிரிவுகளை இவர் 'சோபனங்கள்' அதாவது, படிக்கட்டுகள் என்ற பெயரில் பகுத்துள்ளார்.

## ஒற்றுமை அரண்

ஆராய்ச்சியாளர்கள் துளசி இராமாயணத்தை, இந்து மதத்தின் உண்மையான வடிவத்தை வெளிப்படுத்தும் ஒரு நூலாகவே கண்டு காட்டி யுள்ளனர். சமய நூல் என்ற எல்லையைக் கடந்து, இந்நூல், சமயம் மற்றும் சமூகத்திற்கிடையே நிலவ வேண்டிய உறவு முறைகளை விரிவாக ஆராய்கிறது. ஆட்சியாளர்-குடிமக்கள் உறவு, மூத்தோர்-இளையோர் இணக்கம், பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையிலான உறவின் எல்லைகள், அண்ணன்-தம்பியர்; ஆசிரியர்-மாணவர் உறவுகள் முதலியனவற்றை எல்லாம் துளசி இராமாயணம் அழுத்தமாக எடுத்துரைக்கிறது. இந்து சமயம் ஏற்றுப்போற்றும் அனைத்துக் கடவுளர் களையும், இந்து சமயத்தில் இடம் பெற்றுள்ள பல்வேறு உட்சமயங்களின் கோட்பாடுகளையும் துளசிதாசர் வேறுபாடுகள் இன்றி ஏற்றுப் போற்றுகிறார். நால்வகை வருண பேதங்களையும் அவர் ஏற்கத் தவறவில்லை. சைவ-வைணவ பேதம் ஏதும் அவரிடம் காணப்படவில்லை. முழு முதல் இராமனைச் சிவன் வழிபடுவதாகவும், இராமா வதாரத்தில் இராமன்-சிவனை வழிபடுவதாகவும் சமரசம் காட்டுகிறார். தென்னாட்டில் நிலவிய சைவ-வைணவ பேதங்கள், வடநாட்டில் காணப்

படாமைக்குத் துளசி இராமாயணம் அரணாக நின்றுள்ளது.

## பரம்பரை

துளசிதாசர் தாம் எழுதிய இராமகாதையை முதன்முதல் சிவபெருமானே இயற்றியதாகக் குறிக்கிறார். இராமன் அருள் வரலாற்றை சிவபெருமான் பார்வதிதேவிக்கு எடுத்துரைத்தார். உலக மக்களுக்கு இக்கதை சென்று சேரவேண்டுமென்று திருவுளம் கொண்ட சிவபெருமான் அதே கதையைக் காகபுஜண்டருக்கு விரித்துரைத்தார். காகபுஜண்டர் இராமர் வரலாற்றை யாக்ஞவல்கியருக்கு அறிவுறுத்தினார். அவர் இக்கதையைப் பரத்துவாச முனிவருக்கு விளக்கியுரைத்தார். இவ்வாறு வழி வழியாக வரும் இராமன் வரலாற்றைத் துளசி தாசர் தம் குருநாதரிடத்தில் சூகர க்ஷேத்திரத்தில் கேட்டறிந்ததாகத் தம் நூலுள் கதை வந்த வரலாற்றை விரித்துரைக்கிறார். எனவே, இக்கதை உலகவர்களுக்குக் காகபுஜண்டர் வழியாகவே அறிய வந்தது என்பது குறிக்கத் தக்கதாகிறது.

## நான்கு உரையாடல்கள்

துளசி இராமாயணத்தை ஒருவாறு ஆராய்ந்தால் இந்நூல், தலையாய நான்கு உரையாடல்களுக்குள் அடங்குவதை உணர முடிகிறது. வரலாற்றுப் போக்கு வேறுபட அமைந்தாலும், துளசி இராமாயணக்

கதைப்போக்கில் முதல் உரையாடல் யாக்ஞ வல்கியர்-பரத்துவாசர் இடையே நிகழ்ந்ததாகக் கொள்ளலாம். இரண்டாவது உரையாடல் சிவ பெருமானுக்கும்-பார்வதிக்கும் இடையே நிகழ்ந்தது. மூன்றாவது உரையாடல் சிவபெருமானுக்கும்-காகபுஜண்டருக்கும் இடையே நிகழ்கிறது. நான்காவது உரையாடல் காகபுஜண்டருக்கும்-கருடனுக்கும் இடையே நிகழ்வது. இவ்வுரையாடல்களை 'இராம சரித மானஸ்' என்ற அழகிய நீர் நிலையின் நான்கு படித்துறைகளாக இந்திமொழி அறிஞர்கள் கருதியுள்ளார்கள். துளசி இராமாயணத்தில் காகபுஜண்டருக்கு உரிய சிறப்பிடத்தை மேற்குறித்த நான்கு உரையாடல்கள் நிறுவிக்காட்டுகின்றன.

**உத்தரகாண்டம்**

துளசி இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தில்தான் காகபுஜண்டரைப் பற்றிய விரிவான செய்திகள் இடம் பெற்றுள்ளன. கதை நிகழ்வுகள் இப்பகுதியில் உரையாடல்களாகவும், வினா-விடைகளாகவுமே நடையிடுகின்றன. துளசி இராமாயணத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து வழங்கியோர் பலர். தி. வேங்கடகிருஷ்ண ஐயங்கார் துளசி இராமாயணத்தை மொழி பெயர்த்து முழுமையாகத் தாராது அதன் சுருக்கத்தை மட்டும் வெளியிட்டுள்ளார். சுவாமிநாத ஆத்ரேயர் என்பவர் துளசி இராமாயண சுலோகங்களைத் தமிழ் எழுத்துக்களில் தந்து, ஒவ்வொரு சுலோகத்தின் தமிழ்

மொழி பெயர்ப்பையும் அவ்வவற்றின் கீழே வழங்கியுள்ளார். கி.பி. 1951 இல் வெளிவந்த 'கல்யாண கல்பதரு' என்ற துளசி இராமாயண ஆங்கில மொழி பெயர்ப்பு ஏடு ஒன்று துளசி இராமாயணத்தைப் புரிந்து கொள்ளத் துணை செய்கிறது. மேற்குறித்த மொழி பெயர்ப்புகளின் அடிப்படையிலேயே காகபுஜண்டர் வரலாற்றைத் தமிழில் தருவது சாத்தியமாயிற்று.

## சிவன் உரைத்த கதை

மல்லிகைப் பூவையும், சந்திரனையும் ஒத்த திருமேனியை உடையவரும், பார்வதி தேவியுடன் விளையாடி மகிழ்பவரும், மன்மதனை எரித்தவரும், எளியாரிடம் இரக்கம் காட்டுபவரும், கருணைக் கடலானவரும் ஆகிய சிவபெருமான் ஒரு முறை கயிலாய மலையில் தனித்து அமர்ந்திருந்தார். யாருடைய அருள் துணை இல்லாது சித்தர்களால் கூடத் தம் இதயத்தில் வீற்றிருக்கும் கடவுளைப் பார்க்க இயலாதோ, அத்தகைய பொறுப்புணர்வும், நன்னம்பிக்கையும் உடையவரான உமாதேவியார் சிவபெருமான் அருகில் வந்து அமர்ந்தார். அவரை வணங்கி, உமாதேவியார் இராமனின் திருக்கதையை விரித்துரைக்குமாறு வேண்டினார். சிவபெருமானும் உளம் மகிழ்ந்து ஒருகாலை, காகபுஜண்டர் கருடனுக்குச் சொன்ன இராமன் கதையை, அவ்வாறே, உமா தேவியார் உளம் மகிழுமாறு விரித்துரைத்தார். உமையே! இராமனின் சரிதங்கள் இவை மட்டுமன்று!

பலவுண்டு! வேதங்களாலும், கலைமகளாலும் கூட இராமன் அருள் வரலாற்றை முழுமையாக விரித்துரைக்க இயலாது என்று கூறினார்.

## இராமன் பெருமை

இராமபிரான் மேலானவர். எல்லையற்ற அவர் ஆற்றல்கள் அளவிட இயலாதன. அவர் கல்யாண குணங்களும் அவ்வாறானவை. அவருடைய அவதாரங்களும், திருவிளையாடல்களும், திரு நாமங்களும் கணக்கில் அடங்குவன அன்று. நீர்த்துளிகளையும், புழுதி அணுக்களையும் கூட எண்ணிவிடக் கூடும். இராமனின் சரித்திரத்தை முற்றாக உரைத்தல் இயலாது. இராமன் வரலாறு இறைவன் திருவடிப்பேறு நல்கவல்லது. இவ்வரலாற்றைக் கேட்பதால், கேட்பவர் நெஞ்சில் பக்தி வைராக்கியம் பிறக்கும். இராமனின் சில குணங்களை மட்டும் நான் உனக்கு இப்போது எடுத்துரைத்தேன். மேலும் நீ அறிந்து கொள்ள விரும்பினால் அவற்றை நீ கேட்கலாம் என்று சிவபெருமான் உமையம்மையாரிடம் இராமன் பெருமைகளை விரித்துரைத்தார்.

## பேரின்பப்பெட்டகம்

உமையம்மை உள்ளம் இராமன் வரலாறு கேட்டு நிறைந்தது. இக்கதை கேட்க நான் கொடுத்து வைத்திருக்கவேண்டும்! நான் பெரும்பேறு பெற்றவளானேன்! இக்கதை பிறப்பு இறப்பு என்ற

துன்பத்தை நீக்கவல்லது. உண்மையும், அறிவும், ஆனந்தமும் ஆகிய இராமன் மாண்புகளை உணர்ந்தேன்! என் உள்ளத்தில் இருந்த மோகம் அகன்றது! இராமன் வரலாறு போதும் என்ற மனநிறைவைத் தாராது! இராமன் குணங்களை ஜீவன் முக்தர்களும் விரும்பிக் கேட்பார்கள்! வாழ்க்கை என்ற பெருங்கடலைக் கடக்க இராமன் கதை ஒரு கப்பலாக முன்னிற்கிறது. திருமாலின் இவ்வவதாரத் திருக்கதை சிற்றின்ப நாட்டமுடையோருக்கும் கூட பேரின்பம் அளிக்கவல்லது. தங்கள் வாயிலாக இராமன் வரலாற்றைக் கேட்டு நான் இன்பம் அடைந்தேன் என்று கூறி, உமையம்மை தம் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

**உமையவள் வினா**

காகபுஜண்ட முனிவர், ஒரு முறை கருடனுக்கு உரைத்த அதே கதையைத்தான் உமையே நான் உனக்கு இப்போது கூறினேன் என்று சிவபெருமான் உரைத்தார். அதனைக் கேட்ட உமையம்மையார், காக்கை வடிவம் பெற்றிருந்தும் காகபுஜண்டரிடம் வைராக்கியம், ஞானம், பேரறிவு முதலியன நிறைந்திருந்தனவே அவை எவ்வாறு அமைந்தன? இராமனுடைய திருவடிகளில் பற்றும், இராமபக்தியும் அவருள்ளத்தே தோன்றியிருந்தமை எவ்வாறு? ஆயிரத்தில் ஒருவர் மட்டுமே உலகத்தில் அறநெறியில் நிற்பர். கோடியில் ஒருவரே சிற்றின்ப வேட்கையை விடுத்து வைராக்கியத்தில் தலை நிற்பார்.

கோடிவைராக்கிய சாலிகளில் ஒருவரே உண்மை அறிவு பெற்றிருப்பார். கோடி ஞானிகளில் ஒருவர் மட்டுமே ஜீவன் முக்தராகத் திகழ்வார் என்றெல்லாம் வேதங்கள் எடுத்துரைக்கின்றனவே! உலகத்தில் ஜீவன் முக்தர் அரியர். ஆயிரம் ஜீவன் முக்தர்களில் கூட மேலான பரம்பொருளிடம் உண்மை அன்பு கொண்ட பெரியோர் இருப்பதில்லை! அவருள்ளும் மதமாற்சரியங்களில் நீங்கி, மாயையை விட்டொழித்து, இராமபக்தியில் ஊன்றி நிற்கும் பெரியோரைக் காண்டல் அரிது. அப்படி இருக்கையில் ஒரு காகம் உண்மையான இராமபக்தியில் தலை நிற்பது எப்படிச் சாத்தியமாயிற்று? இறைவனே இவற்றை எல்லாம் தாங்கள் விளக்கியருளவேண்டும் என்று உமையம்மை சிவபிரானிடம் விண்ணப்பித்தார்.

## ஐயங்கள் பல

சிவபெருமான் விடை பகர முற்படுவதற்கு முன்பாக, உமையம்மையார் காகபுஜண்டரைப் பற்றிய தன் ஐயங்கள் பலவற்றையும் அடுக்கடுக்காக எடுத்துரைக்கத் தொடங்கினார்!

இராமனிடம் பக்தி பூண்ட, ஞானவைராக்கியம் உடையவரும், குணக்குன்றாகத் திகழ்பவரும், மதிநலம் மிக்கவருமான புஜண்ட முனிவர் காக்கை வடிவம் பெற்றது ஏன்?

அந்தக்காகம் இராமனின் தூய்மையும், அருமையும் மிக்கதான கதையை எங்கே அறிந்தது?

தாங்கள் இக்கதையைக் காகபுஜண்டரிடம் எவ்விதம் கேட்டீர்கள்?

ஞானத்தில் சிறந்தவரும், நற்குணங்களின் நிறைகுடமாகத் திகழ்பவரும், நாராயண மூர்த்தியின் அணுக்கத் தொண்டரும், அவருடைய வாகனமாகத் திகழ்பவருமாகிய கருடன், முனிவர்களிடம் கேட்டறிய முற்படாது, இராமன் வரலாற்றை ஏன் போய்க், காக்கையிடம் கேட்க வேண்டும்?

## சிவன் கதை கேட்ட வரலாறு

அடுக்கடுக்காக உமையம்மை வெளிப்படுத்திய ஐயங்களைக் கேட்டு, சிவபெருமான் உள்ளம் மகிழ்ந்தார். உமையம்மையைப் பலவாறு பாராட்டினார். முதன் முதலாகச் சிவபெருமான் தாம் காகபுஜண்டரைச் சந்தித்துக் கதை கேட்ட வரலாற்றை எடுத்துரைக்கத் தொடங்கினார்.

## தட்சயாகம்

உமையே! அழகிய கண்களை உடையவளே! பிறவி என்ற அச்சத்தை நீக்கவல்ல இராமன் வரலாற்றை நான் எங்கே, யாரிடம் கேட்டேன் என்பதை உனக்கு எடுத்துரைக்கிறேன். ஒரு முறை நீ தட்சன் மகளாகப் பிறந்தாய். அக்காலை உனக்கு 'சதி' என்பது பெயர். தட்சன் ஆணவம் கொண்டு என்னை அவமதிக்க வேண்டி யாகம் ஒன்றைச் செய்தான். என் சொல்கேளாது நீ சென்று உன் தந்தை தட்சனால்

அவமானப் படுத்தப் பட்டாய். நீ சினந்து உன் உயிரை மாய்த்துக் கொண்டாய்! என் அடியவர்களால் தட்சன் யாகம் அழிக்கப்பெற்றது. நான் உன்பிரிவால் பெரிதும் கவலை அடைந்தேன். என் துன்பம் நீங்க வேண்டி, நான் மனஉறுதியுடன், அழகிய காடுகள், ஜீவநதிக்கரைகள், இனிய குளங்களின் பக்கங்களில் எல்லாம் சுற்றித் திரிந்தேன்.

## முதற் காட்சி

என் பயணம் வடக்கில் நீண்டது. மேருமலை சார்ந்தேன். மேலும் வடக்குத் திசை நோக்கி நடந்தேன். அங்கே அழகிய எழில் நிறைந்த ஒரு நீலமலையினைக் கண்டேன். பொன்மயமான சிகரங்கள் அதில் நிறைந்திருந்தன. அவற்றில் நான்கு மலை முகடுகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவை ஒவ்வொன்றின் உச்சியிலும் மிகப்பெரிய ஆலமரம், பலாமரம், மாமரம், அரசமரம் முதலியன தழைத்து நின்றன. அவற்றின் முகடுகளில் தடாகங்கள் இருந்தன. அவற்றின் படிக்கட்டுகள் இரத்தின மயமாகமின்னின. தடாக நீர் தூய்மையும், அழகும் மிக்கதாக இருந்தது. பல வண்ணத் தாமரைகள் பூத்துக்குலுங்கின. அதில் வாழும் அன்னங்கள் இனிய குரலெடுத்துக் கூவி நின்றன. வண்டுகள் ரீங்காரமிட்டு மகிழ்ந்தன. அந்த அழகிய நீலமலையில் நான் காகபுஜண்டரைக் கண்டேன். கற்ப கால முடிவிலும் அவருக்கு மரணம் என்பதே இல்லை. மாயையின் வெளிப்பாடுகளான தீயகுணங்கள், மோகம், காமம்,

குறையறிவு முதலியன அவர் வாழ்ந்த மலையருகில் நெருங்க முடியாதனவாயின. அங்கே காகவடிவத்தில் நின்று அம்முனிவர் திருமாலை வழிபட்டு மகிழ்கிறார்.

**ஹரிகதை**

காகபுஜண்டர் அங்குள்ள அரசமரத்தடியில் தியானம் செய்கிறார். பலாமரத்தடியில் ஜபங்களையும், யாகங்களையும் செய்கிறார். மாமர நிழலில் மானசீக பூசை நிகழ்த்துகிறார். ஆலமரத்தடியில் அமர்ந்து ஹரிபஜனை செய்வதோடு, ஹரிகதைகளை எடுத்துரைக்கிறார். இராமன் அருள் வரலாற்றை இனிய இசையில் பாடி மகிழ்கிறார். அவ்விடத்திற்கு நான்கு திசைகளிலிருந்தும் பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து அமர்ந்து, காகபுஜண்டர் விரித்துரைக்கும் ஹரிகதையைக் கேட்டு மகிழும். தூயமதி படைத்த அன்னப் பறவைகள் இராமன் கதை கேட்க அங்கே வந்து அமரும். உமையே நான் அங்கே சென்ற போது இவ்வற்புதக் காட்சியைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். நானும் காகபுஜண்டரிடம் இராமசரிதம் கேட்கவிரும்பி, ஓர் அன்னத்தின் வடிவத்தை எடுத்துக்கொண்டு, பறவைகளோடு பறவைகளாக அமர்ந்து இராமன் வரலாற்றைக் கேட்டேன். சில காலம் அங்கே தங்கியிருந்து விட்டு இரகுநாதனின் குண விசேடங்களில் மகிழ்ந்து, பின்னர்க் கயிலாயம்

திரும்பினேன். உமையம்மை சிவபெருமான் உரைத்த செய்திகளைக் கேட்டு வியப்பில் ஆழ்ந்தார்.

## ஐயநீக்கம்

அம்மை, முன்னர்த் தன்னிடம் வினவிய ஐயங்களைச் சிவபெருமான் நினைவு கூர்ந்தார். திருமாலின் வாகனமாகத் திகழும் கருடன், முனிவர்களை விடுத்துக் காகபுஜண்டரிடம், காகவடிவில் இருந்தவரிடம் சென்று இராமசரிதம் கேட்டமை எதனால் என்று அம்மை முன் எழுப்பிய ஐயத்தைச் சிவபெருமான் நீக்கியருள விரும்பினார்.

## இலக்கிய முடிச்சுக்கள்

இதிகாசங்களிலும், தொல் இலக்கியங்களிலும் இன்று வரை விடைகாணப்படாத சில முடிச்சுக்கள் இடம் பெற்றிருப்பதை நாம் அறிகிறோம். வாதப்பிரதிவாதங்களால் முடிபு காண இயலாத இவை, மக்களை இலக்கியங்கள் பால் ஈர்க்கும் உத்தியாகவே காணப்படுகின்றன. இராமன் வாலியை ஏன் மறைந்து நின்று கொன்றான்? இச்செயல் சரியா? தவறா? இன்று வரை வாசகர்கள் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. பரம்பொருள் இராமன்! அகலிகையைக் குற்றமற்றவளாக ஏற்று வாழவைக்கிறான்! ஆனால் சீதையைத் தீக்குளிக்க எவ்வாறு உடன்பட்டான்? இன்னும் இராமாயணவாசகர்கள் விடை தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்! சூர்ப்பணகை நெஞ்சில் காமம்

எழுமாறு இராமன் ஏன் உரையாடினான் என்பதற்கு என்ன விடை கூறமுடியும். மகாபாரதத்திலும், சிலப்பதிகாரத்திலும், பெரிய புராணத்திலும் இத்தகைய முடிச்சுக்கள் நிறையவே காணப்படுகின்றன. அவற்றை எடுத்துக்காட்ட முனைந்தால் மற்றொன்று விரித்தல் என்ற குறை வந்து சேரும்.

## ஒரு முரண்பாடு

திருமாலின் தசாவதாரங்களுள் ஒன்று இராமாவதாரம். மண்ணுலகில் கோசலை திருவயிற்றில் அவன் தசரதன் திருமகனாக வந்து பிறக்கிறான். காப்பியப்போக்கில் அவன் கால் துகள் பட்டு அகலிகை சாபநீக்கம் பெறுகிறாள். சிவன் வில்லை சிறிதும் துன்பம் இன்றி அவனால் ஒடிக்க முடிகிறது. சபரியும், விராதனும் அவன் அருள் பெற்று வீடடைகின்றனர். இவற்றில் எல்லாம் கடவுளாகக் காணப்படும் இராமன், சீதை பிரிவில் துன்புற்று அழுகிறான். மாயமானிடம் ஏமாற்றமடைகிறான். நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சித்த தம்பி இலக்குவன் இறந்துவிட்டதாகக் கருதிக் கண்ணீர் சிந்துகிறான். இங்கெல்லாம் சராசரி மானுடனாக முன்னிற்கிறான்.

## கடவுளா? மனிதனா?

இராமாயணத்தில் இராமன் கடவுளா? மனிதனா? என்ற வினாவிற்கு முழுமையான விடை கூற முன் வருவாரைக் காணமுடியவில்லை.

வான்மிகம் பெரிதும் மனிதனாகவே சித்திரிக்கிறது. கம்பனில் தெய்விகம் தலை தூக்கி நிற்கிறது. ஆழ்வார்களின் தாக்கம் கம்பனைப் பெரிதும் பாதித்திருக்கவேண்டும். அதனால்தான் அவன் இராமனைக் கடவுளாக்க முனைகிறான் என்பர் ஆய்வறிஞர்கள். நிறைவாகக் கம்பன் 'வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா' என்று பேசி மீண்டும் சிந்திக்க வைக்கிறான். கம்பனைப் பாரதி 'கம்பன் என்றொரு மானுடன்' என்று புதிர் போடுகிறான். நாம் இராமனைத் தெய்வத்தன்மைகள் நிறைந்த ஒரு மனிதனாகவே பார்ப்பது பொருந்தும் என்று தெரிகிறது.

## கருடன் துதி

இந்தக் குழப்பம் கருடனுக்கும் ஒரு காலத்தில் வந்தது. இராம-இராவணப் போரில், ஒருமுறை இந்திரசித்தன், கடைசி முயற்சியாக இலக்குவன் மேல் நாகபாசத்தை வீசுகிறான். இலக்குவன், அனுமன் முதலிய பலரும் அதனால் பிணிப்புண்டு சாய்கின்றனர். இராமனாகிய பரம்பொருள், தம்பி உயிர்நீத்தான் என்று பிறழ உணர்கிறான். 'கெடுத்தனை வீடணா' என்று சினந்தெழுகிறான். தம்பி இறந்தது உண்மையானால் நானும் இறப்பேன் என்று அவலத்தில் தலை நிற்கிறான். அக்காலை, கருடன் வருகை நிகழ்கிறது. இராமன் முன்வந்து, பணிந்து நின்ற கருடன், அவனைப் பலவாறு

*போற்றித்துதிக்கிறான். கருடன் துதி கம்பரில் ஆழ்வார் பாசுரங்களுக்கு நிகரான மேன்மை பெற்றிலங்குகின்றது.*

மறந்தாயும் ஒத்தி; மறவாயும் ஒத்தி;
மயல், ஆரும் யானும் அறியேம்;
துறந்தாயும் ஒத்தி; துறவாயும் ஒத்தி;
ஒருதன்மை சொல்ல அறியாய்;
பிறந்தாயும் ஒத்தி: பிறவாயும் ஒத்தி
பிறவாமல் நன்கு பெரியோய்!
அறந்தாம் நிறுத்தல் அரிது ஆக! - ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்?

*இராமா! மிக்க உனது மாயைகளை யாங்கள் எங்ஙனம் அறியக்கூடும் என்று கருடன் சேவித்து நிற்கிறான். கருடன் சிறகில் இருந்து எழுந்த காற்றால், இந்திர சித்தன் வீசிய நாகபாசம் செயல் இழக்கிறது. இலக்குவன் முதலிய பலரும் மீண்டும் மூர்ச்சை தெளிந்து எழுகிறார்கள்.*

## இராமன் ஐயம்

*இராமபிரானுக்குத் தன்னைப் பலகாலும் தூக்கிச் சுமந்த கருடனை இன்னார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஐயா! நீ யார்? எங்கள் அருந்தவப் பயனால் நீ இங்கே தக்க தருணத்தில் வந்து சேர்ந்துள்ளாய்! எமக்கு உயிரும் வாழ்வும் அருளியுள்ளாய்! என்போன்றோரால் கைமாறு செய்ய இயலாத ஒப்பற்ற உதவியை நீ செய்துள்ளாய்!*

கண்டிலை முன்பு; சொல்லக்
கேட்டிலை; கடன் ஒன்று எம்பால்
கொண்டிலை; கொடுப்பது அல்லால்,
குறைஇலை; இதுநின் கொள்கை;
"உண்டு, இலை" என்ன நின்ற
உயிர் தந்து உதவியோனே!
பண்டு இலை நண்பு; நாங்கள்
செய்வது என்? பகர்தி!' என்றான்

இராமன் பாராட்டுரைகளைக் கேட்ட கருடன், உனக்கும் எனக்கும் உள்ள உறவை எல்லாம், இராவண வதம் முடித்து நீ மீண்ட பிறகு விளக்க வருவேன் என்று கூறிக் கருடன் விடைபெற்றுச் செல்வதாக இராமாயணம் நடையிடுகிறது.

## புரியாத புதிர்

கம்பனில் காணப்படும் இக்கதை சிறிது மாற்றத்துடன் துளசியிலும் இடம் பெறுகிறது. இலங்கையில் நடைபெற்ற போரில் இந்திரசித்தன் எனப்படும் மேகநாதன் ஒரு கணையால் தம்மைக் கட்டி விடுமாறு இராமர் ஒரு லீலை செய்தார்! அதனை நினைத்தால் கருடனாகிய எனக்கு நாணம் மேலிடுகிறது. அக்காலை நாரதர் என்னைப் போர்க்களம் அனுப்பினார். என் காற்றுப் பட்டு நாகக்கணை செயல் இழந்தது. அக்காலை என் நெஞ்சில் ஒரு பெரிய ஐயம் தோன்றியது. பரம்பொருளும் நாராயண மூர்த்தியுமாகிய இராமபிரானை மேகநாதனால் எவ்வாறு

நாகக்கணையால் கட்ட முடிந்தது? இது எனக்குப் புரியாத புதிராக உள்ளது! இது எப்படிச் சாத்தியமாயிற்று?

எங்கும் நிறைந்தவன் இராமன். விகாரங்கள் யாவற்றையும் கடந்த நிறைவுடையவன். சரசுவதி கணவனாகிய பிரமனுக்கும், மாயை, மோகங்களை எல்லாம் கடந்தவனாகிய சிவபெருமானுக்கும் மேலான பரம்பொருள் அல்லனோ அவ்விராமன்? எவருடைய திருநாமத்தை உச்சரித்து மனிதகுலம் கட்டுக்களிலிருந்து விடுபடுகிறதோ, அந்தத் திருநாமத்துக்கு உரியவனான இராமனை, ஒரு கீழான அரக்கனால் எப்படி நாகபாசங்கொண்டு கட்ட இயன்றது?

### நாரதரிடம் சேர்தல்

கருடன் நெஞ்சில் எழுந்த வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை. தன்னைத் தானே அவன் தேற்றிக்கொள்ள முயன்றான். உரிய ஞானம் நெஞ்சில் உதிக்கவில்லை. நெஞ்சில் குழப்பம் மேலும் மேலும் பெருகலாயிற்று. தன்னினும் மேலான ஒருவரை அணுகித் தன் ஐயத்தைத் தீர்த்துக்கொள்ளக் கருடன் விரும்பினான். மோகமுற்று, மனம் கலங்கிய கருடன் நாரதரைத் தேடிச் சென்று தன் ஐயத்தைத் தீர்த்து வைக்குமாறு வேண்டினான்.

## பிரமனிடம் ஆற்றுப்படுத்துதல்

கருடன் கூறிய ஐயத்தால் நாரதர் மனம் கனிந்தது. கருடனே! இந்த ஐயமும், கலக்கமும் எல்லாம் இராமனின் மாயையால்தான் உன் உள்ளத்தே தோன்றியிருக்க வேண்டும். இராமனின் மாயை வலிமை மிக்கது! எந்த மாயை ஞானிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறதோ, எது அவர்கள் நெஞ்சில் அவர்களையும் மீறி, பெரிய கலக்கத்தை உண்டு பண்ணுகிறதோ, அதே மாயை கருடா! என்னையும் பலமுறை ஆட்டி வைத்திருக்கிறது. அது இப்போது உன்னைப் பற்றி நிற்கிறது. உன் உள்ளத்தில் தோன்றியுள்ள மாயையை நீக்க நான் எவ்வளவு உபதேசம் செய்தாலும் அது நீங்கும் என்று நான் நம்பவில்லை. எனவே, உன் ஐயத்திற்கு விடைகாண விரும்பினால், நீ உடனே பிரம தேவனிடம் சென்று விண்ணப்பித்துக்கொள்! அவரிடமிருந்து என்ன ஆணை கிடைக்கிறதோ அதன் வழி செல். இவ்வாறு அறிவுரை கூறிவிட்டு இராமன் குணநலன்களை நெஞ்சுருகப் பாடிக்கொண்டு நாரதர் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

## அனுபவ ஞானம்

ஏன்? எப்படி? எதனால்? என்ற வினாக்கள் எழுப்பப்பட்டதால்தான் பல நிறைஞானிகள் புதிய புதிய தத்துவங்களையும், அவற்றை உள்ளடக்கிய சமயங்களையும் உருவாக்கி உலகவர்களுக்கு

வழங்கினர். சமய உலகில் வெற்றுக் கல்வி அறிவால் எல்லா வினாக்களுக்கும் விடை கண்டு காட்டுதல் இயலாது. ஏட்டறிவைக் கடந்த அனுபவ ஞானத்தால்தான் பல உண்மைகள் தெளிவாகும். இந்த ஞானத்தை வழங்க இறையருள் பெற்ற குருநாதர்கள் துணை வேண்டும். எல்லா ஐயங்களையும் எல்லாரும் தீர்த்தல் என்பது ஞானத் தேட்டத்தில் இல்லை. தக்க ஓரு குருநாதரைத் தேடித் தவங்கிடந்தார் இறையருளால் அவரை அடைதல் கூடும். இந்தியத் தத்துவ வளர்ச்சி வரலாற்றில் இவற்றை விளக்கி நிற்கும் ஏராளமான களங்கள் பல உண்டு. காகபுஜண்டர் வாயிலாகத் தீர்க்கப்பட உள்ள ஓர் ஐயத்தைத் தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் கருடன் நாரதர் கூறியவாறு பிரமதேவனிடம் சென்று அவர் தாள் பணிந்து தன் ஐயத்தை விண்ணப்பித்து நின்றான்.

## சிவனிடம் சேர்க!

பறவைகளின் தலைவனாகிய கருடன் தெரிவித்த ஐயத்தைக் கேட்ட பிரமன் இராமனை நினைந்து தலை வணங்கினான். இராமனின் பெருமைகள் பலவும் அவன் நெஞ்சில் விரிந்தன. இராமன் திருவடிகளில் பிரமனுக்குப் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தது. உலகில் மாயைக்குக் கட்டுப்படாதவர் எவர் உளர்? கவிஞர்கள், அறிஞர்கள், தத்துவஞானிகள் என்று அனைவரையும் மாயை ஆட்டிப் படைக்கிறது. மாயை திரிபு ஞானத்தைத் தோற்றுவிக்கிறது. அதிலிருந்து விபரீத ஐயங்கள் தோன்றுகின்றன. அவை ஐயுற்ற

பொருள்மீது தாழ்வுணர்ச்சியை உருவாக்கி உள்ளத்தில் கர்வத்தைத் தோற்றுவிக்கிறது. இம்மாயைக்குப் படைப்புக் கடவுளாகிய நானே பலமுறை ஆட்பட்டிருக்கையில் கருடன் மயங்கியதில் வியப்புக்கு இடமேது! யாவும் இராமன் திருவுள்ளத்தால் நிகழ்வன. இவ்வாறெல்லாம் எண்ணிய பிரமன், கருடனை நோக்கிப் பறவைகள் தலைவனே! இராமன் பெருமையை முற்றாக உணர வல்லவர் சிவபெருமான் ஒருவரே! நீ சங்கரரை அணுகினால் உன் ஐயம் அகல்வது உறுதி. வேறு யாரும் உன் ஐயத்தைத் தீர்த்து வைக்க வல்லவர் அல்லர் என்று அறிவுரை கூறி பிரமன் விடைபெற்றான். கருடன் மகாதேவன் இருப்பிடம் நோக்கிப் பயணமானான்.

### சத்சங்கம் சேர்க!

சிவபெருமான் கருடன் தன்னைச் சந்திக்க வந்த போது, தம் நண்பனான குபேரனைச் சந்திக்க விரைந்து கொண்டிருந்தார். உமையம்மை கயிலையில் தங்கியிருந்தார். சிவபெருமான் கால்களில் வீழ்ந்து வணங்கிய கருடன் தன் ஐயத்தை வெளியிட்டதோடு, பிரமன் தன்னை ஆற்றுப்படுத்தியதையும் பணிவுடன் வெளிப்படுத்தினான். சிவபெருமான் நடுவழியில் சந்தித்த கருடனிடம், உன் ஐயம் நடந்துகொண்டே தீர்க்கும் தன்மை உடையது அன்று. உயர் பொருளை ஆராயும் அடியார்கள் கூட்டத்தில் நீ சென்று சேரும் போது, உன் ஐயம் தானாகவே அகலும் என்று

எடுத்துரைத்தார். ஹரிகதை கூறப்படும் சத்சங்கத்தை உனக்கு நான் கூறுவேன். நீ அங்கே செல் என்று ஆற்றுப்படுத்தினார்.

## காகபுஜண்டரிடம் ஆற்றுப்படுத்துதல்

கருடனே! ஹரிகதை எல்லா ஐயங்களையும் தாமே தீர்க்கும் வல்லமை உடையது! அது உனக்கு இராமன் திருவடிகளில் அன்பைப் பெருக்கெடுக்கச் செய்யும். ஹரிகதை கேளாது தெளிவு பிறக்காது. தெளிவு பிறவாத நிலையில் உள்ளத்தில் பக்தி தோன்றாது. பக்தி இன்றி, யோகம், தவம், ஞானம், வைராக்கியம் என்பனவற்றை அறிந்து தெளிவார்க்கு இராமன் தாள்மலர்கள் எட்டாது. வடதிசையில் ஒரு நீலமலை உள்ளது. அவ்விடத்தில் சிறந்த பண்பாளராகிய காகபுஜண்டர் வாழ்ந்து வருகிறார். அவர் இராமபக்தியில் தலை நிற்பவர். சிறந்த ஞானி! பண்புகளின் உறைவிடம். வெகுநாட்களாக அவர் இடைவிடாது இராமன் திருக்கதையைக் கூறி வருகிறார். பல்வேறு பறவைகள் அவரிடம் சென்று கதை கேட்டு உய்திபெற்றுள்ளன. நீயும் அங்கே சென்றால் உன் ஐயம் தீரும் என்று, கருடனை காகபுஜண்டரிடம் ஆற்றுப்படுத்தி விட்டுச் சிவபெருமான் குபேரனை நாடிப் பயணமானார். கருடன் விடைபெற்றுக் காகபுஜண்டரை நாடி நீலமலை நோக்கிப் புறப்பட்டான்.

## சிவன் திருவுளம்

சிவபெருமான் திருவுள்ளத்தில், இராமன் கருடனுக்கு ஏற்படுத்திய ஐயத்தின் உண்மை புலப்பட்டது. மனிதனுக்கு எப்போது தற்பெருமை ஏற்படுகிறதோ, அப்போது மாயை அவனைப் பற்றும். கருணைக் கடலான இராமன், கருடன் உள்ளத்தில் தோன்றியுள்ள ஐயத்தை உரியவாறு தீர்க்க நினைத்திருக்கிறார் என்பதை உணர்ந்த சிவபெருமான், தான் உபதேசிக்க விரும்பவில்லை. பறவை ஒன்றிற்குப் பறவை மொழி வழியே ஞானம் கிடைக்கும்; தாம் குறுக்கிடுதல் தகாது என்று திருவுளம் கொண்டார்.

## நீலமலை சேர்தல்

கருடன், மழுங்காத முழுமதி படைத்தவரும், பக்தி வைராக்கியத்தில் தலை நிற்பவருமாகிய காகபுஜண்டர் வாழும் நீலமலை நோக்கிச் சென்றான். மலையைக் கண்ட அளவிலேயே கருடன் உள்ளத்தில் ஒரு தெளிவு பிறந்தது. நெருங்கிய அளவில் அவன் உள்ளத்திருந்த மாயை, கலக்கம், சோர்வு யாவும் அகன்ற உணர்வு தலையெடுத்தது. மலையடி வாரத்திலிருந்த தெளிந்த நீரோடையில் மூழ்கித் தூய்மை செய்து கொண்டு சிறிது நீர் பருகினான். விரிந்து பரந்த ஆலமர நீழலில் பறவைகள் பலவும் கூடியிருந்தன. கருடன் வருகை கண்டு பறவை இனங்கள் மகிழ்ந்தன. காகபுஜண்டர் கருடனை

அன்புடன் வரவேற்று இருக்கை அளித்தார். நலம் கேட்டு அன்பு மொழிகள் புகன்றார்.

## கருடன் விண்ணப்பம்

காகபுஜண்டர், இராமன் திருக்கதையைப் புதிதாக மீண்டும் சொல்வதற்கு ஆயத்தமாகியிருந்தார். கருடனை நோக்கி, அவன் தன்னை நாடிவந்த காரணம் வினவினார். கருடன் விருப்பம் யாதாயினும் அதனை நிறைவேற்றுவதுதம்கடமைஎனஅன்புமொழி புகன்றார். கேட்டு மகிழ்ந்த கருடன், காகபுஜண்டரை நோக்கி, நீர் கொடுத்து வைத்தவர். தங்கள் பெருமையைச்சிவபெருமானே எடுத்துரைத்தார்.அருள் நிறைந்த பெரியீர்! நான் எதற்காக இங்கே வந்தேனோ, அச்செயல் இங்கு வந்து சேர்ந்த உடனேயே தானே நிறைவேறி விட்டது. தங்கள் மேலான தரிசனமும் கிடைத்துவிட்டது.தங்கள் தூய்மையான ஆசிரமத்தைப் பார்த்தவுடனேயே, என் கலக்கம், ஐயம், பலவிதமாய் நெஞ்சில் தேங்கியிருந்த முரண்பட்ட எண்ணங்கள் யாவும் அகன்றன. பெரியவரே! தாங்கள் இனி எனக்கு, கேட்டவர்களைத் தூய்மைப்படுத்துகின்ற, எப்போதும் நிறைந்த மகிழ்ச்சியைத் தருகின்ற, துயரச்சுமைகள் யாவற்றையும் அழித்து ஒழிக்கின்ற இராமபிரானின் திருக்கதையைக் கூறியருளவேண்டும். மீண்டும் மீண்டும் நான் வேண்டுவது இதுவே என்று பணிவுடன் விண்ணப்பம் வைத்தான். கருடனின் அன்பு ததும்புகின்ற, மகிழ்ச்சியைத் தருகின்ற தூய மொழிகளைக் கேட்ட காகபுஜண்டர் மனம் உற்சாகம்

அடைந்தது. இராமன் திருக்கதையை அவர் கருடனுக்குச் சொல்லத் தொடங்கினார்.

### நால்வகை தீட்சைகள்

ஞானகுரு தன் மாணாக்கருக்குப் பல்வேறு வகைகளில் தீட்சைகள் செய்வித்து ஞானம் கொளுத்துவார். ஆசிரியர் திருக்கரம் மாணவன் மீது பட்டவுடன், மாணாக்கன் ஐயம் எல்லாம் அகன்று உள்ளொளி பிறக்கும். இதனை ஸ்பரிச தீட்சை என்பர். குருநாதர் தம் கண்களால் பார்த்த மாத்திரத்தில் சீடனுக்கு ஞானம் விளையும். இதனை நயன தீட்சை என்பர். சிலவார்த்தைகள் குருநாதர் தெரிவித்த உடனேயே, அவர் சொல் கேட்ட அளவிலேயே சீடனுக்கு ஞானம் கைவரப்பெறும். இதனை வாசக தீட்சை எனச் சாத்திர நூல்கள் கூறிக்காட்டும். இவற்றுள் யாதொன்றையும் செய்யாது, ஆசாரியன், தன் மாணவனுக்கு ஞானம் சித்திக்க வேண்டும் என்று திருவுளம் கொள்வார். அவ்வளவில் மாணாக்கன் உள்ளத்தே ஒளிபிறக்கும். இதனை மானத தீட்சை என்பர். வேறுவகை தீட்சை முறைகளும் பலஉண்டு.

### ஞானமண்

இவற்றுக்கெல்லாம் வேறாக, வேறு ஓர் அனுபவமும் உண்டு. ஞானாசாரியன் வாழும் மண்ணை மிதித்தவுடனேயே மாணவனுக்கு ஞானம் கை கூடும். செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கப் பெற்றுக் கந்தர் கலிவெண்பா அருளினார்

குமரகுருபரர். நின் வாக்குத் தடைப்படும் இடத்தில் உன் குருநாதனைக் கண்டு கொள்வாய் என அசரீரி எழுந்தது. கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் சிறந்திருந்த குமர குருபரர், பல இடங்களிலும் குருநாதரைத் தேடி அலைந்தார். இறுதியில் திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதினம் தேடி வந்தார். மயிலாடுதுறையைக் கடந்து, குருநாதர் வாழும் தருமபுரம் மண்ணை மிதித்த உடனேயே அவர் உளத்தே இருந்த விபரீத ஐயங்கள் அகன்றன. 'ஊரிற் குறுகினேன்; ஓர் மாத்திரை அளவு பேரிற் குறுகினேன் பின்' என்று தாம் பெற்ற ஞான அனுபவத்தைத் தாம் அருளிய பண்டாரமும்மணிக் கோவையில் அவரே பதிவு செய்கிறார். ஜீவன் என்ற வடசொல் தமிழில் சீவன் என்று எழுதப்படும். இச்சொல் உயிர்க்குலத்தைக் குறிக்கும். இச்சொல்லின் முதல் எழுத்தாகிய 'சீ' என்ற உயிர்மெய் எழுத்து இரண்டு மாத்திரை ஒலி அளவு கொண்டது. தருமபுரத்தில் கால்மிதித்தவுடன் 'சீ' என்ற நெடில், ஒரு மாத்திரை குறைந்து 'சி' என மாறிவிட்டது. சீவன்- சிவனாகி விட்டது. கருடனுக்கும் இந்நிலையே ஏற்பட்டிருக்க வேண்டும். இந்திரசித்தன் பற்றியும், இராம-லட்சுமணர் கட்டுண்டது பற்றியும், தன் சிறகின் காற்றால் அவர்கள் பிணிப்பு நீங்கியமை பற்றியும் அவன் ஒன்றும் கேட்கவும் இல்லை. காகபுஜண்டர் உரைக்கவும் இல்லை. கருடனுக்கு ஐயம் அகன்று உண்மை புலப்பட்டது என்றால், காகபுஜண்டர் வாழும் மண்ணே ஞானம்

விளைக்க வல்லது என்பது புலப்பட்டுத் தோன்றுகின்றது.

**கதைச் சுருக்கம்**

கருடனுக்கும், கதை கேட்க வந்திருந்த ஏனைய பறவைகளுக்கும் காகபுஜண்டர் இராமன் வரலாற்றை எடுத்துரைக்கத் தொடங்கினார். துளசி இராமாயணத்தில் உத்தர காண்டத்தில் , மீண்டும் ஒருமுறை இராமாயணக்கதை காகபுஜண்டர் வாயிலாகச் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. இப்பகுதியை இராமாயணத்தின் சாரமாகவே கொள்ளலாம். கதையின் இன்றியமையா நிகழ்வுகள் ஒன்றும் விடுபடாது, இராமாயணம் மீண்டும் ஒருமுறை சுருங்கப் பேசப்பட்டுள்ளது. கற்பார் விரிந்து பரந்த கதையை ஒருமுகப்படுத்தி உளங்கொள்ள, நூலாசிரியர் கையாளும் உத்தி இது என்று கொள்ளலாம். மகாபாரதத்தில், துரியோதனன் அழிக்கப்படுவதற்கு முன்பாகக் கண்ணனை வணங்கி எழுந்த தருமன், இதுநாள் வரை அவன் செய்த உதவிகளை எல்லாம் நினைவு கூர்வான். தருமன் கூற்று ஒரு மகாபாரதச் சுருக்கமாக அமையும். வில்லியில் இப்பகுதி அழகிய கவிதைகளால் நடையிடும்.

**பாலகாண்டம்**

இராமன் தசரத குமாரனாக அயோத்தியில் அவதரித்தான். பாலலீலைகளால் பெற்றோர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினான். விசுவாமித்திரர்

வந்து இராமனை வேள்விக்காக அழைத்துச் சென்றார். மிதிலை சென்று சிவ வில்லை ஒடித்துச் சீதையை மணந்தான். அயோத்தியில் இராமனுக்கு முடிசூட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. தயரதன் வேண்டுகோளுக்கு இராமன் உடன் படுகிறான். கைகேயி செயலால் அரசபாரம் என்ற அரிய பாரம் இற்று அகன்றது. இராமன், சீதை இலக்குவன் உடன் வரக் காட்டுக்குச் சென்றான். நகர மக்கள் இராமன் பிரிவாற்றாது வாடி வதங்கினர்.

## அயோத்தியா காண்டம்

கங்கைக் கரையில் இராம-லட்சுமணர்களைக் குகன் வரவேற்றுப் போற்றினான். அவன் உதவியால் கங்கையைக் கடந்து மூவரும் பிரயாகையில் தங்கினர். வால்மிகி இராமனைச் சந்தித்து உரையாடினார். பின் இராமன் சித்திர கூடம் சென்றடைந்தான். பரதனும், நாட்டு மக்களும் இராமனைத் தேடிக் கானகம் வந்தனர். பரதனுக்குப் பலவாறு அறிவுரைகள் கூறி, இராமன் தன் பாதுகைகளை வழங்கினான். பரதன் பாதுகைகளுடன் திரும்பி நந்தி கிராமத்தில் சென்று தங்கினான்.

## ஆரண்ய காண்டம்

காட்டில் இந்திரன் குமாரன் சயந்தன் சிறுதவறு செய்ய இராமன் அவனை மன்னித்தான். அத்திரி முனிவர் இராமனைச் சந்தித்து உரையாடினார். பின் இராமன் காட்டில் விராதனை வதைத்தான். சரபங்க

முனிவருக்கு வீடு பேறு அருளினான். இராமனிடம் அளவற்ற பக்தி கொண்ட சுதீட்சண முனிவர் இராமன் அருள் பெற்று உய்ந்தார். அகத்திய முனிவர் இருப்பிடம் சேர்ந்து இராமன் அவருடன் தங்கி உரையாடி மகிழ்ந்தான். பிருகு முனிவர் ஜடாயு முதலியவர்களைக் கண்டு இராமன் நட்புப் பூண்டு மகிழ்ந்தான். பஞ்ச வடியில் வாழ்ந்திருந்த முனிவர்களைக் கண்டு இராமன் ஆறுதல் கூறி, அவர்கள் அச்சங்களை எல்லாம் அகற்றினான். இலக்குவனுக்கு ஒப்புயர்வற்ற அறிவுரைகள் பலவற்றை எடுத்துரைத்தான். தீயநோக்கம் கொண்ட சூர்ப்பணகையை விகாரப்படுத்தினான். சினந்து வந்த கரனையும், தூடணனையும் வதைத்தான்.

## கிட்கிந்தா காண்டம்

காட்டில் தங்கியிருந்த சீதை அழகைக் கேட்டு இராவணன் மோகம் கொண்டான். மாரீசனோடு கூடித்திட்டமிட்டு, வஞ்சகத்தால் சீதையைத் தூக்கிச் சென்றான். இராமன், சீதை பிரிவால் பெரிதும் வாடினான். இராவணனால் கொல்லப்பட்ட ஜடாயுவுக்கு இராமன் ஈமக்கடன்களைச் செய்தான். சுபந்தனை வதைத்தான். சபரிக்குப் பெருநற் கதி அளித்தான். பம்பைக் கரையில் பிரிவாற்றாமையால் வாடிய இராமனை நாரதர் சந்தித்தார். அனுமன் வரவும், தொடர்ந்து, சுக்ரீவன் நட்பும், வாலிவதமும் நடந்தேறின. இராமன் கிட்கிந்தை அரசனாகச் சுக்ரீவனுக்கு முடிசூட்டி மகிழ்வித்தான். உரிய

காலத்தில் உதவ முன்வாராத சுக்ரீவன் மேல் இராமன் சினம் கொண்டு பின் தணிந்தான். வானர வீரர்கள் சீதையைத் தேடி நாற்றிசைகளிலும் சென்றனர். அனுமன், குகையுள் புகுந்து சம்பாதியைச் சந்தித்தான். அவன் மூலம் செய்தி அறிந்து அனுமன் கடல் தாவி இலங்கை சேர்ந்தான்.

**சுந்தர-யுத்த காண்டங்கள்**

அனுமன் இலங்கையில் நுழைந்து, பல இடங்களிலும் சீதையைத் தேடி, பின்னர் அவளைச் சந்தித்தான். அவளுக்கு ஆறுதல் மொழிகள் புகன்றான். அசோகவனத்தைச் சிதைத்தான். இராவணனுக்கு அறிவுரை புகன்றான். இறுதியில் இலங்கையைத் தீக்கிரையாக்கினான். மீண்டும் கடல் தாவி இராமனிடம் சேர்ந்து சீதையின் நலம் குறித்து எடுத்துரைத்தான். இராமன் படைவீரர்களுடன் கடற்கரை சென்றடைந்தான். வீடணன் தன் அண்ணன் இராவணனுடன் மாறுபட்டு, இராமனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். கடலில் இலங்கைக்கு அணைகட்டப்பட்டது. அங்கதனை இராமன் இராவணன் பால் தூதனாக அனுப்பினான். போர் தொடங்கியது. கும்பகர்ணர், இந்திரசித்தன், மற்றும் அரக்கர்கள் பலரும் அழிந்தனர். இராமன் கணைகளால் இராவணன் மாண்டான். அவன் மனைவி மண்டோதரி பலபட அரற்றி மாழ்கினாள். இராமன் வீடணனுக்கு இலங்கை அரசை வழங்கி முடிசூட்டி மகிழ்வித்தான். தேவர்கள் துயர்நீங்கி, இராமனைப் பலவாறு

துதித்துப்போற்றினர். இராமனும் சீதையும் இணைந்தனர். புட்பக விமானத்தில் ஏறி இராமன் அயோத்தி சேர்ந்து முடி சூட்டிக் கொண்டான்.

## கருடன் மகிழ்ச்சி

காகபுஜண்டர் உரைத்த இராமகாதை கேட்டு பறவைகளின் அரசன் உற்சாகம் அடைந்தான். காக்கை வடிவில் சிறந்து விளங்கும் முனிபுங்கவரே! இரகுபதியின் வரலாறு முழுவதும் தெரிந்து கொண்டேன். என் ஐயங்கள் யாவும் அகன்றன. இராமன் திருவடிகளில் எனக்குப் பக்தி மிகுந்தது. இராமன் முற்றும் மனிதன் போலவே நடந்து கொண்டமையால் என் உள்ளத்தே முன்பு ஐயம் தோன்றியது. ஒருவகையில் இந்த ஐயமும், கலக்கமும் எனக்கு நன்மை தருவனவாகவே அமைந்தன. இராமன் எனக்கு இப்போது தண்ணருள் சுரந்துவிட்டான். எவன் ஒருவன் கடும் வெப்பத்தால் வாடுகிறானோ, அவனுக்குத்தான் மரநிழல் தரும் இன்பத்தை முழுமையாக உணர முடியும். இந்த ஐயம் என்னுள் எழாவிட்டால், நான் இங்கே வந்திருக்கவும் மாட்டேன். தங்களைச் சந்தித்திருக்கவும் மாட்டேன். நீங்கள் எடுத்திசைத்த ஹரிகதையின் வழி, வேதங்களும், புராணங்களும், சாத்திரங்களும், உணர்த்தும் கருத்தைப் புரிந்து கொண்டேன், சித்தர்களும், முனிவர்களும் எல்லாரும் இதனையே கூறுகின்றனர். இராமன் அருள் கிட்டுபவனுக்கே, தூய சாதுக்களின் சந்திப்புக் கிடைக்கும். எனக்கு அவன்

அருள் கிடைததது. தங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. என் ஐயங்கள் யாவும் அகன்றன என்றெல்லாம் கருடன் நன்றிப்பெருக்குடன் பேசிநின்றான். கருடனின் பக்தியும், பணிவும் கலந்த உரை கேட்டுக் காகபுஜண்டர் மேனி சிலிர்த்தது. கண்களில் நீர் பெருகியது. அவர் நெஞ்சில் பேரானந்தம் எழுந்தது.

## நிறைஞானியின் அருள்

கல்வியும், அதுபற்றி எழும் அறிவும், அறிவின் தெளிவான ஞானமும் கைவரப் பெற்றவர்கள் நெஞ்சில் அனுபவ அறிவு தலைப்படும் போது, எழுத்துக்களின் உள்ளீடாக, மறைபொருளாக அமைந்து கிடக்கும் மெய்மைகள் பலவும் புலப்பட்டுத் தோன்றும். ஞானிகள் தாங்கள் உணர்ந்த இரகசியங்களை எல்லாருக்கும் எளிதில் தெரிவித்துவிடமாட்டார்கள். அவற்றை மறைத்து நின்றே உரையாடுவர். ஆயினும், சிறந்த மதிநலம் கொண்ட, நல்லொழுக்கத்தில் தலை நிற்பான் ஒருவன், தெரிந்து கொள்ளவேண்டும் என்ற தீரமான எண்ணத்துடன் ஞானிகளை அணுகும் போது, தாம் மறைத்து வைத்திருந்த மறைபொருள்களை அவர்கள் தங்களையும் அறியாது வெளிப்படுத்தி விடுவர். கருடனுக்கு அவர் தகுதிப்பாட்டால் நிறைஞானி யாகிய காகபுஜண்டர் அருள் முற்றாக வாய்த்தது.

## புஜண்டர் அறிவுரை

கருடனே!நீ என் வழிபாட்டுக்கு உரியவனானாய். இராமனின் பேரன்புக்குப் பாத்திரமான உனக்கு ஐயமோ, மதிமயக்கமோ ஏற்பட்டிருக்கவில்லை. மதிமயக்கம் என்ற ஏதீட்டால் இராமன் உன்னை இங்கே அனுப்பி வைத்துள்ளான். என்னைப் பெருமைப்படுத்துவதற்காக இராமன் செய்த திருவிளையாடல் இது. மதி மயக்கம் உனக்கு ஏற்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை. நாரதர், சிவபெருமான், பிரமதேவன், சனகர் முதலான பெரியவர்கள் ஆத்ம தத்துவத்தை உணர்ந்தவர்கள். அவர்களைக் கூட மாயை பற்றி நின்று, மதிமயக்கத்தைத் தோற்றுவித்துக் குருடர்களாக்க வில்லையா? காமம் எவரை ஆட்டிவைக்கவில்லை? பேராசை யாருக்குத் துணிச்சலைத் தரவில்லை? கோபம் எவர் உள்ளத்தைக் கொதிப்படையச் செய்யவில்லை? இவ்வுலகில் ஆசை எந்த ஞானியை மண்ணில் புரட்டி எடுக்காமல் விட்டது. ஞானி, தவசி, வீரன், கவிஞன், குணக்குன்று என்ற எவனையாவது செல்வச்செருக்கு வக்கிரமாக்காமல் விட்டுள்ளதா? ஆணவத்தால் செவிடானவர் எத்தனை பேர்! பெண்களின் கடைக்கண் என்னும் அம்பால் துளைக்கப்படாதவன் எவன் இருக்கிறான்? ரஜோகுணமும், தமோகுணமும் உயிர்களை எவ்வாறெல்லாம் ஆட்டிவைத்துள்ளன? மானமும், மதமும் தீண்டாதவன் கூட இளமை மிடுக்கால்

தடுமாறிப்போயிருக்கிறான். மமதையால் புகழ் இழந்தோர் எத்தனைபேர்? பொறாமை யாரைக் களங்கப்படுத்தாமல் விட்டது?

## மாயையின் பேராற்றல்

கருடனே! கேள்! சோகம் என்ற சூறாவளியால் தூக்கி எறியப்படாதவர் யார்? கவலை என்ற சாரைப்பாம்பு யாரை விழுங்காது விட்டது? மாயையில் கட்டுணாதவன் ஒருவனாவது உண்டா? மனோரதம் என்பது கரையான். உடல் என்பது கட்டை. இந்தக் கரையானால் பற்றப்படாத தைரியசாலி உலகில் உண்டா? பிள்ளை, செல்வம், புகழ் என்ற மூவாசைகள் எவன் அறிவை மழுங்கச் செய்யாது விட்டன? இவை யாவும் மாயைக்கு உறவான தீமைகள். இவை எல்லையற்றவை. இவற்றில் இயல்புகளை முழுவதுமாக யாரால் எடுத்துரைக்க முடியும்? சிவனும், பிரமனும் கூட இவற்றைக் கண்டு அஞ்சும்போது, மற்றவர்கள் எம்மாத்திரம்? மாயையின் வெறி கொண்ட படை உலகெங்கும் பரவி நிற்கிறது. காமம், கோபம், பேராசை என்பன மாயையின் படைத்தலைவர்கள்! தற்பெருமை, வஞ்சகம், நாத்திகம் என்பன படைவீரர்கள்! இந்த மாயையை அடிமைப்படுத்தும் ஒருவன் இராமன் மட்டுமே! ஞானம் பிறந்து இராமன் திருவருளும் இணையும்போது மாயை அழியும். இதனை நான் சூளுரைத்துக் கூறுவேன் என்றெல்லாம்

காகபுஜண்டர் கருடனுக்கு மாயையின் இயல்புகளை விரித்துரைத்தார்.

## இராமன் பெருமை

பறவைகளின் தலைவனே! எந்த மாயை உலகத்தை எல்லாம் ஆட்டிப்படைக்கிறதோ, எதன் செயலை எவராலும் விளங்கிக்கொள்ள இயலாதோ அதே மாயை, இராமனின் புருவ அசைவில், அவன் காட்டும் குறிப்புக்கு ஏற்றவாறு, தன் சுற்றத்துடன் கூட ஒரு நடனமாதைப் போல நாட்டியமாடுகின்றது. எது பிறப்பற்றதோ, விஞ்ஞானமே வடிவாய் விளங்குகின்றதோ, அழகும் வலிமையும் உருக்கொண்டதாகத் திகழ்கிறதோ, முடிவற்றதோ, எதன் சக்தி சிறிதும் வீணாவதில்லையோ, அந்த மேலான, சத்தும், சித்தும், ஆனந்தமுமான பரம்பொருள் இராமன் ஒருவனே! அவன் முக்குணங்கள் அற்றவன். பெரியவன். சொற்களுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டவன். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருப்பவன். குற்றமற்றவன். அவனை யாரும் வெல்ல முடியாது. இராமன், உருவமற்றவன். மயக்கமற்றவன். என்றும் உள்ளவன். மாயைக்கு அப்பாற்பட்டவன். ஆனந்தக்குவியல். இயற்கையைக் கடந்தவன். சர்வ வல்லமை படைத்தவன். எல்லார் உள்ளத்துள்ளும் உறைபவன். விருப்பமற்றவன். விகாரமற்றவன். அழிவற்றவன். மேலான பிரமம் அவனே!

**மாயையின் செயல்கள்**

இராமனிடம் மயக்கத்திற்கு இடம் ஏது? கனத்த இருள் கூட்டம் கதிரவன் ஒளியின் முன் நிற்க முடியுமா? அந்த மேலான குணங்களைக் கொண்ட தலைவனே, தன் அடியவர்களுக்காக, அரசனாக அவதரித்து சாதாரண மனிதனைப் போல, பல மேலான சரித்திரங்களை இந்த மண்ணில் நிகழ்த்திக் காட்டினான். ஒரு பகல் வேஷக்காரன், பல வேஷங்களைப் பூண்டு ஆடுகிறான். அந்தந்த வேஷங்களுக்கு ஏற்பப் பேசுகிறான். ஆனால் அவற்றில் ஒன்றாகவும் அவன் இருப்பதில்லை. பாம்புகளின் பகைவனே! இப்படித்தான் இராமனது லீலைகள் அரக்கர்களை மயக்குகின்றது! பக்தர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது! அழுக்காறு கொண்ட மதியினரும், சிற்றின்பத்துக்கு ஆட்பட்ட காமுகர்களும் இராமன்மீது இவ்வாறு கலக்கத்தை ஏற்றிக் கூறுவர். கண்களில் காமாலைநோய் கொண்டவன், திங்களை மஞ்சள் நிறமுடையது என்பதில் வியக்க என்ன உள்ளது? திசை தெரியாதவன் கதிரவன் மேற்கில் உதிப்பதாகக் கூறுவான். ஓடத்தில் செல்பவன் கரையில் காணப்படுபவை நகர்ந்து செல்வதாகப் பிறழ உணர்வான். அவன், நகர்ந்து செல்லும் ஓடத்தில் இருந்தும், மதிமயக்கம் காரணமாகத் தான் ஒரே இடத்தில் இருப்பதாக நினைக்கிறான். தட்டா மாலை சுற்றும் சிறுவர்களுக்கு உலகமே சுற்றுவதாகத் தோன்றும். இது

மாயத்தோற்றம் என்று எடுத்துரைத்தால் அவர்கள் நம்புவது இல்லை.

**மதுமயக்கம்**

கருடனே! மேகநாதன் விடுத்த கணையால் இராமன் மயக்க முற்றான் என்பதும் இவ்வாறே. கனவில் கூடப் பரம்பொருளுக்கு இவ்விதக் கலக்கம் நேரவாய்ப்பு இல்லை. ஆனால், மாயையால் கட்டுண்ட, நற்பேறு பெறாத, சிறுமதி படைத்தவர்கள் உள்ளத்தில் பல்வேறு திரைகள் மூடிக்கிடக்கின்றன. அந்த மூடர்கள் பிடிவாதமாக, உள்ளத்தில் ஐயத்தை எழுப்பிக்கொண்டு, தம் அறியாமையை இராமன் மீது செலுத்துகின்றனர். யார் எல்லாம் காமத்திலும், கோபத்திலும், மதத்திலும், பேராசையிலும் ஈடுபட்டுத் துயரமே மிகுந்த இல்வாழ்வில் சிக்கிக் கொள்ளுகிறார்களோ, அத்தகைய பேரிருள் கிணற்றில் வீழ்ந்த அம்மூடர்களால் பரம்பொருள் இராமனை எவ்வாறு அறிய முடியும்? முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட, தெய்விக, கல்யாண குணங்களைக் கொண்ட, குணங்களின் இருப்பிடமான, இறைவனின் எளியதும் அரியதுமான சரிதங்களைக் கேட்டு முனிவர்களே மனம் குழம்பியுள்ளனர். எனக்கும் கூட இவ்வாறான மதிமயக்கம் ஏற்பட்டுள்ளது.

**வேதசாரங்கள்**

பறவைகளின் தலைவனே! நீ இராமன் திருவருளுக்கு உரியவனாகி விட்டாய்.

நாராயணமூர்த்தியின் குண அழகில் நீ கொண்டிருக்கும் ஈடுபாடு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நான் உன்னிடம் எதையும் மறைக்கமாட்டேன். மறைத்துப் போற்றவேண்டிய இரகசியங்களையும் உனக்குத் தெரிவிப்பேன். இராமனின் எளிய இயல்புகளை நீ அறிந்திருப்பாய். இராமபக்தர் உள்ளத்தில் தற்பெருமை என்பது ஒரு போதும் இராது. தற்பெருமையாகிய, 'யான்' என்னும் அகங்காரமே, பிறப்பு, இறப்பு என்ற உலகியலுக்கு வேராகி விடுகிறது. அதுவே பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் விளைக்கிறது. அதனால்தான் கருணைக் கடலாகிய இறைவன் அகங்காரத்தை நீக்கியருளுகிறான். காரணம், அடியார்களை அவன் உறவாகக் கருதுகின்றான். குழந்தைமேல் ஏற்படும் சிறு துன்பம் கூடத் தாய்க்கு உள்ளத்தில் பெரிய காயமாகத் தோன்றுகிறது. நோய் கண்டு குழந்தை அழுகிறது. தாயும் துன்புறுகின்றாள். ஆயினும், நோய்தீர்க்கும் முயற்சியில், குழந்தை அழுகையையும் பொருட்படுத்தாது தாய், திடமாக நிற்கிறாள். அவளுக்குத் தற்காலிகத் துன்பத்தைவிட, நிரந்தரமான நலத்தில்தான் அதிக அக்கறை. இறைவனும், தன் அடியவரின் தற்பெருமை என்ற நோயை, பின் விளைவை நோக்கிக் கடுமையான சோதனைகள் வழி நீக்கியருளுகிறான். ஆயினும் உலகவர், இறைவன் கருணையை உணர மாட்டாமையின், அவனை வழிபடவிரும்பாது காலத்தை அவமே கழிக்கின்றனர்.

காகபுஜண்டரின் வேத சாரமான அனுபவ ஞானத்தில் கருடன் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறான்.

## வரலாற்றுத் தோற்றம்

கருடன் ஐயம் தீர்த்த காகபுஜண்டர், இராமனின் அருளையும், தன் அறியாமையையும் கருடனிடம் எடுத்துரைக்கத் தொடங்கினார். காகபுஜண்டரின் அருள்வரலாறு இங்கேதான் முதன்முதலாகப் புலப்படுகின்றது. வேறு எந்த நூல்களிலும் காணப்படாத காகபுஜண்டர் அருள் வரலாற்றை, அவர் காகவடிவம் எடுத்த கதையை, இராமனுக்கும் அவருக்கும் இடையே நிலவிய உறவை, அவர் பெற்ற அருள் அனுபவங்களை எல்லாம், அவர் கூற்றாகவே துளசி தாசர் எடுத்துரைத்துக் கதை நடத்துகிறார். அவர் அருள் வரலாற்றை, அவர் வாயிலாகவே கேட்டு மகிழும் அரிய வாய்ப்பு, நாராயண மூர்த்தியைத் தூக்கிச் சுமந்த புண்ணியப் பேற்றால் கருடனுக்கு வாய்க்கிறது.

## கதை கூறத் தொடங்குதல்

பறவைகளின் தலைவனே! முதன் முதல் இராமன் கருணையையும், என் அறியாமையையும் உனக்குக் கூறுகின்றேன்! மனம் வைத்துக்கேள். எப்பொழுதெல்லாம் நாராயணமூர்த்தி இராமனாக மனித வடிவு எடுக்கிறானோ, தன் அன்பர்களுக்காகப் பல ஆடல்களைநிகழ்த்துகிறானோ, அப்போதெல்லாம் நான் அயோத்தி மாநகருக்குச் செல்வேன். அவனது

குழந்தை விளையாடல்களைக் கண்டு மகிழ்வேன். அங்கே நடைபெறும் ஐயனின் பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவேன். அவன் அழகிலும், பால லீலைகளிலும் ஈடுபட்டு ஐந்தாண்டுகள் வரை அயோத்தியில் தங்குவேன். கருடனே! இராமன் கோடி மன்மதன் அழகுடையவன்! அவனே என் விருப்பத்திற்குரிய கடவுள். அவ்வழகனின் முகம்பார்த்துப் பார்த்து, கண்கள் பெற்ற பயனை அடைவேன். அவன் அருகில் சென்று பார்க்கவும், பழகவும், விளையாடவும் வேண்டிச் சிறு கருங்காக்கை வடிவம் எடுத்துக்கொண்டு அயோத்திக்குச் செல்வேன். சிறு பிள்ளையாக அவன் எங்கெல்லாம் சுற்றித்திரிகிறானோ அங்கெல்லாம் நானும் காகவடிவில் உடன் செல்வேன். அரண்மனை முற்றத்தில் உண்ணும்போது அவன் சிந்தும் சிறுசிறு பருக்கைகளை நான் கொத்தி எடுத்துச் சென்று பிரசாதமாக உண்டு மகிழ்வேன். ஒருமுறை இராமன் தான் நிகழ்த்திய விளையாடல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினான். அதை நினைத்தால் இன்றும் என் உடலெல்லாம் சிலிர்க்கிறது.

## இராமன் பேரழகு

பழைய நினைவுகளில் காகபுஜண்டர் சற்றே திளைத்தார். பழைய நினைவுகள் அவர் மனத்திரையில் நிழலாடின. கருடன் ஆர்வப் பெருக்குடன் அவர் கூறப்போகும் அற்புத நிகழ்வைக் கேட்க ஆர்வம்

கொண்டிருந்தான். கருடனே! அயோத்தியில் இராமன் பிறந்த அரண்மனை தங்கத்தால் கட்டப்பெற்றிருந்தது. அதில் நவரத்தினங்களும் பதிக்கப் பெற்று ஒளி வெள்ளத்தை உமிழ்ந்தன. அதிலும், இராமன் தன் உடன் பிறந்த இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோருடன் இணைந்து விளையாடும் முற்றத்தின் அழகைச் சொல்லிமாளாது. பெற்ற அன்னை மனம் குளிர இராமன் முற்றத்தே பால லீலைகள் பலவும் புரிந்து சுற்றிச் சுற்றி வந்தான். மரகதமணி போன்ற பச்சைப் பசேலென்ற அவன் கோமளத் திருமேனியின் ஒவ்வொரு அங்க அசைவிலும், பல மன்மதர்களின் அழகு பளிச்சிட்டது. அப்போதே மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற சிவந்த மென்மையான அழகுடன் அவன் திருவடிகள் காணப்பட்டன. அழகிய விரல்களும், நகங்களும் தமது ஒளியினால், சந்திரனுக்கு ஈடான ஒளிக்கதிர்களைத் தோற்றுவிக்கின்றன.

## பாதாதி கேச வருணனை

இராமனின் திருப்பாதங்களில் வஜ்ஜிராயுதம், அங்குசம், கொடி, தாமரை வடிவிலான ரேகைகள் அழகூட்டுகின்றன. இனியநாதம் எழும்பும் கிண்கிணிச்சலங்கைகள் காலில் இடம்பெற்றுள்ளன. இரத்தினங்கள் பதித்த தங்க அரைஞாண் இராமன் இடையில் மின்னுகின்றது. திருவயிற்றில் அழகிய மூன்று மடிப்புகள். ஆழமான அழகான தொப்புள் அங்கே திருவயிற்றுக்கு அழகு சேர்க்கிறது.

பரந்தமார்பில், குழந்தைகளுக்கே உரிய அணிகலன்கள் மின்னுகின்றன. செக்கச் சிவந்த திருக்கைகளின் மேலே அழகிய விரல்களும், நகங்களும் மனதை அள்ளுகின்றன. நீண்ட கைகளிலும் அழகிய அணிகள்! சிங்கத்தின் குருளை போன்ற கழுத்தில் சங்கம் போன்ற மூன்று அழகிய ரேகைகள் இடம் பெற்றுள்ளன. மோவாயும், முகமும் அழகின் எல்லைகளாகத் திகழ்கின்றன. செக்கச் சிவந்த உதடுகளுக்குக் கலகல வென்ற இராமன் பேச்சு அழகு சேர்க்கிறது.

## பிள்ளை விளையாடல்கள்

இராமன் முகத்தில் பளீரென்ற அழகிய, சின்னஞ்சிறு இரண்டு பல்வரிசைகள். குழிவிழுந்த கன்னங்கள். மனம் கவர் நாசி. ஆநந்தம் அனைத்தையும் தருகின்ற, கலை அழகு முழுவதும் நிரம்பிய, சந்திரனின் நிலவு போன்ற புன்னகை. நீல மலர் ஒத்த கண்கள். அவற்றைக் கண்டவுடனேயே அவை பிறப்பு, இறப்பு என்ற நீர்ச்சுழலிலிருந்து உயிர்களைக் கரையேற்றும் கருணை நிரம்பியிருத்தலைக் காணமுடிகிறது. நெற்றியில் கஸ்தூரித் திலகம். குனித்த புருவங்கள். சமமான காதுகள் காண்பார் கண்களைக் கவர்கின்றன. கன்னங்கரேலென்ன சுருள் சுருளான அழகிய முடிகள். பீதாம்பரத்தில் தைக்கப்பட்ட, தங்க ரேக்குகள் பதித்த சட்டை இராமன் மேனிக்கு அழகு சேர்க்கிறது. சட்டை மடிப்புக்களும், குஞ்சங்களும்

என்னை மிகவும் கவர்ந்தன. அரண்மனை முற்றத்தில் அழகின் குவியலாய் ஓடி விளையாடும் இராமன், பளிங்குத்தரையில் தன் பிரதிபிம்பத்தைக் கண்டு மனம் மகிழ்கிறான். என்னுடன் பலவாறு விளையாடுவான். அவற்றையெல்லாம் விரிவாகக் கூற எனக்கு நாணம் உண்டாகிறது. கை கொட்டிக் கொண்டு என்னைப் பிடிக்க அவன் அருகில் வரும்போது நான் ஓடி விடுவேன். என்முன் அப்பத்தை நீட்டுவான். நான் அருகில் நெருங்கி வந்தால் சிரித்து மகிழ்வான். நான் ஓடினால் என்னைக் காணாது அழுவான். நான் அவன் திருவடிகளைத் தீண்ட நெருங்கினால் பின்பக்கமாகவே நடைபயின்று, என்னைப் பார்த்தவாறு இடம் பெயர்ந்திடுவான். ஏழை, பாமரன் வீட்டுக்குழந்தை போல் அவன் விளையாடும் போது என்னுள் ஐயம் எழும். உண்மை, அறிவு, மகிழ்ச்சி வடிவான இராமன். எளிய, ஆயினும் மகத்தான ஆடல்புரிந்து மகிழ்விப்பான்.

## மாயை இயல்பு உரைத்தல்

பறவைகளின் அரசனே! இப்படிநான் சந்தேகம் கொண்டு நின்றபோது இராமன் வீசிய மாயை என் மீதும் பாய்ந்தது. ஆனால், அம்மாயை எனக்குத் துன்பத்தைத் தரவில்லை. பிற உயிர்களை வீழ்த்துவது போன்று அம்மாயை என்னை வீழ்த்தவும் இல்லை. அதற்கு வேறு காரணம் இருக்கவேண்டும். சீதை கேள்வனான இராமனே முழு ஞான வடிவினன். மற்ற அசைவனவும், அசையாதனுவுமாகிய அனைத்தும்

மாயைக்கு ஆட்படுவனவே. சாதாரணச் சிற்றுயிருக்கும் குறைவற்ற பிரம்மஞானம் இருக்குமானால் இறைவனுக்கும், உயிர்களுக்கும் என்ன வேற்றுமை காணமுடியும்? அகங்காரம் படைத்த உயிர்களே மாயையால் சூழப்படுகின்றன. முக்குணமாயையோ இறைவனுக்குக் கட்டுப்பட்டது. உயிர்களுக்குத் தற்சுதந்திரம் கிடையாது. இறைவன் ஒருவனே கட்டுப்பாடுகள் அற்ற சுதந்திரம் உடையவன். உயிர்கள் பல. இறைவன் ஒருவனே. உயிர்களைப் பற்றிய மாயையிலிருந்து விடுபட கோடி உபாயங்களை மேற்கொண்டாலும் விடுபட இயலாது. இறைவன் வழிபாடு ஒன்று மட்டுமே மாயையை ஒழிக்கவல்லது. இறைவனை வழிபடாமல், வேறு உபாயங்களால் வீடுபேறு அடையலாம் என்று மனப்பால் குடிக்கும் மனிதன், எவ்வளவு பேரறிவு பெற்றிருந்தாலும், அவன் விலங்குக்கு ஒப்பானவனே. வாலும் கொம்பும் இவனுக்கு இல்லை என்பதே வேறுபாடு. நட்சத்திரக் கூட்டங்கள் முழுவதையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, பதினாறு கலைகளும் முழுதாகப் பெற்ற சந்திரன் உதித்தாலும், உலகில் உள்ள மலை முகடுகளில் எல்லாம் காட்டுத்தீ கொழுந்து விட்டு எரிந்தாலும், சூரியன் உதிக்காத வரை இரவை யாரால் அகற்ற முடியும்?

## தத்துவ ஒருமை

இறைவன் பேராற்றல், உயிர்களின் இயலாமை, மாயையின் கொடுமை பற்றிய காகபுஜண்டரின் இந்த

நீண்ட அனுபவ உரை இந்தியத் தத்துவ ஞானங்களின் பிழிவாக அமைந்துள்ளது. தென்னாட்டில் நிலவும் சித்தாந்த முடிபுகளுக்கும், வடநாட்டில் நிலவும் வேதாந்த முடிபுகளுக்கும் இடையே நிலவும் வேற்றுமைகளைக் களைந்து, ஒரு இணக்கத்தைக் காகபுஜண்டரின் இந்த ஞான விளக்கம் உண்டாக்குவதை இனங்காண முடிகிறது. 'வேதாந்த சித்தாந்த சமரச நிலை கண்ட வித்தகச் சித்தர் கணமே' என்ற தாயுமானாரின் மதிப்பீடு நெஞ்சில் மலர்கிறது. வடநாட்டில் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் நிலவிய சமய தத்துவ ஞானங்களின் வெளிப்பாடாகக் காகபுஜண்டரின் ஞான உரை அமைகிறது.

## வழிபாட்டின் சிறப்பு

காகபுஜண்டர் மேலும் தொடருகிறார்! கருடனே! இறைவன் வழிபாடு இல்லாமல் உயிர்களின் துயரம் தீராது. இறைவன் அடியார்களை, அஞ்ஞானம் சூழ்தல் இயலாது. இறைவன் கருணையால் உயிர்களிடத்தே நன் ஞானம் தானே உதிக்கும். எனவே, உண்மை அடியாருக்குக் குறை ஒன்றும் இல்லை. இறைவன் ஒருவனே வழிபடத் தக்கவன். நாம் அனைவரும் அவனுக்கு அடிமை என்ற பக்தி அன்னாருக்கு வளர்ந்து கொண்டே போகும். தத்துவத் தொடர்பான உரையாடல்கள் முற்றுப்பெற்றுத் தன் வரலாறு கூறும் முகமாகக் காகபுஜண்டர் உரை மேலும் தொடர்கிறது.

## இராமன் நிகழ்த்திய அற்புதம்

கருடனே! ஒரு முறை நான் குழப்பத்தில் ஆழ்ந்து தெளிவிழந்து கலக்க முற்றேன். இராமன் என் நிலை உணர்ந்து சிரித்தான். தொடர்ந்து ஓர் அற்புதத் திருவிளையாடல் நடந்தது. அதுவும் இரகசியமாகவே இராமனால் நிகழ்த்தப்பட்டது. உடன் பிறந்தவர் களுக்கும், தாய்மார்களுக்கும் கூட இது தெரியாது. கரிய திருமேனி கொண்ட, சிவந்த உள்ளங்கைகளையும், உள்ளங்கால்களையும் கொண்ட குழந்தை இராமன், ஒருநாள், மண்டியிட்டுத் தவழ்ந்தவாறு, எதிரில் காக வடிவில் நின்றிருந்த என்னைப் பிடிக்க அருகில் வந்தான். நான் பிடிபடாமல் பின் வாங்கி ஓடினேன். என்னைப் பிடிக்கத் தன் ஒரு கையை இராமன் என்னை நோக்கி நீட்டினான். மீண்டும் நான் அவன் கைகளுக்கு எட்டாமல் விண்ணில் பறந்தேன். தப்பித்து விட்டதாக நினைத்து வானில் நான் திரும்பிப் பார்த்த போது அதிர்ச்சி அடைந்தேன். இராமனின் பிஞ்சுக்கை ஒன்று மட்டும் நான் பறந்து செல்லும் இடத்திலெல்லாம் என் பின்னே வரக்கண்டு அளவற்ற வியப்படைந்தேன். நான் பிரமலோகம் சென்றேன். அங்கேயும் இராமனின் பிஞ்சுக்கரம் இரண்டு விரற்கடை நெருக்கத்தில் என்னைத் தொடர்ந்து கொண்டே வந்தது. பிரமாண்டத்தின் ஏழு உறைகளையும் நான் கடந்த போதும் இராமன் கைகள் என் அருகிலேயே தொடர்ந்து வரக்கண்டு கலக்கமடைந்தேன். அச்சத்தில்

கண்களை மூடிக்கொண்டேன். சிறிது நேரத்திற்குப் பின் கண் விழித்துப் பார்த்த போது நான் அயோத்தியில் நின்றிருந்தேன். என்னைப் பார்த்து இராமன் சிரித்தான். பின்னர் வாய்விட்டுப் பெரிதாக நகைத்தான். மறுகணம் நான் அவன் வாய்க்குள்ளே ஈர்க்கப்பட்டேன்!

## இராமபிரான் திருவயிற்றுள்

பறவைகளின் அரசனே! வாய்வழியாகப் பெருமானின் திருவயிற்றின் உள்ளிடம் சேர்ந்தேன். கண்விழித்துப் பார்த்தபோது, இராமன் வயிற்றில் பல பிரமாண்டங்களின் தொகுப்புக்களைப் பார்த்தேன். அவற்றில் விதவிதமான உலகங்கள், ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட, வியப்பூட்டும் படைப்புக்கள் இருந்தன. கோடிக்கணக்கான பிரமதேவர்கள், உருத்திரர்கள், எண்ணற்ற விண்மீன் கூட்டங்கள், சூரியர்கள், சந்திரர்கள், எண்ணற்ற உலகம் காப்போர், யம தருமர்கள், காலர்கள், கணக்கற்ற பெரிய மலைகள், பரந்து பட்ட நிலப்பரப்புகள், எண்ணற்ற கடல்கள், ஆறுகள், ஏரிகள், காடுகள், பல விதமான படைப்பு வகைகள், தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், நாகர்கள், மனிதர்கள், கின்னரர்கள், நால்வகை அசைவனவும், அசையாதனவுமாகிய உயிர்க் கூட்டங்கள் ஆகியவற்றை எல்லாம் கண்ணால் கண்டு மலைத்தேன். நான் காணாத, கேளாத, கற்பனை செய்தும் பாராத காட்சிகள் என்னை மெய்சிலிர்க்க வைத்தன. அவற்றை வருணிக்க வார்த்தைகள்

இல்லை. நான் ஒவ்வொரு பிரமாண்டத்திலும், ஒரு நூறாண்டு தங்கினேன். இவ்விதம் பல பிரமாண்டங்களைச் சுற்றிப் பார்த்தேன்.

## காணாத காட்சிகள்

நான் கண்ட ஒவ்வொரு உலகிலும் தனித்தனி பிரமதேவன், தனித்தனி விஷ்ணுமூர்த்தி, தனித்தனி சிவபிரான்கள், மனு, திக்குபாலர்கள், மனிதர், கந்தருவர், பூதங்கள், வேதாளங்கள், கிந்நரர்கள், அரக்கர்கள், பசுக்கள், பறவைகள், பாம்புகள், தேவர்கள், அசுரர்களின் பலவகைக் குழுக்கள் என எல்லாவகை உயிர்வருக்கமும் ஆங்காங்கே வேறுவேறாகக் காணப்பட்டனர். பூமி, ஆறுகள், கடல்கள், ஏரிகள், மலைகள் இவற்றின் படைப்பே வேறுவேறாகக் காட்சி தந்தன. ஒவ்வொரு அண்டத்திலும் தனித்தனியாக என் உருவத்தையும் கண்டேன். பல ஒப்பற்ற பொருள்களையும் கண்டேன். ஒவ்வொரு உலகிலும் புதிய புதிய அயோத்தி நகரங்கள். புதிய புதிய சரயு நதிகளை, புதியபுதிய ஆண் பெண் கூட்டங்களை எல்லாம் நான் கண்டு வியந்தேன்.

## மாயைப் பேராண்மை

நான் கண்ட அண்டங்களில் எல்லாம், தசரதன் கோசலை, பரதன் முதலான தம்பிகள் அனைவரும் வெவ்வேறு உருவங்களில் காட்சியளித்தனர். ஒவ்வொரு பிரமாண்டத்திலும் இராமன்

அவதாரத்தையும், அவனுடைய எல்லையற்ற பால லீலைகளையும் வெவ்வேறாகப் பார்த்தேன். யாவும் புதிது புதிதாய்த் தோன்றி என்னை வியப்பில் ஆழ்த்தின. நான் கணக்கற்ற பிரமாண்டங்களைச் சுற்றி வந்தேன். இராமன் ஒருவன் மட்டுமே எல்லா அண்டங்களிலும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டான். அதே குழந்தைப் பருவம், அதே அழகு, அதே கருணை. மாயை என்ற காற்று என்னை இட்டுச் செல்ல ஒவ்வொரு உலகமாகப் பார்த்துக் கொண்டு சுற்றி வந்தேன். பல பிரமாண்டங்களிலும் சுற்றி வர எனக்கு நூறு கற்பகாலம் பிடித்தது. (ஒரு கற்பகாலம் என்பது ஆயிரம் கோடி ஆண்டுகளைக் குறித்து வரும்) பலகாலம் சுற்றித் திரிந்தபின் என் ஆசிரமம் வந்தடைந்தேன். சிறிது காலம் அங்கு ஓய்வெடுத்தேன். பின், இராமன் மீண்டும் அயோத்தியில் பிறந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். பக்தி மேலும் மிக அயோத்திக்குப் பறந்தேன். இராமனின் பிறந்த நாள் விழாவைக் கண்டு களித்தேன். அவனை வணங்கி நின்றேன். இராமன் வாய்விட்டுச் சிரித்தான். நான் அவன் வாய்வழியாக மீண்டும் இவ்வுலகில் வந்து சேர்ந்தேன். துன்புற்றவர்களைக் காப்பவனே! இராமா! என்னைக் காப்பாற்று என்று பணிந்தேன். தன் மாயைப் பேராண்மையை அவன் சுருக்கிக் கொண்டான். தன் தாமரைக் கைகளைத் தலைமீது வைத்து ஆசீர்வதித்தான். எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருகின்ற, கருத்தாழம் மிக்க இனிய மொழிகள் இராமன் திருவாயிலிருந்து புறப்பட்டன.

### உப்பில்லாத கறி

காகபுஜண்டியே! உன் வருகையால் நான் முழுமன நிறைவடைந்தேன். நீ என்னிடம் வேண்டிய வரங்களைக்கேள்! அணிமா முதலிய சித்திகளோ, மற்ற செல்வங்களோ, எல்லா இன்பங்களின் திரட்சியான வீடுபேறோ, ஞானமோ, விவேகமோ, வைராக்கியமோ, தத்துவ ஞானமோ, உலகத்தில் முனிவர்களுக்கும் கிட்டாத நற்பண்புகளோ, இவற்றை எல்லாம் நான் இன்று உனக்கு அளிப்பேன். ஐயப்படவேண்டாம். உன் மனதில் என்ன தோன்றுகிறதோ அதைக்கேள். மேலான இராமன் மொழி கேட்டு, நான் அன்பில் மிதந்தேன். சிறிதுநேரம் நான் அவன் வழங்க முன்வந்த பேறுகளை நினைவு கூர்ந்தேன். யாவற்றையும் அளிப்பதாக அவன் கூறியது உண்மைதான். ஆனால், தன்னிடத்தில் பக்தியை அளிப்பதாக அவன் கூறவில்லையே என்பதைப் பகுத்துணர்ந்தேன். பக்தி கலவாத பண்புகள் யாவும், பெற்ற இன்பங்கள் அனைத்தும் உப்பு இல்லாத கறிவகைகளைப் போன்றதல்லவா என்று எண்ணமிட்டேன்.

### புஜண்டர் வேண்டிய வரம்

கருடனே! என் உள்ள ஓட்டத்தை இராமன் அறிந்து கொண்டு புன்முறுவல் பூத்து நின்றான். இராமா! நீ மனம் மகிழ்ந்து வரம் அளிப்பதானால், என்மீது கருணையும், அன்பும் காட்ட நினைந்தால், என் உள்ளத்தில் உள்ளதை வரமாகக் கேட்கிறேன்.

உன்னிடத்தில், இடைவிடாத, நிறைந்த, பரிசுத்தமான பக்தியைப் பற்றி வேதங்களும், புராணங்களும் எடுத்துரைக்கின்றன. அதனையே யோகத்தில் தலைநிற்கும் முனிவர்களும் தேடுகிறார்கள். மிகச் சிலர் மட்டுமே உன் அருளால் அதனைப் பெறுகிறார்கள். இந்த வரத்தைக் கேட்கவோ, பெறவோ எனக்குத் தகுதியிருப்பதாக நினைத்து நான் கேட்கவில்லை. நீயோ, பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றித் தரும் கற்பகத்தரு. சரணடைந்தவர்களுக்குத் தகுதி பாராது இன்பமளிப்பவன். கருணைக் கடல். மகிழ்வின் இருப்பிடம். இராமனே! அருள் கூர்ந்து நின் தாள் மலர்களில் என்றென்றும் நீங்காத அந்த பக்தியை வழங்கியருள் என்று காகபுஜண்டர் வேண்டி நின்றார்.

## இராமன் வழங்கிய வரம்

காகபுஜண்டரின் வேண்டுகோளைச் செவிமடுத்த இராமன் உளம் மகிழ்ந்தான். மிகவும் இன்பமளிக்கும் இனிய மொழிகளை இராமன் பேசினான். காகபுஜண்டரே நீர் இயல்பாகவே அறிவுமிக்கவர். அறிவுடையாருக்குத்தான் தனக்கு நன்மை தருவது எது என்பதை அறிந்து, வேண்டுகோள் வைக்கமுடியும். நீர் எல்லா இன்பங்களுக்கும் அடிப்படையாக விளங்கும் பக்திவேண்டும் என்று வரம் கேட்டுள்ளீர். உலகில் உம்மைப்போல் பேறு பெற்றவர் ஒருவரும் இலர். ஜபம், யோகம் போன்ற நெருப்புகளால் தம் உடலை வருத்திக்கொள்ளுகிற முனிவர்கள், கோடி முயற்சி

செய்தாலும் இந்தப் பக்தியைப் பெறுவதில்லை. அந்தப் பக்தியை நீர் வேண்டினீர்! உம் அறிவை மெச்சுகிறேன்! இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. பறவை வடிவினரே! என் அருளினால் உமக்கு இனி எல்லா நற்பண்புகளும் உள்ளத்தில் குவியும். பக்தி, ஆத்ம ஞானம், சாஸ்திர ஞானம், வைராக்கியம், யோகம், என்னுடைய லீலைகள், அவற்றின் இரகசியங்கள், அவற்றின் பிரிவுகள், இவற்றின் நுட்பமெல்லாம் என் அருளால் உமக்குத் தெரியவரும். இவற்றைப் பெற நீர் இனி எவ்விதச் சாதனைகளும் செய்து துன்புறவேண்டா. மாயையினால் உண்டாகும் எந்தக் கலக்கங்களும் இனி உம்மை அணுகா. இராமன் வழங்கிய இன்மொழிகள் கேட்டுக் காகபுஜண்டர் மெய்சிலிர்த்து வணங்கினார்.

## இராமன் விடுத்த செய்தி

மேலும் இராமன் பேசினான். அநாதியான பிறப்பற்ற, முக்குணங்களையும் கடந்த, கல்யாண குணங்கள் நிரம்பிய பரப்பிரும்மம் நானே என்பதை நீர் அறிவீர்! எனக்குப் பக்தர்களிடம் அன்பு உண்டு. இவ்விதம் உணர்ந்து மன, மொழி, மெய்களால் என் திருவடிகளில் திடமான பக்தி கொள்வீர்! சத்தியமான, எளிதாக அறியக் கூடிய, வேதங்களில் கூறப்படுகின்ற அப்பழுக்கற்ற என் சொல்லைக் கேட்பீர்! உமக்கு என் முடிவான எண்ணத்தைக் கூறுகிறேன். அதைக் கவனத்தில் கேட்டு உள்ளத்தே இருத்திக்கொள்வீர்! "எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னை வழிபடு"

என்பதே நான் விடுக்கும் முடிபான செய்தி. இவ்வுலகில் அனைத்தும் என் மாயையில் உண்டானது. இதில் பலவகையான சராசரங்கள் உள்ளன. இவை எல்லாமே எனக்குப் பிரியமானவை. ஏனெனில் அவை என்னிடம் உண்டானவை. இவற்றில் எல்லாவற்றையும் விட மனிதனை எனக்கு மிகவும் பிடிக்கும்.

## இராமனுக்குப் பிடித்தமானவை

மனிதர்களுள் இருபிறப்பாளர் என்று போற்றப்படும் பிராமணர்கள், க்ஷத்ரியர்கள், வைசியர்கள் இவர்கள் என் அன்புக்குரியவர்கள். அவர்களுள் வேதங்களைத் தங்கள் குரலில் தாங்கி வாழபவர்கள், அவர்களுள்ளும் வேத நெறிப்படி வாழ்பவர்கள், அவர்களுள் வைராக்கியமுடையவர்கள், அவர்களுள் எல்லாவற்றையும் பற்றிய உண்மை ஞானம் படைத்தவர்கள், அவர்களுள் ஆத்ம ஞானம் பெற்றவர்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவர்கள். ஆத்ம ஞானம் உணர்ந்தவர்களுள் என் அடியார்கள், என்னையே கதியாகக் கொண்டவர்கள், வேறு பற்றற்றவர்கள் எனக்குப் பிரியமானவர்கள். இதுவே சத்தியம். எனக்கு என் அடியார் போல வேறு எவரும் பிரியமானவர் அல்லர். இராமனின் உபதேசங்களில் அடியவர்கள் மீது இறைவன் கொண்டுள்ள அளப்பரிய கருணை வெளிப்பட்டு நிற்கிறது. காகபுஜண்டர் நிறைந்த நெஞ்சினராய் இராமன் கருணை மொழிகளில் கரைந்து நிற்கிறார்.

## தேவ ரகசியங்கள்

மேலும் இராமன் தேவ இரகசியங்களைக் காகபுஜண்டரிடம் வெளிப்படுத்துகின்றான். காகவடிவில் வாழும் முனிவரே! பக்தியற்றவர்கள் பிரமதேவனே யானாலும் அவர்கள் பால் என் அன்பு சாதாரண ஒரு சிற்றுயிர்மேல் செலுத்தும் அன்பு போலவே அமையும். ஆனால், பக்தியுள்ளவன் மிகவும் இழிந்தவனாக இருந்தாலும் கூட இருக்கலாம்: அல்லது ஒரு புழுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவன் எனக்கு உயிரினும் இனியவன். இதனை என்னால் உறுதிபட உரக்கக் கூறமுடியும். தூயவனும், நன்நடத்தையுடையவனும், நன்மதி படைத்தவனுமாகிய தொண்டனை யாருக்குத்தான் பிடிக்காது. வேதங்களும், புராணங்களும் கூறும் நீதி இதுவே!

## இராமனுக்குப் பிரியமானவர்கள்

ஒரு தந்தைக்குப் பல பிள்ளைகள். தனித்தனி குணநலன்களும் இயல்புகளும் கொண்டவர்கள். ஒருவன் பண்டிதன், ஒருவன் ஞானி, ஒருவன் செல்வந்தன், ஒருவன் சூரவீரன், ஒருவன் கொடையாளி, ஒருவன் எல்லாம் அறிந்தவன், ஒருவன் தரும நெறிப்படி வாழ்பவன். தந்தைக்கு இவர்கள் அனைவரிடமும் ஒரே விதமான அன்பு நிலவும். ஆனால் இவர்களில் ஒருவன் மனதாலும் சொல்லாலும், செயலாலும் தந்தைக்கே பக்தனாகச்

சேவை புரிவானாகில், கனவில் கூட வேறு கடமை கருதானாகில், அவன் எல்லா வகையிலும் முட்டாளானாலும் சரி, அந்தப் பிள்ளை தந்தைக்கு உயிரே போலப் பிரியமானவன் ஆகிறான். உலக உயிரினங்களில், எவர் தற்பெருமையையும், மாயையையும் களைந்து, மன, மொழி, மெய்களால் என்னை வழிபடுகிறாரோ, கபடமின்றி எல்லாமாகவும், என்னைப் பாவித்துப் போற்றி நிற்கின்றாரோ, அவர் ஆணாகட்டும், அலியாகட்டும், பெண்ணாகட்டும், சராசரங்களுள் எப்பிறவியாகட்டும், அவரே எனக்குப் பிரியமானவர்.

### யார் இனியர்?

பறவை வடிவினரே! நான் உம்மிடம் உண்மையைக் கூறுகின்றேன். வேறு ஒன்றில் கருத்து இல்லாத தூயவனான பக்தன் எனக்கு உயிரினும் இனியவன். நீரும், இவ்விதம் உணர்ந்து, எல்லா ஆசைகளையும், பொறுப்புக்களையும் ஒதுக்கிவிட்டு என்னையே வழிபட்டு வருவீர்! உம்மைக் காலனும் அணுகமாட்டான். இடைவிடாது என்னை நினைந்து வழிபட்டு வாரீர் என்று இராமன் மனம் திறந்தான்.

### நாக்கிலாக் கண்கள்!

இராமனின் சொல்லமுதம் கேட்கக் கேட்கத் திகட்டவில்லை. காகபுஜண்டர் மேனி சிலிர்த்தது. அவர் உள்ளத்தில் எழுந்த பேரானந்தத்தைக் கேட்ட காதுகளும், பற்றிய மனமும் மட்டுமே அறிய

இயலும். அவ்வின்பம் வார்த்தைகளுக்குள் வசப்படாது. இராமன் அழகைக்கண்களால் மட்டுமே உணர முடியும். நாவிருந்தால் கண்களால் அந்த அழகைப் பேசி மகிழ முடியும். கண்களுக்குத்தான் நாக்கு இல்லாது போய்விட்டதே! அவற்றால் எப்படிக் கூற முடியும். வினா எழுப்பித் துளசிதாசர் காகபுஜண்டர் பெற்ற பேரானந்தத்தை ஒருவாறு நம்மை உணர வைக்க முயல்கிறார்.

### பக [illegible]ச் சுகம் [illegible]ல்லை

கருடனே! இவ்வாறு இராமன் அருள்பெற்ற நான் கொஞ்ச காலம் அயோத்தியில் தங்கியிருந்தேன். இராமன் கருணையால் பக்திவரம் பெற்றேன். பின்பு அவன் திருவடிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டு நான் என் ஆசிரமத்தைச் சென்றடைந்தேன். இவ்வாறு இராமன் என்னைத் தன்னுடையவன் ஆக்கிக் கொண்டது முதல் உலகமாயை என்னை நெருங்க வில்லை. நான் உனக்கு மேலும் சில அனுபவங்களைக் கூறுவேன். இறைவனை வழிபடாமல் துயரம் தீராது. அவன் அருள் இல்லாமல் அவன் ஆளுமையை அளந்தறிதலும் இயலாது! இறைவன் பேராண்மை தெரியாது. அவனிடம் நம்பிக்கை பிறவாது! நம்பிக்கை இல்லாமல் அன்பு பிறவாது! குருநாதர் துணையின்றி ஞானம் கைவராது. வைராக்கியமின்றியும் ஞானம் உண்டாகாது. அதுபோல் இறைவனிடம் பக்தி இன்றிச் சுகம்

வாராது. இயல்பான மகிழ்ச்சியின்றி யாராலும் அமைதி பெறமுடியாது!

## அமைதிக்கு வழி

கருடனே கேள்! நீர் இன்றிப்படகு நகருமா? தரையின்றி மரங்கள் முளைக்குமா? ஆகாயம் இன்றி இடைவெளி கிடைக்குமா? பூமியின் சார்பின்றி மணத்தை நுகரமுடியுமா? நெருப்பின்றி ஒளி பரவுமா? நீரின்றி உலகில் சுவை உண்டா? வெளிச்சமின்றி உருவம் துலங்குமா? காற்றின் உணர்வின்றி ஒன்றைத் தீண்ட முடியுமா? இவைபோல் இறைவனை வழிபடாது பிறப்பு, இறப்பு என்ற பயம் தீராது. பக்தியின்றி இராமன் மனம் இளகமாட்டான். அவன் திருவருளின்றி உயிர்க்குலங்கள் கனவில் கூட அமைதி பெற முடியாது.

## கருடன் கசிவு

திடமதி படைத்த கருடனே! இவ்விதம் ஆராய்ந்து, வீணான, எல்லாவிதமான, பொருத்தமற்ற ஐயங்களை எல்லாம் துறந்து, இறைவனே ஆனந்த நிதி! சுகமளிப்பவன்! என்பதை உணர்ந்து அழகன் இராமனை வழிபடுவாய்! காகபுஜண்டரின் இனிய மொழிகளைக் கேட்டு பறவைகள் தலைவனான கருடன் தன் இறக்கைகளை உதறினான். அவன்கண்களில் நீர் பெருகிற்று. தான்முன் அடைந்த குழப்பத்தை நினைந்து அவன் வருந்தினான். அநாதியான பரம்பொருளை மனிதனாக நினைத்து

ஐயுற்றமை நாணத்தைத் தந்தது. கருடன் காகபுஜண்டரின் திருவடிகளில் தம் தலையை வைத்து வணங்கினான். அவரை இராமனுக்கு நிகராக வைத்துக் கருடன் பக்தி செய்தான். குருநாதரே! என்னை ஐயம் என்ற பாம்பு கடித்து விட்டது! அதனால் குதர்க்கம் என்ற விஷம் பலவாறாக என்னிடம் ஏறிவிட்டது. நாகத்தின் விஷத்தை இறக்க உலகவர் 'காருடி' என்ற என் கருட மந்திரத்தை உரைப்பர். கருடனாகிய எனக்கே வந்து விஷம் ஏறிவிட்டது. தங்கள் உருவத்தில் இராமன் என்னைப் பிழைக்கவைத்து விட்டான். தங்கள் அருளினால் என் மயக்கம் தீர்ந்தது. இராமனின் ஒப்பற்ற இரகசியத்தைப் புரிந்து கொண்டேன். நன்றிப் பெருக்கால் கருடன் கண்களில் நீர் கசிந்தது.

## காகவடிவம் ஏன்?

மனம் தெளிந்த நிலையில் கருடன் காகபுஜண்டரைப் பலவாறு மெச்சிப் புகழ்ந்தான். ஐயனே! நான் விவேகமின்மையால் தங்களை வினவுகிறேன்! கருணைக் கடலே! தாங்கள் என்னைத் தங்கள் தொண்டனாகக் கருதி ஆதரவுடன் என் கேள்விக்கு விடை பகர வேண்டுகின்றேன். தாங்கள் எல்லாம் அறிந்தவர். தத்துவம் உணர்ந்தவர். மாயைக்கு அப்பாற்பட்டவர். சிறந்த மதி நலமும், நன்நடைத்தையும், நேர்மையும் கொண்டவர். ஞான, வைராக்கிய, விஞ்ஞானங்களின் உறைவிடம். இராமனின் அன்புக்குரிய தொண்டர். தாங்கள் ஏன்

இந்தக் காக்கை உருவம் எடுத்தீர்கள்? இந்த இனிய இராம சரிதத்தைத் தாங்கள் எங்குக் கற்றீர்கள்?

## ஞானமா? யோகமா?

ஐயா! மகாபிரளய காலத்தில் கூடத் தங்களுக்கு அழிவு கிடையாது என்று சிவபெருமான் கூறக் கேட்டிருக்கிறேன். சிவன் மொழி பொய்மையாதல் இல்லை! நாகர்கள், மனிதர்கள், தேவர்கள் முதலான சராசர ஜீவர்கள் முதலாய உலகமனைத்தும் எல்லாமே காலத்தால் விழுங்கப்படுபவை தாமே! எண்ணற்ற பிரமாண்டக் கொப்பரைகளை எல்லாம் அழிக்கும் காலம் தவிர்க்க முடியாததாயிற்றே! இவ்விதமான, மிகவும் பயங்கரமான காலம் உங்களிடம் இது நாள் வரை நெருங்க முடியவில்லையே! இதற்கு என்ன காரணம்? இது ஞானத்தின் திறனா? அன்றி யோகத்தின் திறனா?

காகபுஜண்டரின் உண்மையான வரலாற்றையும், வாழ்வியல் இரகசியத்தையும் நாம் அறிந்து கொள்வதற்கு உரிய களமாகக் கருடனின் வினாக்கள் அமைகின்றன.

## புஜண்டர் வரலாறு

கருடன் கேட்ட கேள்விகளால் காகபுஜண்டர் மனம் மகிழ்ந்தார். கருடனே! நீ எழுப்பிய வினாக்களால் எனக்குப் பல பிறவிகளின் நினைவு வந்து விட்டது! நான் என் கதையை, நீ விரும்பியவாறு

கூறுகிறேன். கேட்டுக்கொள் என்று கூறிக் காகபுஜண்டர் தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

## உடலின் சிறப்பு

கருடனே! நான் இந்த காக வடிவத்தில்தான் இராமனிடம் பக்தி செய்தேன். அவன் அருளையும் பெற்றேன். அதனால் இந்த உடலிடம் எனக்கு ஈடுபாடு மிகுதியாக உள்ளது. எதனால் ஒருவனுக்கு அவன் விருப்பம் நிறை வேறுகிறதோ, அதனிடம் அவன் அன்பு கொள்வது இயற்கை அல்லவா? தனக்கு மிக மேன்மை அளிப்பது, ஒரு அற்பமான பொருளானாலும், அதனிடம் அன்பு கொள்ள வேண்டுமெனப் பெரியோர்களும் கூறுவர். வேதங்களும் இதனை ஏற்கின்றன. பட்டாடைகளுக்கு மூலமான பட்டு இழைகளைத் தரும் பட்டுப்புழு, தூய்மை அற்றதுதான். ஆயினும் அது தரும் பயன் பற்றி அதனிடம் அனைவரும் நேசம் கொள்கிறோம். எனவே, இக்காக உடல்மேல் எனக்கு வெறுப்பு ஏதும் இல்லை. நான் விரும்பும் போது எனக்கு மரணம் வரும். ஆயினும், நான் இந்த உடலை விடப்போவதில்லை. உடலின் உதவியின்றி, உயிர் ஈடேற்றம் பெற இயலாது. இறைவனை வழிபடவும் உடலே துணை. நான் சுற்றிச் சுற்றிப் பல பிறவிகள் எடுத்துப் பார்த்து விட்டேன். இப்பிறவியில் பெற்றபேறு அவற்றில் எல்லாம் எனக்குக் கிடைக்கவில்லை. இப்போதும், நான் எடுத்த பல முற்பிறவிகளின் நினைவு பசுமையாக என்னுள்

இருக்கிறது. சிவபெருமான் அருளால் என் மதியில் குழப்பம் ஏற்படவில்லை. எனவே, நினைவுத் தடம் பிறழாமல் நிற்கிறது.

## கலியுகத்தில் நடந்தது

கருடனே! என் முன்னைப் பிறவிகளுள், ஒன்றை உனக்குக் கூறுகிறேன். என் முன்னை வரலாறு உனக்கு உள்ளத்தில் பக்திப் பயிர் வளர நன்னீராக அமையும். துன்ப நீக்கம் அதன் விளைவாக இருக்கும்.

முன்பு நிலவியது ஒரு கற்பகாலம். அதில் பாபங்களுக்கு அடிப்படையான கலியுகம் ஒன்று வந்தது. அக்காலத்தில் ஆண்களும் பெண்களும், வேதநெறிக்கு முரண்பட்டனர். அதர்மத்தையே வாழ்வாகக் கொண்டனர். அக்காலத்தில், நான் அயோத்தி சென்று ஒரு வேளாண்குலத்தில் பிறவி எடுத்தேன். மன, மொழி, மெய்களால் நான் சிவ பக்தனாக வாழ்ந்தேன். அப்பற்றுறுதி காரணமாக என்னுள் கர்வம் எழுந்தது. பிறதெய்வங்களை எல்லாம் துச்சமென நினைத்து ஏசினேன். அக்காலை பெற்றிருந்த செல்வத்தால் செருக்கும் என்னுடன் சேர்ந்து கொண்டது. பெரிய வாய்வீச்சு உள்ளவனாகவும், சிந்தனையில் கூர்மையும், கொடுமையும் உள்ளவனாகவும், உள்ளத்தில் அடங்காத தற்பெருமை மிக்கவனாகவும் வாழ்ந்திருந்தேன். இராமன் பிறந்த நகரில் வாழ்ந்திருந்தும் அவன் பெருமை அறியாதவனாகவே

இருந்தேன். இப்போது இருப்பதுபோல் இராமபக்தி அப்போது எனக்கு இல்லை.

ஏதாவது ஒரு பிறவியில், எவனாவது ஒருவன் அயோத்தியில் வாழ்ந்திருந்தால், அவன் அடுத்து வரும் பிறவிகளில் இராமபக்தி மிக்கவனாக வாழ்வான் என்று வேதங்களும், சாத்திரங்களும், புராணங்களும் உறுதிபட மொழிகின்றன.

## கலியின் கொடுமை

நான் குறித்த அக்கலிகாலத்தில் ஆண் பெண் இரு பாலரும் பாபத்தில் ஈடுபட்டிருந்தனர். கலியுகத்தின் பாபங்கள், நற்செயல்கள் அனைத்தையும் விழுங்கி விட்டன. அறநூல்கள் மறைந்து விட்டன. ஆணவம் மிக்கவர்கள், தம் அறிவு சென்ற வழியில் சென்று, அதீதக் கற்பனையில் தீயவழிகளை வகுத்துவிட்டனர். மக்கள் அனைவரும் குழப்பத்தில் ஆழ்ந்தனர். பேராசை என்னும் நாகத்தால் நற்செயல்கள் விழுங்கப்பட்டன. நால் வருணங்களும், ஆச்சிரமங்களும் மறைந்து விட்டன. மக்கள் வேத நெறிக்கு மாறான வாழ்வையே மேற்கொண்டிருந்தனர். பிராமணர்கள் வேதங்களை விற்றுப் பிழைத்தனர். மன்னர்கள் மக்களைக் கசக்கிப் பிழிந்து சுகவாழ்வில் தலைப்பட்டனர். எவனுக்கு எது தோன்றுகிறதோ அவனுக்கு அதுவே வழி. பிறரைத் துன்புறுத்துபவன் பேரறிஞனாகக் கருதப்பட்டான்.

## மூட உலகம்

ஆடம்பரம் மிக்க கர்வம் கொண்டவர்கள் 'சாது' என்று போற்றப்பட்டனர். பிறர் பொருளைக் கொள்ளை அடிப்பவன் கெட்டிக்காரன் என்று புகழப்பட்டான். ஆடம்பரக்காரர்கள், ஆசார சீலர்களாகக் கருதப்பட்டனர். எவன் பொய் பேசுகிறானோ, எவன் சிரித்துப்பேசி வேடிக்கை காட்டுகிறானோ அவனை எல்லாம் நற்பண்பாளன் என்று மக்கள் நம்பி நின்றனர். எவனுக்கு நன்னடத்தை இல்லையோ, எவன் வேத நெறியை விட்டு நடைபயிலுகிறானோ கலியுகத்தில் அவனே 'ஞானி' யாகி விட்டான்; அவனையே பெரிய வைராக்கிய சீலன் என்றது மூட உலகம். நகங்களை நீளமாக வளர்த்தவனும், தலை முடியை வளர்த்துச் சடையாகத் திரித்துக் கொண்டவனும் எவனோ, அவனைத் 'தவசி' என்றது உலகம். மங்கலமற்ற வேடம் பூண்டு, அமங்கல அணி அணிந்து உண்ணத்தக்கது, தகாதது என்ற பாகுபாடின்றிக் கண்டதை எல்லாம் உண்கிறானோ அவனே 'யோகி' யாகப் புகழப் பட்டான். அவனையே 'சித்த புருஷன்' என்றும் அறிவற்ற உலகம் போற்றி நின்றது. தீங்கு விளைப்பார் பலரும் புகழப்பட்டனர். மன, மொழி, மெய்களால் பொய்க்கதைகள் பேசித் திரிவார் 'பேச்சாளர்கள்' என்று பிறழ உணரப்பட்டனர்.

## கீழ்மேல் மேல் கீழாக

கருடனே! கலியின் கொடுமை சொல்லும் தரமன்று, இக்காலத்தே ஆண்கள் பெண்களுக்கு அடங்கி வாழ்ந்தனர். குரங்காட்டி ஆட்டியபடி குதிக்கும் குரங்குபோல ஆடவர்கள், பெண்கள் ஆட்டுவித்தவாறு ஆடினர். ஞானமற்றவன் எல்லாம் ஞான உபதேசம் செய்தான். அவன் கழுத்தில் பொய்யாகப் பூணூல் அணிந்து கொண்டு அருவருக்கத் தக்க தானத்தைப் பெறுவான். மக்கள் அனைவரும் காமத்திற்கும், கோபத்திற்கும் ஆட்பட்டுப் பேராசைப் பிடித்து அலைந்தனர். தேவர்கள், சாதுக்கள், வேதங்கள், நல்லோர்கள் அவமதிக்கப்பட்டனர். நற்பேறு இல்லாத மகளிர்கள், நற்பண்புள்ள, அழகிய தன் கணவனை விட்டுப் பிற ஆண்களுக்கு அடிமைப்பட்டனர். மங்கலப் பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் கிடைக்கவில்லை. விதவைகளோ அன்றாடம் விதவிதமாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டனர். குரு குருடனாக இருந்தான். சீடன் செவிடனாக இருந்தான். வயிற்றுப்பிழைப்பிற்கு உரிய வழிமுறைகளையே, தருமம் என்று பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்பித்தனர். நான் அந்தக்கலி காலத்தின் கொடுமையை நேராகப் பார்த்தேன்.

## இன்றுபோல் அன்றும்

பிராமணன் படிப்பதில்லை. பேராசை பிடித்துக் காமத்தில் ஆழ்ந்து, ஆசாரத்தைவிட்டு, முட்டாளாகி, விபசாரிக்குப் புருஷனாக வாழ்ந்தான்.

துறவி பெரும் செல்வத்தைச் சேர்த்து மடத்தை மாளிகையாக்குகிறான். அவனிடம் வைராக்கியம் இல்லை. சிற்றின்பத்தில் ஆழ்கிறான்.

மனைவி முகம் பார்க்கும் வரை மகன் தாய் தந்தையரை மதிக்கிறான். மாமனார் உறவு பிடித்துக் கொண்டவுடன், தன்வீடு பகை வீடாகி விடுகிறது.

தெய்வங்கள் மழை பொழிவதில்லை. பூமியில் விதைத்த விதை முளைப்பதில்லை.

ஐந்து ஆண்டுகளோ, பத்து ஆண்டுகளோ ஆயுள். ஏதோ கற்பம் முடிந்தாலும் நமக்கு நாசமில்லை என்ற செருக்கில் மனிதர்கள் வாழ்கிறார்கள்.

நல்ல குலத்தில் பிறந்தவனோ, தாழ்நிலையில் பிறந்தவனோ, எல்லோரும் பிச்சை எடுக்கிறார்கள்!

புலனடக்கம், தானம், பரிவு, மற்றவரைப் புரிந்துகொள்ளுதல் இவை எவரிடமும் இல்லை.

ஆண் பெண் அனைவரும் உடலைப் பேணுவதிலேயே கருத்தைச் செலுத்துகிறார்கள்.

## கலியுகத்தில் ஒரே சிறப்பு

கருடனே! கேள் கலிகாலம், பாவங்களுக்கும் தீங்குகளுக்கும் உறைவிடம். ஆயினும் கலியுகத்தில் ஒரு மேன்மை உண்டு. முயற்சி இன்றியே உலகியல் பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கும். கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகங்களில், பூஜை, யாகம்,

யோகம் இவைகளால் என்ன கதி கிடைக்குமோ, அது கலியுகத்தில், இறைவன் திருநாமத்தைக் கூறுவ தாலேயே கிடைத்து விடும்.

நாமத்தின் பெருமை கலியில் கண் கூடு.

மற்றொரு மேன்மை. நல்லதை நினைத்தாலே புண்ணியம்.

மனிதனுக்கு இறைநம்பிக்கை மட்டும் இருந்து விட்டால் கலியுகம் போலச் சிறந்தது வேறு ஒரு யுகமில்லை.

அறத்தின் நான்கு கால்கள், உண்மை, கருணை, தவம், தானம் என்பன. இவற்றுள் கலிகாலத்தில் தானம் சிறந்தது.

## நால்யுகப் பண்புகள்

தூய சத்துவகுணம், சமபாவனை, தத்துவ ஞானம், மனத்தெளிவு என்பன கிருதயுகப் பண்புகள்.

சத்துவகுணம் மேலிட, சிறிது ரஜோ குணமும் கடமைப் பற்றும் திரேதாயுகப் பண்புகள்.

ரஜோ குணம் மேலிட, சத்துவகுணம் குறைந்து, சிறிது தமோ குணம் கலந்தது துவாபர யுகப் பண்பு.

தாமசகுணம் மேலிட்டு, ரஜோகுணம் குறைந்து, நாற்புறமும், பகையும் விரோதமும் மலிந்திருப்பது கலியுகத்தின் இயல்பு.

எவனுக்கு இறைவன் திருவடிகளில், உள்ளார்ந்த பக்தியுள்ளதோ அவனை யுகதர்மம் பாதிக்காது.

**உஜ்ஜயினியில்...**

பறவைகளின் தலைவனே, இத்தகைய கலிகாலத்தில் பல ஆண்டுகள் நான் அயோத்தியில் வாழ்ந்திருந்தேன். ஒரு சமயம் அங்கே பஞ்சம் வந்தது. நான் பஞ்சத்திலிருந்து பிழைக்க வெளியூர் சென்றேன். அங்கும் பஞ்சம் துரத்தியதால் ஏழ்மையுற்று, மெலிந்து, அவதியுற்றுத் துயரத்துடன் உஜ்ஜயினி சென்று சேர்ந்தேன். சில காலம் முயன்ற பின் சிறிது செல்வம் சேர்ந்தது. சிவனை வழிபட்டு வந்தேன். அவ்வூரில் ஒரு பிராமணர் வேத நெறிப்படி வாழ்ந்து சிவபூஜை செய்து கொண்டிருந்தார். அவர் பரம சாது. பரம்பொருளை உணர்ந்தவர். சிவனை வழிபட்ட போதும், திருமால் வழிபாட்டில் வெறுப்புற்றவர் அல்லர். நான் அவரை அடைந்து கபட உள்ளத்துடன் அவருக்குச் சேவை புரிந்தேன். அந்தப் பிராமணர் நேர்மையுள்ளவர்; அருள்படைத்தவர். என் பொய் வேடம் அறியாத அவர், என் போலியான பணிவு கண்டு மகிழ்ந்து தன்மகன் போல் என்னிடம் அன்பு செய்து கல்வி கற்பித்தார். அப்பெருமகனார் சிவமந்திரம் உபதேசித்தார். நான் மகாகாலர் ஆலயம் சென்று மந்திர ஜபம் செய்தேன். என் உள்ளத்தில் அகங்காரமும், டாம்பீகமும் நிறைந்தன.

## ஆசிரியர் அறிவுரை

நான் கொடியவனாகவும், பாவ எண்ணங்கள் படைத்தவனாகவும் வாழ்ந்ததால், திருமால் அடியவர்களை, அந்நெறியில் வாழும் அந்தணர்களைக் கண்டால் எரிந்து விழுவேன். விஷ்ணுமூர்த்தியை வெறுத்தேன். என் துவேஷம் கண்டு என் குருநாதர் வருந்தினார். அன்றாடம் அவர் எனக்கு அறிவுரை கூறினார். அவர்மேல் எனக்குக் கோபம் மூண்டது. கல்முடையவனுக்கு நீதி பிடிப்பதில்லை. ஒரு முறை என்னை அருகில் அழைத்து என் குருநாதர், சிவபெருமானை வழிபடுவதற்கு ஒரு நல்ல பலன் உண்டு என்றால், அது இராமன் திருவடிகளில் பக்தி பூணுவதாகவே அமையும். சிவனும் பிரமனும் கூட ஹரியை வழிபடுகின்றனர். நீ துவேஷம் கொள்வது தவறு என்று அறிவுரை கூறினார்.

## கீழோர் இயல்புகள்

'சிவபெருமான் ஹரியின் அடியவர்' என்று என் குருநாதர் கூறியது கேட்டு என் உள்ளம் கொதித்தது.

தாழ்பிறவி படைத்த நான் ஆசாரியனிடம் அறிவைப் பெற்றிருந்தும் பாலூற்றி வளர்த்த பாம்பாக மாறினேன். இரவு பகல் பாராது என் குருநாதருக்குத் துரோகங்கள் பல செய்தேன். கருணை மிக உடைய அவர் என்செயல்களை அறிந்திருந்தும் என்மீது சிறிதும் கோபம் கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் நல்லுபதேசம் செய்தார்.

தாழ்ந்தவன், எவனால் பெருமை பெறுகிறானோ, அவன், முதல் முதல் தனக்குப் பேருதவி செய்தவனையே அடித்துக் கொன்று விடுவான்.

நெருப்பில் உண்டாகும் புகை, விண்ணில் மேகம் போல் பரந்து அந்த நெருப்பையே அணைத்து விடுகிறது.

தெருவில் படிந்துள்ள புழுதி, ஆதரவற்று மிதிபடும்போது பொறுமையாக இருக்கும். ஆனால், தன்னைக்கிளப்பி மேலே தூக்கி விடும் காற்றைக் கனமாக்கி அரசன் கண்களிலும், கிரீடங்களிலும் போய் அமர்ந்து விடும் திமிர் கொண்டது.

கருடனே! கேள்! இவற்றை எல்லாம் அறிந்த மதி நுட்பம் படைத்தவர்கள், தாழ்ந்தவர்களுடன் உறவு வைத்துக் கொள்வதில்லை.

துஷ்டனுடன் சண்டையும் போடாதே! அன்பும் கொள்ளாதே என்று கவிஞர்களும் அறிஞர்களும் ஒருமுகமாக நீதியுரைப்பார்கள்.

துஷ்டர்களைக் கண்டபோது, நாயைக்கண்டது போல், தூர விலகி விடவேண்டும்.

நான் துஷ்டனாக இருந்ததால், என் இதயத்தில் கபடம் நிறைந்திருந்ததால், குருநாதர் கூறிய இதமான மென்மொழிகள் எனக்குப் பிடிக்காமல் போய்விட்டன.

## குருவுக்கு அநீதி

ஒருநாள் உஜ்ஜயினி மகா காலர் ஆலயத்தில் நான் சிவநாமஜெபம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என் குருநாதர் அங்கே வந்தார். கர்வம் மிகுந்திருந்த நான், அவர் வருகை அறிந்தும் எழுந்து அவரை வணங்கவில்லை. குருநாதர் இரக்கம் உள்ளவர். அவர் உள்ளத்தில் சிறிதும் கோபம் இல்லை. அதனால் என் செயலுக்காக அவர் வருந்தி ஒன்றும் கூறவில்லை. ஆனால் கோயிலில் குடிகொண்டிருந்த மகாகாலருக்கு என் செயல் பொறுக்கவில்லை. ஆலயத்தில் ஓர் அசரீரி எழுந்தது.

### மகாகாலர் சாபம்

'அட! பாக்கியமற்றவனே! முட்டாளே! கர்வம் பிடித்தவனே! உன் குருநாதருக்குக் கோபம் வரவில்லை. அவர் அவ்வளவு கருணை உள்ளம் படைத்தவர். ஆனாலும், நான் உன்னைச் சபிக்கிறேன். நியாயம் கெடுவதை நான் பொறுக்கமாட்டேன்! நான் உனக்குத் தண்டனை அளிக்காவிட்டால் வேத நெறியே பாழாகிவிடும்.

எவன் குருவிடம் அருவருப்புக் கொள்கிறானோ, அவன் கோடியுக காலம் ரௌரவ நரகத்தில் ஆழ்ந்து கிடப்பான்! பிறகு, புழுப் பூச்சிகளாய்ப் பதினாயிரம் பிறவிகளெடுத்து அல்லற்படுவான்.

நீ குருநாதர் முன்பு மலைப்பாம்புப் போல உட்கார்ந்திருந்தாயே! உன் உள்ளத்தில் பாவம் சூழ்ந்திருக்கிறது! ஆகவே! நீ பாம்பாக ஆகக்கடவாய்! கொடியவனிலும் கெட்ட கெடுநிலை அடைந்து பெரிய மரப்பொந்தில் சென்று விழுந்து கிடப்பாய் என்று மகாகாலர் சாபம் வெளிப்பட்டது.

## குருவின் பேரன்பு

மகாகாலர் சாபம் கேட்டு நான் நடுநடுங்கினேன்! என் குருநாதர் ஹர! ஹர! என்று கூறிப்பதறினார். என் நடுக்கம் கண்டு அவர் உள்ளத்தில் பரிதாப உணர்வு மேலிட்டது. அவர் மகாகாலர் முன்பு மண்டியிட்டார். கைகூப்பிக் குரல் தழுதழுக்க வேண்டத் தொடங்கினார்.

## சிவன் துதிகள்

மோட்சமே வடிவெடுத்தவரே! எங்கும் நிறைந்தவரே! எவ்விடத்தும் வியாபித்திருப்பவரே! வடமேற்குத் திசையில் வாழ்பவரே! அனைவருக்கும் ஈசனே! தங்களை வணங்குகின்றேன்.

தன்னிலையில் இருந்து குணமற்றவராக, வேற்றுமையற்றவராக, விருப்பமற்றவராக, அறிவாக, ஆகாயமாக, ஆகாயத்தை ஆடையாக அணிந்தவராக உள்ள தங்களை வணங்குகின்றேன்!

உருவமற்றவரும், ஓம் என்ற பிரணவத்தின் பொருளாகத் திகழ்பவரும், முக்குணங்களுக்கு

அப்பாற்பட்டவரும், சொல், அறிவு, புலன்களுக்குள் அகப்படாதவரும், கயிலாயத்தில் எழுந்தருளி யிருப்பவரும். அச்சந்தரும் வடிவினரும், மகாகாலரும், காலகாலரும், கருணையுள்ளவரும், குணங்களின் உறைவிடமாகத் திகழ்பவரும், உலகியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவருமாகிய பரமேசுவரரே! உங்களை வணங்குகின்றேன்!

பனிமலை போல் வெண்மையானவரே! அறிவின் எல்லைகளைக் கடந்து, பாதாளம் ஏழினும் கீழ் ஆழ்ந்து நிற்பவரே! கோடி மன்மதர்களின் வனப்பு மிக்கவரே! அலைவீசும் கங்கையைத் திருமுடிமீது அணிந்தவரே! நெற்றியின் மேல் இரண்டாம் பிறைச் சந்திரனை அழகாகச் சூடியவரே! கழுத்தில் பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டவரே! காதுகளில் அசைந்தாடும் குண்டலங்களை அணிந்தவரே! அழகிய புருவம், விரிந்த கண்கள், ஒளிமிக்க முகம், நீலநிறமமைந்த கழுத்து, சிங்கத் தோலாடை, கழுத்தில் மண்டை ஓடுகளாலாகிய மாலை முதலிய அழகோடு திகழும் எல்லோருக்கும் அன்புடையவரே! கருணை மிகுந்த மங்கலத்தைச் செய்பவராகிய சங்கரரே உம்மை வணங்குகின்றேன்.

'உருத்திரமே' வடிவானவரே! மேலானவரே! ஆண்மை மிக்கவரே! மேலான செல்வங்களை வழங்குபவரே! பிரிக்கமுடியாதவரே! பிறப்பற்றவரே! கோடி ஞாயிற்றின் ஒளி படைத்தவரே! மூவாசைகளை அறுப்பவரே! சூலாயுதத்தைக் கையில் ஏந்தியவரே!

பவானியின் கணவரே! தியானத்தின் நாயகரே! தங்களை வழிபடுகிறேன்!

கலைகளுக்கும் கற்பனைகளுக்கும் அப்பாற் பட்டவரே! மங்களமூர்த்தியே! கற்பகாலத்தை முடித்து வைப்பவரே! நல்லோர்க்கு என்றும் இன்பத்தைத் தருபவரே! முப்புரங்களின் பகைவரே! சத்து, சித்து, ஆநந்தமானவரே! மோகத்தை அழிப்பவரே! மன்மதனை எரித்தவரே! எனக்கும், தவறிழைத்து விட்ட என் சீடனுக்கும் தாங்கள் கருணை செய்ய வேண்டுகிறேன்.

சிவபெருமானே! வெளிப்பட்டுத் தோன்றி எனக்கு அருட்காட்சி வழங்க வேண்டுகின்றேன்.

உமை மணவாளரே! மனிதர்கள், தங்கள் திருவடித் தாமரைகளை வழிபடாதவரை, அவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும், இன்பமோ, ஆசைகளின் நீக்கமோ, மன அமைதியோ உண்டாகாது என்பதை அறிவேன்!

நான் யோகநிலை பற்றி அறியமாட்டேன்! ஜபங்களையும் செய்தவன் இல்லை! மனமுருகி வழிபாட்டையும் செய்தவன் இல்லை! தண்டனிட்டுத்தங்களை வணங்குதல் ஒன்றை மட்டுமே அறிவேன்!

பிறப்பு, முதுமை, இறப்பு என்கின்ற துன்பங்களில் சிக்கித் தவிக்கின்றேன்! என்னைக் காத்தருளுங்கள்!

சிவபெருமான்மீது ஒருகாலை, பிரமனால் இசைக்கப்பட்ட மேற்குறித்த எட்டுச் சுலோகங்களை பக்தியுடன் நினைவு கூர்ந்து வணங்குவாருக்கு நீங்கள் காட்சி தந்து அருள்பாலிப்பது உண்மையாகட்டும்!

## சிவனார் சாபவிமோசனம்

அந்தணரின் துதிமொழிகள் சிவபெருமானுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. வானில் ஓர் அசரீரி எழுந்தது. 'அந்தணர்களில் சிறந்தவனே! வேண்டும் வரம்கேள்' என்று சிவனருள் வெளிப்பட்டது.

ஆசிரியன் மனம் மகிழ்ந்தான். பெருமானே கண்குளிரத் தாங்கள் காட்சி வழங்க வேண்டுகின்றேன். தங்கள் திருவடிகளில் நீங்காத பக்தியை அருளவேண்டும்.

இரண்டாவதாக, தங்கள் மாயைக்கு ஆட்பட்டு தவறிழைத்த என் சீடனிடம் கருணை காட்டுங்கள். இவன் சாபம் நீங்கவும், இவனுக்கு மங்களம் உண்டாகவும் தாங்கள் அருள் புரிய வேண்டுகின்றேன்!

மற்றவர் நலத்தில் அக்கறையுடைய அந்தணனின் மொழி கேட்டு மகிழ்ந்த சிவபெருமானின் அருள்வழி 'அப்படியே ஆகட்டும்' என்று மீண்டும் ஓர் அசரீரி எழுந்தது.

அந்தணனே! உன் மாணவன் கொடியபாவம் செய்தான்! நானும் சினந்து சாபமிட்டேன்! ஆயினும்,

உன் மனிதப் பண்பை மதித்து இவனுக்கு இப்போது கருணை காட்டுகிறேன்!

சிவன் அருள்மொழி மேலும் தொடர்ந்தது.

அந்தணனே! பொறுமையும், பரோபகாரமும் உடையவர்கள் என் அன்புக்கு உரியவர்கள். என் சாபம் வீணாகாது. இவனுக்கு ஆயிரம் பிறவிகள் கட்டாயம் உண்டு. ஆனாலும், பிறப்பாலும், இறப்பாலும் வரும் பொறுக்கமுடியாத துன்பங்கள் இவனைச் சிறிதும் தீண்டாது. எந்தப் பிறவியிலும் இவனுக்குத் தத்துவ ஞானம் குறைவு படாது.

அசரீரி கேட்டு மெய்சிலிர்த்து நின்ற மாணவனுக்குச் சிவன் அருள் கிட்டியது. அசரீரி காகபுஜண்டரை முன்னிலைப் படுத்தி எழுந்தது.

## அசரீரியில் அன்பு மொழிகள்

சிறுவனே! இராமன் பிறந்த மண்ணில் பிறக்கும் பேறு பெற்றுள்ளாய்! ஆயினும், நீ என் வழி பாட்டிலேயே பெரிதும் ஈடுபட்டாய்! ஊரின் பெருமையாலும், எனதருளாலும் உன் உள்ளத்தில் இனி இராம பக்தி மலரும்.

இளைஞனே! என் உரைகளைக் கவனமாகக் கேள். பிரம்ம ஞானிகளை அணுகுவதே இறைவனை மகிழ்விக்கும் சிறந்த விரதமாகும். ஆகவே, இனி ஞானிகளை அவமதிக்காதே! துறவிகளை ஆதிசேடனுக்கு இணையாக மதிக்கவேண்டும்.

இந்திரனின் வஜ்ஜிராயுதமோ, என்னுடைய நீண்ட திரிசூலமோ, காலதேவனின் தண்டமோ, திருமாலின் கொடிய சக்கராயுதமோ எவனைக் கொல்லாதோ அவனைக் கூட பிரம ஞானிகளுக்கு இழைக்கும் துரோகம் என்ற தீ அழித்து விடும். இந்தப் பகுத்தறிவை உணர்ந்து கொண்டால் உலகில் உனக்குக் கிடைக்காதன எவையும் இல்லை.

உனக்கு மேலும் ஓர் ஆசி உரைக்கிறேன்! எங்கும் செல்வதற்கு உனக்குத் தடை கிடையாது.

அசரீரி கேட்டு என் குருநாதர் மகிழ்ந்தார். அப்படியே ஆகட்டும் என உரைத்து எனக்கு அறிவுரை வழங்கினார்.

## பல பிறவிகள்

கருடனே! காலத்தின் வேகத்தினால் தூண்டப்பட்டு, நான் விந்தியமலையில் பாம்பாகக் கிடந்தேன். சில காலம் சென்ற பிறகு முயற்சி இன்றியே அவ்வுடலை நான் நீத்தேன். அடுத்தடுத்து எந்த உடலை எடுத்தாலும், சிறிதும் துன்பமின்றி நான் அவற்றை விட்டுவிடும் ஆற்றல்பெற்றேன். உடைகளை மாற்றி மாற்றி அணிவது போல், நான் எளிமையாக உடல்களை மாற்றிக் கொள்ளச் சிவனருள் எனக்குத் துணையாக அமைந்தது. நான் பல உடல்கள் எடுத்துவிட்ட போதும், என்னுள் இருந்த தத்துவ ஞானம் மட்டும் குறைவு படவே இல்லை.

அடுத்தடுத்து விலங்கு, தெய்விகம், மனிதன் என்று எந்தப் பிறவி எடுத்த போதும் இராமன் வழிபாட்டைத் தொடர்ந்து நிகழ்த்தி வந்தேன்.

கருடனே! பல பிறவிகள் எடுத்த போதும், முன்னைப் பிறப்புக்களின் நினைவுகள் தொடர்ந்தமையால், ஒரு வேதனை மட்டும் என்னைப் பற்றியே நின்றது. என் குருநாதருக்கு அயோத்தியில் நான் இழைத்த அவமானம் என்னை வருத்தி வந்தது. குருநாதரின் நேர்மைப் பண்பை என்னால் மறக்க முடியவில்லை.

**பிராமணப் பிறவியில்...**

கடைசியாக நான் ஒரு பிராமணப் பிறவி எடுத்தேன். இப்பிறவி தேவர்களுக்கும் எளிதில் கிடைத்தற்கரியது என்று வேதங்களும், புராணங்களும் கூறுகின்றன. நான் அந்தப் பிறவியிலும் சிறுவர்களுடன் கூடி இராமனின் பால லீலைகளை நடித்துக் காட்டி மகிழ்ந்திருந்தேன். நான் அறிவுபெறத் தொடங்கியபோது என் தந்தை எனக்குக் கல்வி புகட்டினார். அவர் கற்பிப்பதை நான் கேட்பேன்; அறிவேன். ஆராய்வேன். ஆயினும் கல்வியில் எனக்கு நாட்டம் ஏற்படவில்லை. மெல்ல மெல்ல முன்பிறவிகளின் பதிவுகள் அகலலாயின. இராமன் திருவடிகள் நெஞ்சில் குடிகொண்டன.

காமதேனுவை விட்டு விட்டுக் கழுதையைப் பராமரிப்பது துர்பாக்கியம் அல்லவா? இராம

பக்தியில் மூழ்கிய எனக்குத் தந்தை கற்பித்த பாடங்களில் நாட்டம் இல்லை. தந்தை முயன்று தோற்றார். தாய் தந்தையர்கள் கால வேகத்தில் மறைந்தனர். நான் அன்புடையவர்களுக்கு அருள்பாலிக்கும் இராமனை வழிபடுவதற்காகக் காட்டுக்குள் சென்றேன். காட்டுள் முனிபுங்கவர்கள் வாழும் ஆசிரமங்கள் தோறும் சென்று அவர்களை வழிபட்டேன். அவர்களிடம் இராமனின் குண சௌந்தரியங்களை எல்லாம் கதைகளாகக் கேட்டு மகிழ்ந்தேன்.

## லோமசமுனியைச் சந்தித்தது

என் உள்ளத்தில் பிள்ளை ஆசை, செல்வ ஆசை, புகழ் ஆசை என்பன முற்றாக விலகின. எப்போது இராமன் திருவடித்தாமரைகளைக் காணும்பேறு வாய்க்கும் என்ற ஒரே ஆசை மட்டும் எஞ்சி நின்றது. இராமனது திருவடி காணப்பலவிடங்களும் சுற்றித் திரிந்து மேருமலை சார்ந்தேன். ஒருமலை முடிமீது ஆலமர நிழலில் 'லோமசர்' என்ற முனிவர் அமர்ந்திருந்தார். அவரை வணங்கி, மென் மொழிகளால் என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

முனிவர் பெருமானே! இறைவன் வடிவத்தை நிர்குணம் சகுணம் என இரண்டாகக் கூறுகின்றனர். இறைவன் பிரபஞ்சமாக உள்ளான் என்று கூறும் நிர்குண வடிவை மனம் பற்றவில்லை. பிரபஞ்சத் திலிருந்து வேறுபிரித்து ஒன்றாக சகுணநிலையில்

வழிபடவே மனம் நாடுகிறது. பிரும்மஞானத்தில் ஊறித்திளைத்த தாங்கள், சகுண நிலையில் இறைவனை வழிபடுவதற்கு வழி காட்ட வேண்டும் என்று இறைஞ்சினேன்.

### பிரம்மோபதேசம்

கருடனே! என் விருப்பமறிந்து லோமச முனிவர் எனக்குப் பிரம்மோபதேசம் செய்வித்தார்.

பிராமணனே! பிரமம் பிறவியற்றது: இரண்டற்றது: குணமற்றது: இதயத்துள் விளங்குவது: அளத்தற்கரியது: விருப்பமற்றது: பெயர் இல்லாதது: உருவம் அற்றது: அநுபவத்தால் மட்டுமே அறியத்தக்கது: பிளவு படாதது: ஒப்புவமை அற்றது: முக்குணங்களுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டது. அப்பழுக்கற்றது: அழிவற்றது: விகாரமற்றது: எல்லையற்றது: ஆநந்தக்குவியல்: அதுவே நீ! அது நீயேதான். நீரும் அதன் அலையும் போல அதற்கும் உனக்கும் வேற்றுமை ஏதும் இல்லை: வேதங்களும் இவ்வாறே கூறுகின்றன என்று பலபட பிரமத்தைப் பற்றி உபதேசித்தார்.

### மரமா? யானையா?

என் உள்ளம் இராமனைத் தரிசிக்கும் வேட்கையில் இருந்தது. இறைவனும் உயிரும் வேறுவேறு அல்லர். உலகினையும், உலகத்துப் பொருள்களையும் உள்ளவாறே பார்த்தால் அவை

அவ்வாறே தோன்றும். ஊன்றி உணரத் தொடங்கினால் எல்லாப் பொருளும் இறைவனே என்பது புலப்படும். மரயானைப் பொம்மையைக் கண்டு குழந்தை யானை, யானை என்று அஞ்சி அழுகிறது. தாயோ, அது யானை அன்று மரம் என்று தேற்றுகிறாள். மரமாகப் பார்த்தால் யானை தெரிவதில்லை. யானையாகப் பார்த்தால் மரம் தெரிவதில்லை. பரம் என்று பார்த்தால் பார் முதல் பூதம் புலப்படாது. பார் முதல் பூதமாகப் பார்த்தால் பரம் தோன்றாது. முனிவர் உபதேசம் எனக்குப் புரிந்தாலும், நான் நிர்குண உபதேசத்தை விடுத்து, சகுணப்பிரம்மம் பற்றி விளக்குமாறு வேண்டினேன்.

முனிவர் பெருமானே! என் மனம் இராம பக்தி என்ற நீரில் மீனாகி விட்டது. அதிலிருந்து பிரிந்து நான் எப்படி உயிர்வாழ முடியும். தாங்கள் அருள் கூர்ந்து, இராமனை நான் கண்ணால் காண்பதற்குரிய வழி முறைகளைக் கூறுங்கள். கண்கள் நிறைய இராமனைக் கண்டு மகிழ்ந்த பிறகு, தாங்கள் எடுத்துரைக்கும் நிர்குண உபதேசத்தைக் கேட்டுக் கொள்கிறேன் என்று விண்ணப்பித்தேன்.

முனிவர் என் வேண்டுகோளை ஏற்காது, ஒப்பற்ற ஹரிகதைகளுள் ஒன்றைக் கூறிவிட்டு, நான் விரும்பியிருந்த சகுண பிரம நிலையைச் சாரமற்றது என்று வருணித்துவிட்டு மீண்டும் நிர்குண பிரமத்தை நிருபிக்க முனைந்தார்.

## *நிர்குணமா? சகுணமா?*

முனிவர் போக்கு எனக்கு வெறுப்பைத் தந்தது. நான் முனிவர் கூறிய நிர்குண நிலையைப் பிடிவாதத்துடன் ஒதுக்கி விட்டுச் சகுண மதத்தைச் சாதித்தேன். நான் அவர் கருத்துக்கு மாறாக எதிர்வாதம் செய்ய நேரிட்டது. முனிவர் உடலில் கோபக்குறிகள் தோன்ற ஆரம்பித்தன. அவர் மீண்டும் மீண்டும் சினங்கொண்டு தன் கட்சியையே பெரிதெடுத்துப் பேசினார்.

கருடனே! நன்றாகக்கேள்! அவர் கோப மொழி களைக் கேட்டு நான் சினம் அடையவில்லை. அமைதியாக அமர்ந்து நீளச்சிந்திக்கத் தொடங்கினேன்.

## எண்ண ஓட்டங்கள்

இறைவனும் உயிரும் வேறல்லர்: இரண்டும் ஒன்றே என்கிறார் முனிவர். இரண்டும் ஒன்றென்றால் முனிவருக்கு ஏன் சினம் வரவேண்டும். பரம்பொருள் சினம் அற்றது என்றால், அதுவேயான உயிருக்கும் சினம் இருத்தல் கூடாதே. மாயைக்கு உட்பட்ட தனிப்பட்ட உயிர் எப்படி இறைவனுக்கு ஈடாகமுடியும்? உயிர்வேறு, இறைவன் வேறு என்ற எண்ணம் இல்லாவிட்டால் இறைபக்தி எப்படி சாத்தியம் ஆகும்? செயல்களும்-விளைவுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன போல் தோன்றினும் அவை வேறு வேறானவை அல்லவா? என் எண்ணம் பலவாறு அலை பாய்ந்தது.

## ஐயங்கள் ஆயிரம்

*பிரம ஞானிக்குத் தீங்கிழைத்தால் அடுத்த தலைமுறை தழைக்குமா?*

*ஆத்ம ஞானம் பெற்ற பிறகு கருமங்கள் தொடருமா?*
*கெட்டவர்கள் சேர்க்கையால் நல்லறிவு தலைப்படுமா?*
*பிறர் பெண்டிரைத் தீண்டுபவன் நற்கதி பெறுவானா?*
*பரமாத்மாவை அடைந்துவிட்டவன் பிறப்பு, இறப்புக்களில் சிக்குவானா?*
*இறைவனைத் தூற்றுபவன் மகிழ்ச்சியாக வாழமுடியுமா?*
*நீதி அறியாதவன் அரசாள முடியுமா?*
*புண்ணியம் செய்யாவிடில் நற்புகழ் சேருமா?*
*பாபம் செய்யாதவனை இகழ்ச்சி வந்து சூழுமா?*
*கோள்சொல்வதற்குஈடானகொடியபாவம் உண்டா?*

*வேதங்களும் சாதுக்களும் புராணங்களும் கொண்டாடுகின்ற ஹரிபக்திக்கு ஈடான லாபம் வேறு உண்டா?*

*இவ்வாறு நான் பலபட எண்ணமிட்டிருந்த நிலையில் லோமசமுனிவர் உபதேசங்களை மனம் கொண்டு கேட்க முடியவில்லை. நான் மீண்டும், மீண்டும் சகுணம் பற்றிய கட்சியை நிலை நாட்டியதால் முனிவர் சினத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார்.*

## மீண்டும் ஒரு சாபம்

பிராமணனே! நீ அறிவுக் குறைபாடு உடையவன். நான் எடுத்துரைக்கும் மிக உயர்ந்த உபதேச மொழிகளை நீ மதிக்கவில்லை. மேலும், மேலும் வீண் வாதம் புரிகிறாய். நான் கூறும் உண்மைகளை நீ நம்ப மறுக்கிறாய். காகத்தைப் போல் எல்லாவற்றுக்கும் அஞ்சுகிறாய். தனக்குக் கூவி உணவிடுவாரைக் கூட நம்ப மறுத்து, அஞ்சி ஒதுங்கும் காக்கைக்கும் உனக்கும் வேறுபாடு இல்லை. உன் உள்ளத்தில் பிடிவாதம் அதிகமாகி விட்டது. எனவே, நான் உன்னைச் சபிக்கிறேன். நீ சண்டாளப் பறவையாகிய காகம் ஆகக்கடவாய்!

முனிவர் சாபம் உடனே பலித்தது. நான் காகமாக மாறினேன். முனிவர் சாபத்தை நான் விரும்பி ஏற்றுக்கொண்டேன். பயமோ, கழிவிரக்கமோ என்னுள் எழவில்லை. காகவடிவில் லோமச முனிவரின் திருவடிகளை வணங்கி விட்டு, இரகுவம்சத்தில் உதித்த மாணிக்கமான இராமனைத் தியானித்துக்கொண்டே பெருமகிழ்ச்சியோடு விண்ணில் பறந்தேன்.

## உலோமச முனிவர் அருள்

கருடனே! கேள்! முனிவர் மீது எந்தத்தவறும் இல்லை. அவர் உள்ளத்தில் இராமன் எழுந்தருளி யிருந்து என்னைச் சோதித்துள்ளான் என்றே நான் எண்ணினேன். மன, மொழி, மெய்களால் நான்

இராமன் அடிமை என்பது உறுதியாகி விட்டது. இராமன் உள்ளத்தில் என் பத்திமை பதிவானவுடன், அவன் அருளால் சாபமிட்ட லோமச முனிவரின் மனமும் மாறியது. என்னை முனிவர் மீண்டும் அழைத்தார். பலவாறு என்னை மகிழ்வித்தார். இராம மந்திரத்தையும் எனக்கு உபதேசித்தார். பலராமன் தியானத்தையும் உபதேசித்தார். சிலகாலம் அவர் என்னைத் தன் அருகே வைத்துக் கொண்டார். இராமசரிதத்தை எடுத்துரைத்தார்.

அன்பனே! இந்த அழகிய, இரகசியமான இராமசரிதத்தை நான் சிவபெருமானிடமிருந்து தெரிந்து கொண்டேன். நீ இராமனின் உண்மையான பக்தன் என்பதை உணர்ந்ததனால் அச்சரிதத்தை உனக்கு முழுவதும் விரிவாகக் கூறினேன். நான் அவரை வணங்கினேன். என் தலைமீது கைகளை வைத்து ஆசீர்வதித்தார். என் அருளால் உன் உள்ளத்தில் எப்போதும் ஆழ்ந்த இராம பக்தி நிறைந்திருக்கும் என்று அன்புமொழி புகன்றார். நீ கர்வமற்றவனாக, இராமனுக்கு உகந்தவனாக என்றும் இருப்பாய். உனக்கு நற்பண்புகள், ஞானம், வைராக்கியம் என்பன மிகும். விரும்பிய உருவெடுக்கும் சக்தி வந்து சேரும். நீ விரும்பும் போது மட்டுமே மரணம் வந்துறும். நீ வசிக்கும் ஆசிரமத்திலிருந்து ஒரு காத தூரம் வரை மாயை மற்றும் மோகம் அணுகாது. காலம், கர்மம், குணம், குறை, இயல்பு இவைகளால் உண்டாகக் கூடிய துயரங்கள் உன்னைத் தீண்டா. நீ மனதில் எதை

விரும்புகிறாயோ, இராமன் அருளால் அது உடன் நிறைவேறும்.

## கற்பம் கடந்த வாழ்க்கை

இவ்வாறு லோமச முனிவர் ஆசி கூறியவுடன் விண்ணில் இறைவனின் ஆழ்ந்த குரல் ஒன்று எழுந்தது.

லோமச முனிவரே! இவன் மனதாலும், செயலாலும் சொல்லாலும் என் அன்பன். ஆகவே, உமது ஆசிமொழிகள் உரைத்தவாறே உரியவாறு பலனைத் தரும். நான் மனமகிழ்ச்சியோடு முனிவரிடம் வரம்பெற்று, இந்த நீலமலை வந்து சேர்ந்தேன். இருபத்தேழு கற்ப காலங்கள் ஓடி மறைந்து விட்டன. இராமன் குண அழகைப் பாடுவதே என் தொழில். அறிவுள்ள பறவைகள் அன்புடன் அதனைக் கேட்டு மகிழ்ந்து செல்கின்றன. எப்போதெல்லாம் அன்பர்களுக்கு அருள் செய்ய வேண்டித் திருமால் அயோத்தியில் இராமனாக அவதரிக்கிறானோ அப்போதெல்லாம் நான் இராமன் இருப்பிடத்திற்குச் சென்று, அவன் குழந்தை விளையாடல்களைக் கண்டு மகிழ்வேன். பின்னர் இராமன் குழந்தை வடிவை நெஞ்சில் பதித்துக் கொண்டு ஆசிரமம் சேர்வேன்.

கருடனே! நான் காக உடல் எடுத்த வரலாறு இதுதான். உன் வினாக்களுக்கெல்லாம் விடை கூறிவிட்டேன். இராம பக்தி தோன்றவும், இராமன்

தரிசனம் பெறவும், என் ஐயங்கள் அகலவும் துணையான இந்தக் காகவடிவத்திடம் எனக்கு விருப்பம் அதிகம்.

## கருடன் எழுப்பிய ஐயம்

காகபுஜண்டர் வரலாறு கேட்டுக் கருடன் மனம் நிறைந்தான். தங்கள் கருணையால் இராமனின் தூய குணநலன்களை அறிந்து அமைதி பெற்றேன். மேலும் ஒன்றைத் தங்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். கருணைக் கடலே! அதனையும் விளக்கியருள வேண்டுமென்று கருடன் விண்ணப்பித்தான்.

சாதுக்கள், முனிவர்கள், வேதங்கள், புராணங்கள் எல்லாம் தத்துவஞானத்தையே பெரிதாகப் பேசுகின்றன. அதைத்தானே லோமசமுனிவரும் தங்களுக்கு உபதேசித்தார். ஆனால், தாங்கள் பக்தியே பெரிதென்று சாதித்துள்ளீர்கள். கருணையின் பிறப்பிடமே! ஞானத்திற்கும் பக்திக்குமிடையே அவ்வளவு வேற்றுமையா? இதனை விளக்கியருள வேண்டும் என்று கருடன் உண்மையான ஐயத்தை முன்வைத்தான். கருடன் வினாவில் அறிஞரான காகபுஜண்டர் அகம் மகிழ்ந்தார்.

## தத்துவ விசாரணை

கருடன் கேட்ட வினாவிற்குக் காகபுஜண்டர் தெரிவித்த நீண்ட விடை, இந்தியத் தத்துவச்

சிந்தனையின் சாரமாக அமைகிறது. வேத உபநிடதங்களும் எடுத்துரைத்த ஞானத்தையும் பக்தியையும் அவற்றின் இயல்புகளையும், விளைவுகளையும் விளக்கி நிற்கும் அற்புதப் புதையலாகத் துளசி இராமாயணத்தில் இப்பகுதி அமைகிறது. அறங்களையும், தத்துவங்களையும் தம் நூலுள் நேரே தாமே கூறாது, வேறு ஒரு பாத்திரத்தைப் பேசவைப்பதன் மூலம் தம் கருத்தை எடுத்துரைக்கும் பாங்கு இந்திய இலக்கியங்களுள் காணப்படுகின்றன. பாரதத்தில் ஒரு விதுரன்: இராமாயணத்தில் ஓர் அனுமன்: சிலப்பதிகாரத்தில் ஒரு காவுந்திப் போல துளசி, காகபுஜண்டரை ஞான உபதேசத்திற்காகப் பயன் கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. மூல நூலாகிய வான்மிகத்திலும், கம்பன் முதலிய தென் இந்திய மொழிகளில் தோன்றிய இராமா யணங்களிலும் காணப்படாத ஒரு தத்துவ விசாரணை காகபுஜண்டர் வாயிலாக இங்கே வெளிப்படுத்தப் பட்டுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது.

## அரியபெரிய விளக்கங்கள்

கருடனே! ஒருவகையில் நோக்கினால் பக்திக்கும் ஞானத்திற்குமிடையே பெரிய வேறுபாடு இல்லை. இரண்டுமே மேற்கொண்டு ஒழுகுவாரின் உலகியல் துன்பங்களைத் துடைக்கும் வழிமுறைகளேயாகும். ஆனால், முனிவர்கள் இவற்றிடையே சிறு வேறுபாடு காட்டுவர்.

ஞானம், வைராக்கியம், யோகம், ஆத்ம விசாரணை என்பன எல்லாம் வலுவான ஆண்பால். ஆணுக்கு நிகரான வலிவில்லாத, பெண் தன்மையுடைய மாயை இயல்பாகவே அறிவற்றது: துணிவும் இல்லாதது.

ஆண் திட புத்தியும், வைராக்கியமும் உடையவனாக இருந்தால் மட்டுமே பெண்ணை விலக்க முடியும்.

காமுகன் மட்டுமல்லன்: சிற்றின்பங்களில் நாட்டமுடையவன் இறைவனை நாடாது புறக்கணிப்பான்.

ஞானக் களஞ்சியமாகத் திகழும் முனிவர்கள் கூட மான் விழி மங்கையர் அழகிய முகம் கண்டு தன் வசம் இழக்கவே செய்வர்.

## மாயை: பக்தி ஓர் உருவகம்

கருடனே! உண்மையில் இறைவனின் மாயை தான் உலகில் பெண்ணாக நடமாடுகிறது. இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் ஒரு பெண்ணின் வடிவழகில் இன்னொரு பெண் மயங்குவதில்லை. ஒன்றை இங்கே சிந்திக்கவேண்டும். ஒருவகையில் மாயையைப் போல், பக்தியும் கூட ஒரு பெண்பால் தான். ஆனால் இறைவனுக்கு உளமார்ந்த உரிமை மனைவி பக்தியே. இன்னொருத்தியாகிய மாயை இறைவனால் ஆட்டி வைக்கப்படும் ஒரு நடனமணி.

இறைவன் பக்திக்கு மட்டுமே வசப்படுவான். அதனால்தான், மாயை அச்சம் கொண்டு அவனை நெருங்க முடியாது தள்ளி நிற்கிறது.

எவன் ஒருவனிடம், உள்ளத்தில் ஒப்புயர்வற்ற, வேறொன்றைச் சாராத, தடுமாற்றமில்லாத இறையன்பு உள்ளதோ, அங்கே மாயை நாணமுற்று நிற்கிறது. அன்னாரை நெருங்க அஞ்சுகிறது. இதனை நன்கு ஆராய்ந்த அறிஞர்களான முனிவரர்கள் கூட, ஞானத்தில் நாட்டம் செலுத்தாது அனைத்து இன்பங்களையும் வழங்கும் பக்தியை வேண்டி நிற்கின்றனர். இந்த உண்மை பலருக்கும் புலப்படுவதில்லை. இதன் உண்மையை உணர்ந்தார்க்குக் குழப்பம் என்பது கனவிலும் இல்லை.

கருடனே! ஞானத்திற்கும், பக்திக்கும் இடையே யுள்ள வேறுபாட்டை, இதுவரை நீ கேட்டிராத ஒருகதை கூறி விளக்குகின்றேன். நான் கூறப் போவது உணர வல்லதே அன்றி முற்றிலும் சொற்களுக்குள் கட்டுப்படாது.

## மாயையின் வலிமை

உண்மையில் ஜீவாத்மா எனப்படும் உயிர் பரமாத்மாவாகிய இறைவனின் ஒரு கூறேயாகும். எனவே உயிரும், இறைவனைப் போல் அழிவற்றது. உணர்வுள்ளது. அழுக்கற்றது. மகிழ்ச்சி நிறைந்தது. ஆனால், இந்த உயிர் பிறவி எடுத்த பின் மாயையில்

சிக்குண்டு, கிளிப் போலவும், குரங்குப் போலவும் மாயையால் ஆட்டிப்படைக்கப்படுகிறது. இவ்வாறு உணர்வற்ற மாயையும், உணர்வுள்ள உயிரும் ஒன்றை ஒன்று பிணைத்துக் கொண்டு நிற்கின்றன. ஆயினும், இவற்றை அவிழ்த்து வேறுபடுத்துவது மிகவும் கடினமாக இருக்கிறது. மாயையிடம் சிக்குண்ட உயிர் சம்சார சாகரத்தில் சிக்குண்டு விடுகிறது. விடுபடவும் முடிவதில்லை. உயிர் சுகப்படுவதும் இல்லை. வேதங்களும், புராணங்களும் பல வழி முறைகளை எடுத்துரைத்தும், இவற்றைப் பயன்கொண்டு மாயையின் கட்டை உதறி எறிவாரைக் காண முடிவதில்லை. கட்டுகள் மேலும் மேலும் இறுகிக் கொண்டே போகின்றன.

## வியப்பூட்டும் விளக்கம்

உயிரின் அறியாமை மேலும் மேலும் மிகுந்து கொண்டே போவதால், முடிச்சு இருக்குமிடமே இன்னது என்பது மாயை இருளில் புலப்படாது போகிறது. கட்டு இருப்பதையே உணராத உயிரால் எங்கே அதிலிருந்து விடுபட முயற்சி மேற்கொள்ள இயலும்?

இதற்கு என்னதான் தீர்வு? உயிர் மாயையை உதறி இன்புறுவது எப்படி? எப்போது என்ற ஐயம் நம்முள் எழுகிறது. காகபுஜண்டர் ஓர் அற்புதமான உருவகம் ஒன்றை நம் முன்னே நிறுத்துகிறார். தத்துவ விசாரணையை, உலகியல் பொருள்களோடு

இணைத்து உருவகப் படுத்தப்பட்டுள்ள இந்த நீண்ட பகுதி, கற்பாரைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்த வல்லது. நீண்ட உருவகப் பகுதியாயினும், சிறிதும் குழப்பமின்றித் தத்துவ விளக்கம் தரும் துளசிதாசரின் புலமைத்திறம் நம்மை வியப்பாக்குகிறது.

உயிருக்கும், மாயைக்கும் இடையே விழுந்த அவிழ்க்க முடியாத முடிச்சை இறைவன் ஒரோருகால் வழங்கும் நல்ல வாய்ப்புக்களைப் பயன்படுத்தினால் அவிழ்க்கும் வாய்ப்பு அமையும்.

## ஒரு பசுவின் கதை

ஆன்மாவின், உள்ளத்தின் உள்ளே, சத்துவகுணம் நிறைந்த உண்மையான சிரத்தை என்ற பசு வந்து சேர வேண்டும்.

வேதங்கள் கூறுகின்ற ஜபங்கள், தபங்கள், நியமங்கள் முதலியவற்றின் வழித் தோன்றும் செயற்பாடுகள் என்ற பசும்புல்லை அது மேய்தல் வேண்டும்.

அப்படி மேய்ந்து சிறந்த பசுவின் வயிற்றிலிருந்து ஆத்திகமனப்பாங்கு என்ற கன்று பிறக்கும்.

கன்றினை ஈன்ற அப்பசுவின் பின் கால்களைப் பற்றின்மை என்ற கயிற்றால் அணைய வேண்டும். நம்பிக்கை என்ற பாத்திரத்தில், தன் வயப்பட்ட மனம் என்ற இடையன் முயன்றால், தர்மம் என்ற பாலைக் கறக்க இயலும்.

தர்மம் என்பதும் பக்தியும் ஒன்றே! எனவே, அப்பாலை, விருப்பமற்ற மனநிலை என்ற தீயின் துணைக்கொண்டு காய்ச்ச வேண்டும். பொறுமை, மனநிறைவு என்ற காற்றின் துணையோடு அதனை ஆறவைத்து, அதன்மேல் படரும், தைரியம், மனவடக்கம் என்ற பாலாடையை எடுத்து, மனத்தெளிவு என்ற பானையில் இட்டு, தத்துவ விசாரணை என்ற மத்து, புலன் அடக்கம் என்ற தூண், உண்மையும், இனிமையும் நிறைந்த சொல் என்ற கடையும் கயிறு இவற்றின் துணையோடு கடைந்தால், குற்றமற்ற, இனிய தூய்மையான வைராக்கியம் என்ற வெண்ணெய் வெளிப்படும். அதனை யோகம் என்ற தீயைமூட்டி, நன்மை தீமை என்ற கருமங்களை விறகாக இட்டுக் காய்ச்சினால் மமதை என்ற அழுக்கு மேல்வரும். அதனை அகற்றினால் வரும் நெய்யை உறுதி கொண்ட அறிவால் குளிர வைத்தால் விழுதாக வரும்.

## நெய்தீபம் உருவகம்

தத்துவ ஞானம் என்ற அந்தக் கெட்டிப்பட்ட நெய்யை, மனம் என்ற விளக்கில் நிரப்பி, விருப்பு வெறுப்பற்ற மனநிலை என்ற திரியைப் பதிய வைத்து, அதனுடன், விழிப்பு, கனவு, உறக்கம் மூந் நிலைகளையும் மற்றும் சத்துவம், ராஜசம், தாமசம் என்ற முக்குணங்களையும் சேர்த்துத் திரித்து, நான்காவது நிலையாகிய சமாதி என்ற திரியோடு உறுதியாக நிறுத்த வேண்டும். இத்திரிகளில்

விஞ்ஞானம் என்ற ஒளியை ஏற்ற வேண்டும். அப்போது அத்தீபத்தை அணைக்க வரும் மதம் முதலியன விட்டில் பூச்சிகள் போல அழியும். அப்போது பரம்பொருள் என்ற பேரொளி நிலைத்து நிற்கும். அதுவே, ஞானத்தின் தளிராகும். அச்சுடரொளியில் ஆன்ம அனுபவம் என்ற ஒளிக்கீற்றுகள் பிறக்கும். உலகியலுக்குக் காரணமான வேற்றுமை என்ற பிரமை நீங்கும். தீபம் ஏற்றப்பட்ட உடனேயே அஞ்ஞானம், மயக்கம் முதலிய இருள்கள் ஓடி ஒளியும். அந்தத் தத்துவ ஞானம் என்ற ஒளி, ஆன்ம அனுபவம் என்ற ஒளியைப் பெற்று, இதயம் என்ற வீட்டில் அமர்ந்து, அங்குள்ள உணர்வற்றதோடு, உணர்வுடையதற்கு ஏற்பட்ட முடிச்சை அவிழ்த்து விடும். அம்முடிச்சு அவிழ்ந்து மாயை அகற்றப்பட்டால் ஜீவன் நிம்மதி அடையும். ஆயினும் அம்முடிச்சு அவிழும் நேரத்திலும் மாயை பல இடையூறுகளைச் செய்து விட்டே அகலும்.

## ஏமாற்றும் மாயை

கருடனே! உயிர் மாயையின் கட்டறுத்து நிம்மதி பெறமுயலும் வேளையில் மாயை ஆசைக் காட்டி மோசம் செய்ய முற்படும். நினைத்த எண்ணங்கள் நிறைவேறச் செய்யும். நுட்பமான பொருளைப் பெரிதாகத் தோன்றச்செய்து ஏமாற்றும். கலை வலிமையோடு, கபடம் கொண்டு நெருங்கி வந்து முந்தானையை வீசி ஞான தீபத்தை அணைக்க முயலும். அப்போதெல்லாம் புத்தி எச்சரிக்கையுடன்

இருந்து, மாயை காட்டும் சித்திகள் உண்மையான மகிழ்ச்சி தருவன அன்று என்று ஒதுங்கி, மாயையின் இடையூறுகளிலிருந்து தப்பினால் பிறகு தெய்வங்கள் வந்து இடையூறு செய்யும்.

ஐம்பொறி வாயில்களான புலன்களின் சாளரங்களில் அந்தந்தப் புலன்களுக்குரிய இந்திரன் முதலிய அதிதேவதைகள் அமர்ந்திருப்பர். புலன்கள் விரும்பும் போகப்பொருள்கள் வந்து தட்டும்போது இவர்கள் பிடிவாதமாகச் சாளரங்களின் கதவுகளைத் திறந்து விடுவர். அக்காலை வேகமாக உள்ளே நுழையும் புலன் நுகர்வுகளாகிய பெருங்காற்றால் தத்துவ ஞானம் என்ற தீபம் அணைந்து விடுகிறது. அவிழ்ந்த முடிச்சு மீண்டும் இறுகி விடுகிறது. உயிர் அனுபவம் என்ற ஒளி நீங்கி இருள் சூழ்கிறது. சிற்றின்பம் என்ற காற்றினால் புத்தி என்ற விளக்குத் தடுமாற்றமடைகிறது. புலன்களுக்கும், அவற்றின் அதி தேவதைகளுக்கும் தத்துவஞானம் பிடிப்பதில்லை. அவை சிற்றின்பத்தையே நாடுபவை. புத்தியைப் புலன் நுகர் பொருள்கள் சூழ்ந்து விட்ட பின் அந்த ஞான தீபத்தை மறுபடியும் யாரால் ஏற்ற முடியும்? எனவே, உயிர் மீண்டும் மாயையில் சிக்கிச் சம்சாரத் துன்பங்களில் ஆழ நேரிடுகிறது. இறைவனின் மாயை பொல்லாதது. அதை எளிதாகத் தாண்ட முடியாது.

## ஞான நிலை அருமை

கருடனே! ஞானத்தைப் பற்றிக் கூறுவது கடினமானது. அறிவது அதனினும் கடினம். அதனைப் பற்றி நின்று சாதனை புரிவது மிகமிகக் கடினமானது. புழு நெளிந்து நெளிந்து போவதால் ஏற்படும் ஈரச்சுவடு சில நேரங்களில் ஓர் எழுத்துப்போல் தோன்றும். சில நேரங்களில் எதிர்பாராது ஞானம் வந்து விட்டாலும், அதை உறுதிப்படுத்துவதற்குத் தடைகள் பல முன் நிற்கும். ஞானமார்க்கம் என்பது கத்தியின் கூர்மையின் மேல் நடப்பது போன்றது. இதிலிருந்து வழுவுவது மிக எளிது. தடைகளைக் கடந்து, இந்த ஞானமார்க்கத்தில் முன்னேறுவார் இறைவன் உலகம் புகுவர். இந்தக் கைவல்யம் என்ற இறை உலகம் சேர்வது மிகக் கடினமானது என்று சாதுக்கள் கூறுவர். புராண, வேத, சாத்திரங்களும் இதனை உறுதி செய்யும். ஆனால் ஞானத்தால் எய்த இயலாத இந்த வீடு பேறு பக்தியினால், நாம் விரும்பாவிடினும் கூட பலவந்தமாக நம்மை வந்து எய்தும்.

## பக்திச் சிறப்பு

தண்ணீர் தேங்குவதற்குப் பள்ளமான ஒரு நிலப்பகுதி வேண்டும். அதுபோல் வீடுபேறு என்னும் இன்பம், இறைபக்தி என்ற ஆதாரத்தில்தான் நிலைகொள்ள இயலும். இவ்வாறு அறிவுடையோர் இறைபக்தியைப் பற்றி நின்று வீடுபேற்றைக் கூட நாடமறுக்கின்றனர். பக்தியைப் பற்றி நிற்பதனால்

உலகியல் காரணமான அஞ்ஞானம் நாம் முயலாமலும், துன்புறாமலும் தானாகவே அழிந்து விடும். உதாரணமாக, நாம் நம் மகிழ்ச்சிக்காக உண்ணும் உணவை, நம் முயற்சி இல்லாமலேயே வயிற்றில் உள்ள நெருப்பு செரிக்கவைத்து விடுவது போலக் கொள்ளலாம்.

### பக்தி உறுதிபெற...

பாம்புகளின் பகைவனே! 'நான் இறைவனின் தொண்டன்: இறைவன் என் பணிகளுக்கு உரியவன்' என்ற இந்த மனநிலை இல்லாது உலகியலைக் கடத்தல் இயலாது. வேண்டியவர்களுக்கு வேண்டுவனவற்றை, விரும்பியவாறு வழங்கும் சிந்தாமணிக்கு நிகரானது பக்தி. இதற்கு ஞானத்திற்கு உரைத்தது போல் தூண்டு கோல், நெய், திரி என்பன ஒன்றும் வேண்டாம். மதி மயக்கம் என்ற இயலாமை அதனை நெருங்காது. பேராசை என்ற காற்றுவீசி அந்த ஒளியை அணைக்க இயலாது. ஏனெனில் சிந்தாமணி சுயஒளி உள்ளது. பக்தி ஒளியில் அஞ்ஞான இருள் ஓடி மறைகிறது. மதம் முதலிய விட்டில்கள் தோன்றிய கணமே அழிகின்றன. உள்ளத்தில் பக்தி மட்டும் இருந்து விட்டால், காமம், கோபம், மதம் முதலிய தீமைகள் அண்ட முடியாது. பக்தி மிக்கவனுக்கு விடமும் அமுதமாகும். பகை நட்பாகும். மனநோய்கள் ஓடி ஒளியும். அன்பினால் இறைவன் அடியவர்கள் இறைவனிலும் சிறந்தவராகின்றனர். அடியவர் திருக்கூட்டம் பக்திப் பயிர் வளர்க்கத் துணை

நிற்கும். வைராக்கியம் என்ற கவசம் பூண்டு, ஞானம் என்ற வாள் எடுத்து மதம், பேராசை, மோகம் என்ற பகைவர்களைக் கொன்றால் பக்தி உறுதி பெறும்.

## தத்துவ சாரம்

காகபுஜண்டரின் இந்த நீண்ட உபதேசத்தால் கருடன் தெளிவடைந்தான். அரிது முயன்று ஞானவழியில் பெறும் வீடு பேற்றைப் பக்தி வாயிலாக எளிதாக அடையமுடியும் என்ற உணர்வில் கருடன் தலைப்பட்டான். இரண்டு வழிகளுமே சிறந்தனதாம். அவரவர் தத்தம் ஆற்றல்களுக்கு ஏற்ற நெறிகளைத் தேர்ந்து கொள்ளத் தடை ஏதும் இல்லை. உள்ளன்பும், விடாமுயற்சியும், நம்பிக்கையும் கொண்டவர் எந்நெறி நின்றாலும் இறைவன் தாள் மலர்களைச் சென்று அடைதல் உறுதி. துளசி தாசர் காலத்தில் வடபாரதத்தில் நிலவிய தத்துவச் சிந்தனைகளின் சாரமாகக் காகபுஜண்டர்-கருடன் உரையாடல் அமைந்திருப்பதாகவே தோன்றுகிறது.

## மனித குலப் பண்பாட்டுப் பதிவு

இந்திய மண்ணில் தோற்றங்கொண்ட இதிகாசங்களும், பெருங்காப்பியங்களும் வெறும் கதை சொல்லும் நோக்கம் மட்டும் கொண்டு எழுந்தன அன்று. அவை, மக்களின் கதை கேட்கும் ஆர்வத்தைப் பற்றி நின்று, மனிதகுலம் இம்மையில் அற நெறிவழாது வாழவும், மறுமையில் பற்றறுத்து

வீடுபெறவும் வழிகாட்டும் நோக்கத்திலேயே நடையிட்டுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த கதையும், கதை மாந்தர்களும், நம் இன்றைய வாழ்வோடு வேறுபட்டவர்கள். இருந்தும், அவை நம்மை ஈர்த்து நிற்பதற்கு அடிப்படை, அவற்றிடையே நம் தெய்வக்கவிஞர்கள் பொதிந்து வைத்துதிருக்கும் அறிவூட்டல்களே காரணங்களாகின்றன. மாறிவரும் வாழ்க்கைமுறையின் ஊடே, மாறாத மனித குலப்பண்புகளை இடைநிறுத்தியே, நம் முன்னோர் இலக்கியம் நடத்தி அமரவாழ்வு பெற்றனர். பிற்காலத்தில் எழுந்ததாயினும் துளசி ராமாயணமும், அறநெறி கூறுவதில் சற்றும் பின் தங்கிவிடவில்லை. துளசியின் மனித நேயத்தை, அறத்தின்பால் அவருக்கிருந்த பற்றுறுதியை விளக்கும் அரியபகுதியாக உத்தரகாண்ட நிறைவில் கருடன், காகபுஜண்டர் வினாவிடைப்பகுதி அமைகிறது.

## அறநெறிகளின் வெளிப்பாடு

கதைப்போக்கில் அறம் உரைப்பது ஒருமுறை. அது தாய், தன் பாலோடு மருந்தினையும் இணைத்து வழங்குவது போன்றது. மருந்து என்ற நினைவே இல்லாது, மருந்து குழந்தை உட்சென்று நலம் விளைப்பது போல், கதைப் போக்கிலேயே கற்பாரை அறநெறியில் செல்ல வைப்பது அறிஞர் நிலை. இது ஓரளவு கல்வியறிவு உடையாருக்கு ஏற்றது. ஆயின், மிக்க அறிஞர்கள் நூலாசிரியரிடமிருந்து நேரடியான விளக்கங்களைப் பெறவே விரும்புவர். விருந்தில்

பலருக்கும் விருப்பமான பண்டங்கள் படைக்கப் படுவது போல், நல்ல நூல்களில் அவரவர் தேவைக் கேற்ற பகுதிகள் தாமே இணைந்திருக்கும். இவற்றைக் கவிஞன் கூற வந்த செய்திகளாகவே கொள்ளலாம். காப்பியத்தின் இடையே நிற்கும் கீதை, விதுரநீதி, அறக்கடவுள் - தருமன் உரையாடல் போல்வன கதை நிகழ்வுகளைக் கடந்து, கவிஞன் உரைக்க விரும்பிய அறநெறிகளின் வெளிப்பாடுகளாகவே கருதலாம். தமிழ்க் காவியங்களிலும் இந்தப் போக்கு இடம் பெற்றுள்ளது.

## கருடன் கேட்ட வினாக்கள்

காகபுஜண்ட முனிவரே! கருணைமிக்கவரே! தங்களுக்கு என்பால் அன்பிருப்பது உண்மை என்றால், எளியேனைத் தாங்கள் தங்கள் அடியவனாக ஏற்றருள வேண்டும் என்று கூறிக் கருடன் பணிந்தான். மேலும், என் உள்ளத்தில் தங்கியிருக்கும் ஏழு வினாக்களுக்குத் தேவரீர் விடை இறுத்துத் தெளிவுறுத்த வேண்டும் என்றும் விண்ணப்பித்தான். காகபுஜண்டர் மகிழ்ந்து விடை கூற ஆயத்தமானார். கருடன் தன் ஐயங்களை வினாக்களாக்கிக் காகபுஜண்டர் முன் வைத்தான்.

1. எல்லாவற்றிலும் அரிதான பிறவி எது?
2. கொடிய துன்பம் யாது?
3. மேலான இன்பம் என்று எதனைக் கூறலாம்?

4. சாதுக்கள் மற்றும் துஷ்டர்களின் இயல்புகள் எப்படிப் பட்டவை?
5. வேதங்களில் கூறப்பட்ட மிகப்பெரிய புண்ணியம் எது?
6. மிகக் கொடிய பாவம் எது?
7. மனநோய்கள் எவை?

மாமுனிவரே! தாங்கள் எல்லாம் அறிந்தவர். தங்களுக்கு என்னிடம் பேரருள் உள்ளது. அருள் கூர்ந்து என் வினாக்களுக்கு விடை பகர்ந்து அருள வேண்டுமெனக் கருடன் பணிவுடன் வேண்டி நின்றான்.

காகபுஜண்டர் உளம் மகிழ்ந்தார். அன்பனே! மிகவும் கவனமாகவும், பக்தியுடனும் நான் கூறப்போகும் நீதிமொழிகளைக் கேட்டுக் கொள் என்று கூறிவிட்டு முனிவர் உரைக்கத் தொடங்கினார்.

**மனிதப்பிறவியின் மாண்பு**

எல்லாவற்றிலும் அரிதான பிறவி மானுடப் பிறவியேயாகும். மனிதப் பிறவிக்கு ஈடான பிறவி வேறு இல்லை. 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்றும் 'மனித்தப்பிறவியும் வேண்டுவதே' என்றும் அருளாளர்களும் உரைத்துப் போந்தனர். அசைவன-அசையாதன எனப் பகுக்கப்படும் உயிர்க்குலங்கள் அனைத்தும் மனிதப் பிறவியையே

வேண்டி நிற்கின்றன. இப்பிறவிதான் நரகம், சுவர்க்கம், மோட்சம் எல்லாவற்றிற்கும் படிக்கட்டாக உள்ளது. இதுவே மங்களமளிக்கின்ற ஞானம், வைராக்கியம், பக்தி எல்லாவற்றையும் நல்க வல்லது. இந்த அரிய மனிதப் பிறவியைப் பெற்றும் எவன் கேடுகளுக்கெல்லாம் மூலமான புலனுகர்ச்சியில் மட்டும் ஆசை கொண்டு அலைகிறானோ அவனெல்லாம் வைரக்கல்லை எரித்துவிட்டு, ஓட்டாஞ்சில்லைப் பொறுக்குபவனாகவே இருப்பான்.

## கொடிய துன்பம்

உலகில் கொடிய துன்பம் என்பது ஏழ்மையே யாகும். ஏழ்மையை விடக் கொடிய துன்பம் உலகில் ஒன்றும் இல்லை. தமிழ் நூலாரும் 'கொடிது கொடிது வறுமை கொடிது: அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்று இதனையே கூறியுள்ளனர்.

## மேலான இன்பம்

மேலான இன்பம் தருவது நல்லோரிணக்கம் ஒன்று மட்டுமே. நல்லோர் இணக்கத்திற்கு ஈடான சுகம் உலகில் வேறு ஒன்றும் இல்லை.

## சாதுக்கள் துஷ்டர்கள் இயல்பு

கருடனே! மனம், மொழி, மற்றும் மெய்களால் மற்றவர்களுக்கு உதவி செய்தலே சாதுக்களின் இயல்பு. அவர்கள் பிறர் பொருட்டுத் துன்பங்களைத் தாம்

ஏற்றுக் கொள்ளும் இயல்பினர். துஷ்டர்கள் என்பவர்கள் பிறருக்குத் துன்பம் இழைக்க முயல்பவரேயாவர். சாதுக்கள், தன் பட்டையை உரித்துப் பிறர் ஆடையாக அணிந்து கொள்வதற்குப் பொறுத்தாற்றும் பூர்ஜ மரத்தைப் போல, பிறர் நன்மைக்காகத் தாங்கள் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வர். ஆனால், கொடியவர்கள் சுருக்குக் கொடிபோலப் பிறரைக் கட்டுப்படுத்தி மகிழ்வார்கள். தனக்கு நன்மை இல்லை என்று தெரிந்தும் பிறருக்குத் துன்பம் இழைப்பார்கள். பிறர் செல்வத்தை அழித்துத் தாமும் அழிவது துஷ்டர்கள் செயல். கொடியவர்களுக்கு வரும் மேன்மை, தீய கேது கிரகம் உதயமானாற் போல உலகுக்குத் துன்பமாகவே முடியும். சந்திரனும், சூரியனும் உதித்தால் உலகம் நன்மை அடைவது போல, சாதுக்கள் மேன்மையுற்றால் அது உலகுக்கு உபகாரமாக அமையும்.

## பெரும் புண்ணியம்

வேதங்கள் சிறந்ததாகப் பெரிதெடுத்துப் பேசும் புண்ணியம் அகிம்சையே யாகும்.

## பெரும்பாவம்

மிகக் கொடிய பாவம் என்பது பிறரைத் தூற்றுவதேயாகும். சிவனையும், குருவையும் தூற்றுபவர்கள் ஆயிரம் பிறவிகளில் தவளைகளாகப் பிறப்பார்கள்.

பிரம ஞானிகளைத் தூற்றுபவர்கள் பல்வேறு கொடிய நரகத் துன்பங்களை அனுபவித்தபின் காக்கைகளாகப் பிறப்பார்கள்.

தற்பெருமை கொண்டு வேதங்களைத் தூற்றுபவர்கள் ரௌரவ நரகிடை வீழ்வர்.

சாதுக்களைத் தூற்றுவதில் மகிழ்பவர்கள் கோட்டான்களாவர். மோகம் என்ற இரவே அவர்களுக்கு உரியது. ஞானம் என்ற கதிரவன் அவர்களைப் பொறுத்த வரை உதித்தலே இல்லை.

எல்லோரையும் எப்போதும் தூற்றித் திரிபவர்கள் வௌவால்களாகப் பிறந்து உழல்வர்.

**மனநோய்கள்**

கருடனே! ஏழாவதாக மனநோய்கள் எவை என்று கேட்டாய்! கூறுவேன். மமதை என்பது சொரிசிரங்கு. பொறாமை என்பது அரிப்பு. மகிழ்ச்சியும்-துன்பமும் கண்ட மாலை. பிறர் மகிழ்ச்சி கண்டு வெதும்புதல் காசநோய். கொடுமையும், வஞ்சனையும் தொழு நோய்கள். அகங்காரம் பெரும் துயர் தரும் மூட்டு வலி. டம்பம், கபடம், திமிர், தற்பெருமை எல்லாம் நாக்குப் புழுத்தல். பேராசை ஜலோதரம். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை மூன்றும் மூன்று வரி நோய்கள். பொறாமையும், விவேகமின்மையும் இருவித ஜுரங்கள். இவ்விதம் பல கொடிய நோய்கள் உள்ளன.

இவற்றுள் ஓரிரு நோய்களே மனிதனை அழிக்கவல்லன. இவை பலவும் தீராத நோய்கள். உயிரை அதன் வாழ்நாள் முழுதும் துன்புறுத்துவன. இவற்றால் பற்றப்பட்டவன் அமைதியை அடைவது எப்படி?

**மருத்துவம்**

கட்டுப்பாடுகள், நல்லறங்கள், நன்னடத்தைகள், தவம், ஞானம், யாகம், ஜபம், தானம் என்பனவாகிய மேற்குறித்த நோய்களை நீக்கவல்ல பல மூலிகைகள் உள்ளன. இதைத் தவிர சோகம், மகிழ்ச்சி, பயம், அன்பு, பிரிவாற்றாமை முதலியன காரணமாக வரும் நோய்கள் பல. மனோ வியாதிகளில் இவை சிலவே. இவை யாவர்க்கும் உண்டு. ஆனால் இதை உணர்ந்தவர்கள் மிகச் சிலரே.

**கருடன் விடைபெறல்**

காகபுஜண்டர் உரைத்த விடைகளையும், அவர் உரைத்த மங்கள மொழிகளால் தான் பெற்ற மகிழ்ச்சியையும் கருடன் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவரை வணங்கினான். முனிவரே! தங்கள் உரையால் இராமன் திருவடிகளில் என் பக்தி புதுமை பெற்றது. மாயையினால் உண்டான எல்லாக் குழப்பங்களும் தீர்ந்தன. மதிமயக்கம் என்ற கடலில் மூழ்கிய எனக்குத் தாங்கள் கப்பல் ஆனீர்கள். ஐயா! தாங்கள் பலவிதம் எனக்கு மகிழ்ச்சி அளித்தீர்கள்! நான் இவற்றிற்கெல்லாம் கைமாறு செய்ய அறிகிலேன்.

நான் தங்கள் திருவடிகளை மீண்டும் மீண்டும் வணங்குகின்றேன் என்று பணிமொழி உரைத்துக் கருடன் காகபுஜண்டரின் அடிவணங்கி ஆசியும் விடையும் பெற்றுக்கொண்டு வைகுண்டம் சென்றான்.

## சைவ-வைணவப் பாலம்

காகபுஜண்டரின் அருள் வரலாற்றையும், அவர் வழங்கிய அருள் உபதேசங்களையும் மேற்குறித்தவாறு மிக விரிவாகத் தமது இராமகாதையின் நிறைவுப் பகுதியில் துளசிதாசர் விரித்துரைத்துத் தம் காப்பியத்தை நிறைவு செய்கிறார். காகபுஜண்டரின் அருள் வரலாற்றையும், உபதேசங்களையும் இவ்வளவு விரிவாக விரித்துரைத்த வேறு நூல்கள் வட இந்திய மொழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. துளசிதாசர் விரித்துரைக்கும் விரிவான வரலாற்றை ஆராய்ந்தால் காகபுஜண்டர் அவர்கால மக்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு முனிபுங்கவராகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. பெருங்காப்பியங்கள் என்பன, பல்வேறு கிளைக் கதைகளை ஒருவாறு தம்முள் இணைத்து நிற்பதை உலக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமன் வரலாறு கூறும் நூலாயினும், துளசிதாசர் தம் நூலுள் காகபுஜண்டர் வாயிலாக சைவ-வைணவ பேதம் சிறிதும் தோன்றாதே கதை நடத்துகிறார். முன் குறித்தவாறு காகபுஜண்டர் என்ற சொல்லை ஒரு காரணப்பெயர் என்று கருதியே துளசிதாசர் அதனைப் பகுத்து இருசொற்களாகக் கொண்டு, முனிவர்

காகவடிவம் பெற்றமை குறித்தும், பாம்பு உருவம் பெற்றது குறித்தும் கதை பின்னுகிறார் என்பது புலனாகிறது.

**கருணைக் கடல்**

எங்ஙனமாயினும் காகபுஜண்டர் காலத்தை வென்று வாழும் ஒரு மகரிஷி என்பதும், சைவ-வைணவ பேதமின்றி இறையன்பில் தலை நின்ற ஞானி என்பதும், அளப்பரிய ஞானங்களை உலகுக்கு உபகரித்த கருணைக்கடல் என்பதும் துளசி இராமாயணத்தால் உறுதி செய்யப்படுகின்றன. துளசிதாசர் விரித்துரைத்த வரலாற்றை ஒருவாறு தழுவியும், முற்றிலும் மாறுபட்டும் காகபுஜண்டர் வரலாற்றை விளக்கும் வேறு சில நூல்களும், நூற் குறிப்புக்களும் கிடைத்துள்ளன. அடுத்த இயலில் அவற்றை எல்லாம் தொகுத்துக் காண்போம்.

# 3. தமிழ்நூல்களில் காகபுஜண்டர்

காகபுஜண்டர் அருள் வரலாறு குறித்த பிற தகவல்கள் அனைத்தையும் ஒருசேரத் திரட்டி, ஆய்வுக்கு உட்படுத்தி, அவர் உண்மை வரலாற்றைக் கண்டு காட்டும் முயற்சியை இனி மேற்கொள்ளலாம்.

## ஞான வாசிட்டம்

வடஇந்தியாவில், சமயம் மற்றும் தத்துவங்களை எடுத்துரைக்கும் மொழியாக வடமொழி எனக் கூறப்படும் சமஸ்கிருதம் விளங்கியது. இராமாயண மகாபாரத நூல்களும், வேதங்களும், எண்ணற்ற காவியங்களும், அறநூல்களும், தத்துவ ஆராய்ச்சிகளும் இம்மொழியிலேயே அமைந்தன. அவற்றுள் ஒன்று 'ஞானவாசிட்டம்' என்பது. இந்நூல் இராமனின் குலகுருவாகிய வசிட்டரால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்ட ஆத்மபோத நூலாகும். இராமனுக்கு அறம் உணர்த்தவும், உலகியல் அறிவிக்கவும், ஞானம் நிறைவிக்கவும் வசிட்டர்

பல்வேறு ஞானிகளின் அருள் வரலாறுகளை அவனுக்கு எடுத்துரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இதனுள் இடம் பெற்றுள்ள அருளாளர்கள் அனைவரும் இராமாவதாரக் காலத்துக்கு முற்பட்டவர்கள் என்பது வெளிப்படை. ஞான வாசிட்டத்தில் காகபுஜண்டர் கதையும் இடம் பெற்றுள்ளது.

## வாஸிஷ்ட சாரம்

ஞானவாசிட்டத்தினைத் தமிழில் 'ஸ்ரீ வாஸிஷ்ட சாரம்' என்ற பெயரில் ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் என்பார் வழங்கியுள்ளார். உரைநடையில் அமைந்துள்ள இந்நூல் கி.பி. 1973 இல் வெளி வந்துள்ளது. இதனுள் 20 ஆவது அத்தியாயமாகக் காகபுஜண்டர் வரலாறு, 'புசுண்ட உபாக்கியானம்' என்ற தலைப்பில் ஆறுபக்கங்களில் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி வஸிஷ்டர் - இராமன் உரையாடலாகவும், வஸிஷ்டர்-புசுண்டன் உரை யாடலாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

## வசிட்டர்-புஜண்டர் சந்திப்பு

ஒருமுறை இந்திரனின் திருவோலக்கத்தில் வசிட்டர் சாதாதப முனிவரைச் சந்தித்தார். அப்போது அம்முனிவர் மேருமலையின் ஈசான மூலையில் கற்பகத்தருவின் மேல் புஜண்டர் என்ற பெயருடைய ஒரு காக்கை வாழ்ந்து வருகிறது. காக்கை வடிவில் வாழும் அவர் சாந்தம் நிறைந்தவர். அலை பாயாத

மனத்தை உடையவர். அழிவற்றவர். அவரைப் போல் சுவர்க்கத்திலும் எவரும் இல்லை. இனி ஒருவரும் அவர்போல் இருக்கப்போவதும் இல்லை எனக் காகபுஜண்டரைப் பற்றி வசிட்டருக்குத் தெரிவித்தார். இச்செய்தி கேட்டு மகிழ்ந்த வசிட்டர் மிக்க மகிழ்ச்சியடைந்து மேருமலை சார்ந்து, கற்பகத் தருவின் மேல் வாழ்ந்த புஜண்டரைக் கண்டார். புஜண்டர் வசிட்டரை முறையாக வரவேற்று, அவர் அங்கே வருகை தந்த காரணத்தை வினவினார். வசிட்டர் புஜண்டரை நோக்கித் தாங்கள் எந்தக் குலத்தில் பிறந்தவர்? தங்களுக்கு வயது எவ்வளவு? தாங்கள் அறிவு நிரம்பியவரானது எவ்வாறு என்று தன் ஐயங்களை வெளிப்படுத்தினார்.

## புதிய வரலாறு

காகபுஜண்டர் தன் வரலாறு கூறத் தொடங்கினார். சிவபெருமானுக்குப் பரிவாரகணங்கள் இருப்பது போல, உமை அம்மைக்கும் பரிவார தேவிகள் எண்மர் உள்ளனர். அவர்கள் பெயர்கள் ஜயா, விஜயா, ஜெயந்தீ, அபராஜிதா, ஸத்தா, ரக்தா, அலம்புஷா, உத்பலா என்பது. இவர்கள் அனைவரும் சேர்ந்து ஒருமுறை பெரிய ஒரு விழா எடுத்தனர். அப்பொழுது அவர்களது வாகனங்களும் உடன் இருந்தன. அவைகள் மது உண்டு களித்து விட்டு ஆடல் பாடல்களில் ஈடுபட்டன. அலம்புஷா என்பவளின் வாகனம் சண்டன் என்ற பெயருடைய காக்கை. ஏனைய எழுவர் வாகனங்கள் பெண்

அன்னங்கள். சண்டன் களி மயக்கத்தில் பெண் அன்னங்களுடன் கூடிக்களித்தது. இக்கூட்டக் கலப்பில் பெண் அன்னங்கள் கருவுற்று, முறையாக பிரமலோகத்தில் இருபத்தொரு ஆண்மக்களைப் பெற்றெடுத்தன. அவர்களில் புஜண்டரும் ஒருவர். பின் அவர்கள் தம் அன்னையருடன் இணைந்து பிராமியை வணங்கி வழி பாடாற்றினர். பிராமி அருள் பெற்றதால் குழந்தைகள் அனைவரும் முத்தி பெற்றவர்களைப் போன்று சாந்தமும் நிறைந்த நெஞ்சமும் உடையவர்களாயினர். தியானம் செய்வதற்குத் தகுந்த இடத்தை அவர்கள் தம் தந்தை சண்டனிடம் வேண்டியபோது, அவர் மேருமலையில் உள்ள கற்பகத்தருவில் சென்று வாழ்ந்திருக்கப் பணித்தார். இவற்றை எல்லாம் எடுத்துரைத்த காகபுஜண்டர், இங்கே தாம் எவ்விதமான கவலைகளும் இல்லாது வாழ்ந்து வருவதாக வசிட்டரிடம் குறிப்பிட்டார்.

## வசிட்டர் கேட்ட ஐயம்

வசிட்டர் காகபுஜண்டரிடம் ஏனைய உங்கள் உடன் பிறந்தோரை இங்கே காணவில்லையே! அவர்கள் எங்கே என்று வினவினார். புஜண்டர், நாங்கள் அனைவரும் இத்தருவில் வெகுகாலம் வாழ்ந்திருந்தோம். அனேக யுகங்கள், கற்பங்கள் கழிந்தன. என் தம்பியர் இருபதின்மரும் தம் உடல்களைத் துரும்பாக மதித்து, உயிர்நீத்து மேலான வீட்டுலகம் சேர்ந்தனர். நான் மட்டும் இங்கே வாழ்ந்து

வருகிறேன் என்று புஜண்டர் உரைத்தார். வசிட்டர் வியப்புற்று புஜண்டரை நோக்கிக் கற்ப காலங்கள் முடியும்போது நெருப்பு, நீர், காற்று யாவும் பெருக்கெடுக்கவும், கதிரவன் கடும் வெப்பத்தை வீசவும், அக்காலை நீங்கள் சிறிதும் அவற்றால் பாதிப்படையாது வாழ்வு பெற்றது எவ்வாறு என்று வினவினார்.

## நீண்ட வாழ்வின் இரகசியம்

கற்பகால முடிவில் உலகில் செயற்பாடுகள் யாவும் அடங்கிவிடும். அக்காலை நான் மேலெழுந்து நிர்மலமான ஆகாயத்தில் நின்று விடுவேன். கதிரவன் சுட்டெரிக்க முற்பட்டால், விண்ணிலிருந்து கொண்டு வருணனைத் தியானிப்பேன். பிரளய காலத்தில் காற்றின் விசையால் மலைகளெல்லாம் சிதறும்போது, மலைபோல் என்னை மாற்றிக் கொண்டு 'தாரணை' யோக நிலை பெற்று அசைவற்றிருப்பேன். பிரம அண்டங்களுக்கும் அப்பால் சென்று, நிர்மலமான நிலையில் அசைவற்ற தூக்கம் உள்ளவன் போல இருந்து விடுவேன். பிரமன் மீண்டும் உலகை எப்போது படைக்கிறானோ அப்போது இவ்வண்டத்துள் நுழைந்து என் வழக்கமான இவ்விருப்பிடம் வந்து சேர்வேன். ஒவ்வொரு கற்ப காலத்திலும், இம்மரமும் இவ்வாறே தோன்றி நிற்கும். புஜண்டர் உரைத்த வியப்பூட்டும் செய்திகளால் வசிட்டர் தெளிவு பெற்றார். மேலும் புஜண்டரை நோக்கிப் பிரளய காலத்தில் தாங்கள் தாரணை செய்து

கொண்டு நின்று விடுவது போல், மற்ற யோகிகளும் அவ்வாறு நின்று தங்களைப் போல் காலங்கடந்து ஏன் வாழ முடியவில்லை என்று வசிட்டர் வினவினார்.

## தேவ இரகசியம்

புஜண்டர் விரிவாக விளக்கம் கூற விரும்பவில்லை. இறைவன் கட்டுப்பாடுகளை யாரால் மீற முடியும்? என் நிலை இப்படித்தான்: அவர்கள் நிலை அப்படித்தான் என்று பூடகமாகப் பதிலுரைத்து நின்றார். வசிட்டர் ஒருவாறு அமைதி அடைந்தவராய், முனிவரே! பல யுகங்களிலும் விசித்திரமான பல சம்பவங்களைத் தாங்கள் கண்டு அநுபவித்திருப்பீர்களே, அவற்றை உரைத்தருளுங்கள் என்று வேண்டினார்.

## வியப்பூட்டும் அநுபவங்கள்

காகபுஜண்டர் வியப்பூட்டும் தம் அநுபவங்கள் சிலவற்றை எடுத்துரைத்தார். பூமி தோற்றம் கொண்டு மலை, காடு, மரம் எதுவும் தோன்றாத வெற்று உலகைக் கண்டிருக்கிறேன். சூரியனும், சந்திரனும் முதல் முதல் இவ்வுலகில் தோன்றியபோது அதனையும் கண்டிருக்கிறேன். இந்திரனும், உபேந்திரனும் வந்துற்றமை; பூமியை இரண்யாட்சகன் சுருட்டியமை; திருமால் வராக உருவமெடுத்து அதனை மீட்டமை: கடல்கள் முதல் முதல் தோற்றம் கொண்டமை, தேவர்களும் அசுரர்களும் அமிர்தம்

வேண்டிப் பாற்கடலைக் கடைந்தமை எல்லா வற்றையும் பார்த்திருக்கிறேன்.

## வியப்பின்மேல் வியப்பு

வசிட்டர் வியப்பில் வாயடைத்து நின்றார். காகபுஜண்டர், வசிட்டரே! பிரம்மனின் திருமகனாகிய தங்களுக்கு இப்பூவுலகில் இது எட்டாவது பிறவி என்று கூறி அவரை மேலும் வியப்பிலாழ்த்தினார்.

வசிட்டரே, விஷ்ணு மூர்த்தி, ரேணுகையின் குமாரர் பரசுராமராக இதுவரை ஆறுமுறை பிறந்திருக்கிறார்.

சிவன் முப்புரங்களை நான் அறிய முப்பது முறை எரித்துள்ளார். தட்சன் யாகத்தை இரண்டு முறை அவர் அழித்திருக்கிறார். திருமால் இராமன் என்ற பெயரில் பதினோராவது முறையாகத் தற்போது பிறக்க விருக்கிறார். அவரே சிலகாலம் கழித்து வாசுதேவன் இல்லத்தில் பதினாறாவது முறை கண்ணனாக அவதரிக்கவுள்ளார். காகபுஜண்டர் உரைத்த செய்திகள் வியப்பை மேலும் மேலும் தந்து நின்றன.

## உடல் அழியாமை ஏன்?

வசிட்டர், காகபுஜண்டரை நோக்கி மேலும் ஓர் ஐயத்தை முன்வைத்தார். நீங்கள் உரைத்தது போல் உலகத்தின் மத்தியில் இருந்துகொண்டு யோகநிலை நிற்பாரை, அவர் உடலை ஏன் எமன் அழிப்பதில்லை என்று வினவினார்.

புஜண்டர், எவருடைய உள்ளத்தில் குற்றங்கள் என்ற முத்துக்களில் பழவினை என்னும் சரடு கோக்கப்பட வில்லையோ, அவரை எமன் கொல்ல நினைக்கமாட்டான். உள்ளத்தில் ஆசை என்ற நெருப்பைச் சேர்க்காதவரையும் காலன் கொல்ல வருவதில்லை. எவருடைய சிந்தை நிர்மலமாக, மிக்க தூய்மையான நிலையை அடைந்து அமைதி பெற்றிருக்கிறதோ அவரிடமும் எமன் நெருங்கு வதில்லை. சம்சார வாழ்வு என்ற நோய்க்குக் காரணங்களான மேற்குறித்த குற்றங்கள் எவருடைய சிந்தையை மாசுபடுத்தலில்லையோ, அவர்கள் மனம் தத்துவத்திலேயே நிலைத்திருக்கும். எல்லாத் துன்பங்களையும் நீக்க வல்லது ஆன்மா பற்றிய சிந்தனையேயாகும். அதுவே, எல்லாவிதமான நலன்களையும் மேலோங்கச் செய்யும். இத்தோடு உயிர் உணர்வு பற்றிய சிந்தனையும் இணையுமானால் அவரால் வெகுகாலம் உயிர் வாழ்ந்திருக்க முடியும் என்று விடையிறுத்தார்.

### பிராண சிந்தை என்பது யாது?

காகபுஜண்டர் இறுதியாக உரைத்த தொடரில் இடம் பெற்ற 'பிராண சிந்தையும் இருந்ததானால் வெகுநாள் ஜீவித்திருக்க முடியும்' என்பதைப் பற்றி நின்று, வசிட்டர் அவரை நோக்கி, 'பிராண சிந்தை' என்பது யாது என்று வினவினார்.

மனித உடலில், மேல் நோக்கிப் பிராணன் என்ற வாயுவும், கீழ்நோக்கி அபானன் என்ற வாயுவும் ஏறி இறங்கிக் கொண்டுள்ளன. இவற்றின் இயக்கத்தால் நான் உடல் என்கிற பெரிய எந்திரம் இயங்கிக் கொண்டுள்ளது. இவ்விருவாயுக்களுக்கும் துன்பமோ, ஓய்வோ கிடையாது. இதயம் என்ற விண்வெளியில் நிலவியிருக்கும் கதிரவனும் வெண்மதியும் போன்றன அவை. விழிப்பு, உறக்கம், கனவு முதலிய நிலைகளிலும் இவ்விருவாயுக்களும் ஒரே மாதிரியாக இயங்க வல்லன. இவற்றின் இயக்கம் மிக நுட்பமானது என்பதால், கண்களுக்குப் புலப்படுவது இல்லை. எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் இவை சலனசக்திகளாகும். மேல் நோக்கி எழும் பிராணன் என்ற வாயு எவ்வித அரிய முயற்சியுமில்லாமல், தம் வீச்சை வெளியில் பன்னிரண்டு அங்குல தூரம் வரை செலுத்தும் நிலை 'ரேசகம்' எனப்படும். அப்படியே கீழ்நோக்கிச் செல்லும் அபானன் என்ற வாயுவை உள்ளே நிலைபெறச் செய்து உடல் முழுவதும் நிறுத்துவது பூரகம் எனப்படும். அபானன் ஒடுங்கி நிற்கப் பிராணன் வெளிக்கிளம்பாமல் செய்வது கும்பகம் எனப்படும். இவ்வாறான பாதுகாவல் மும்முறை நிகழும். இவ்வாயுப் பயிற்சியில் ஈடுபட்டு மனத்தை வெளியில் அலைபாய விடாமல் அடக்கியாண்டால், சில நாள்களிலேயே மேலான நிலை வந்து சேரும்.

**நீண்ட நாள் வாழ...**

வசிட்டரே! இவ்வாறு உயிரை நிலைநிறுத்தி முறையான குற்றமற்ற, அறிவு வடிவான ஆன்மா விடத்தில் தங்கியிருத்தல் எனக்கு ஏற்பட்டது.

சென்றதையோ, வரப்போவதையோ நான் ஒருக்காலும் நினைப்பது கிடையாது.

நடப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பேன்.

என் மனம் நன்மையை அடையும்போது மகிழ்ச்சி அடைவதில்லை. தீமை ஏற்படும் போது துன்புறுதலும் இல்லை. எப்போதும் அது ஒரே மாதிரியாகவே இருக்கும்.

எவன் உறவு, எவன் அன்னியன் என்று நான் வேறு பிரித்துப் பார்த்ததில்லை.

ஆசை முதலான மனத்துன்பங்களுக்கு நான் இடம் கொடுப்பதில்லை.

வசிட்டரே இவற்றால்தான் நான் வெகுகாலம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறேன் எனக் காகபுஜண்டர் கற்பங்கள் கடந்தும் தாம் உயிர் வாழ்ந்திருப்பதற்குக் காரணமான ஆன்ம இரகசியத்தை வெளிப்படுத்தினார்.

புஜண்டர் உரைத்த வரலாறுகளை வசிட்டர் இராமனுக்கு எடுத்துரைத்தார். இராமா! சென்ற கிருதயுகத்தின் தொடக்கத்தில் மறுபடியும் நான் அந்தப் புஜண்டரைக் கண்டேன். நீ இப்போது திரேதாயுகத்தின்

மத்தியில் பிறந்திருக்கிறாய். நீ பிறந்த எட்டாண்டு களுக்குப் பின் இந்தயுகத்திலும் அவரைப் பார்த்தேன். நரைதிரை ஏதுமின்றிக் காகபுஜண்டர் முன்பு பார்த்த தோற்றத்திலேயே வாழ்ந்திருக்கக் கண்டேன் என்று கூறி நிறைவித்தார்.

## கதை ஆய்வு வேண்டாம்

ஸ்ரீ வாசிட்ட சாரத்தில் புசுண்ட உபாக்கியானம் இந்த அளவில் நிறைவு பெறுகிறது. வாசிட்டம் உரைக்கும் புஜண்டர் பிறப்பு வரலாறு பற்றிய செய்தி, துளசி தாசர் உரைக்கும் வரலாற்றுடன் மாறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. துளசிதாசர் காலத்திற்கு முன்னரே, வடநாட்டில் நன்கு வழக்கில் இருந்த ஞானவாசிட்டத்தை ஆராயும் வாய்ப்புத் துளசி தாசருக்கு இருந்ததா இல்லையா என்பதை அறிந்து கொள்ள இயலவில்லை. மிகப்பெரிய அருளாளராகிய காகபுஜண்டருக்குக் காகவடிவமும், பாம்பு வடிவமும் அமைந்தமை சாபங்களால் என்பதைப் பேசும் துளசியைவிட, பிறப்பு வகையில் காகவடிவம் அமைந்தது என்று பேசும் வாசிட்டத்தின் சித்திரிப்புப் பொருந்தி வருவது போல் தோன்றுகிறது. இருவருமே பெரிய அருளாளர்கள், அவர்கள் சித்திரிப்புக்களை ஐயுற ஒன்றுமில்லை. புராண வரலாறுகளில் பிறப்புப் பற்றிய மெய்மை காண்பதில் முயல்வதை விட, அறிவூட்டல்களைத் தேடித் தொகுப்பதே ஏற்புடையதாக அமையும்.

## அபிதான சிந்தாமணி

அபிதான சிந்தாமணியில் ஆ. சிங்காரவேலு முதலியார் மேற்குறித்த ஞானவாசிட்டத்தில் வரும் காகபுஜண்டர் வரலாற்றைச் சுருக்கமாக உரைநடையில் தந்துள்ள தோடு, போகர் வரலாற்றை மேற்கோள் காட்டி, காகபுஜண்டர் பிறப்பு வரலாறு பற்றி வேறு ஒரு புதிய தகவலையும் தந்துள்ளார்.

## பகுளாதேவி

சிவபெருமான் திருமுன்பு மதுவுண்டு அன்னங்கள் இரண்டு களித்திருந்தன. அக்காலை சிவமூர்த்தி அவற்றைப் பார்க்க அந்த அன்னங்களிடம் சிவகலை காக உருவத்துடன் பதிந்தது. அன்னங்கள் இருபது முட்டைகளைப் பொரித்ததோடு, இருபத்து ஒன்றாவதாக ஒருகாகத்தைப் பொரித்தது. இதுவே, புஜண்டர் எனப் பெயருற்றது என்று விளக்கம் தருகிறார். காகபுஜண்டரைப் பட்சி வடிவாகிய இருடி என்று அவர் குறிக்கிறார். இவர் குமாரர் உரோமரிஷி என்ற குறிப்பும் இதில் இடம் பெற்றுள்ளது. சிவகலையின் தாக்கத்தால் அன்னத்திடம் காகபுஜண்டர் உருவானார் என்பது, அவரது சிவனருட் பெருமைக்கு ஏற்புடையதாகத் தோன்றுகிறது. காகபுஜண்டரின் துணைவியார் பெயர் 'பகுளாதேவி' என்று நாடி சோதிட ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேற்குறித்த நூல்களில் அது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை.

## புசுண்டன் கதை

வீரை ஆளவந்தார் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துள்ள 'ஞானவாசிட்ட அமல ராமாயணம்' என்ற நூலில் இருபத்து ஒன்பதாவதாகப் 'புசுண்டன் கதை' அமைந்துள்ளது. வடமொழி ஞானவாசிட்டத்தில் கூறப்பட்டுள்ள காகபுஜண்டரைப் பற்றிய அதே வரலாற்றை, விரிவான தத்துவ விளக்கக் கூறுகளுடன் வீரை ஆளவந்தார் தந்துள்ளார். தத்துவ நூல் என்பதாலும், வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாலும் பாடல்களில் ஏராளமான வடசொற்கள் விரவிக்கிடக்கின்றன.

## கற்பகத்தின் மேல் கற்பகம்

இந்நூலில் காகபுஜண்டர் பெருமை குறித்து வரும் பல அரிய கவிதைத் தொடர்கள் இடம் பெற்றுள்ளமை மகிழ்ச்சி தருகிறது. மேருமலைச் சிகரத்தில் கற்பகத் தருவில் காகபுஜண்டர் வீற்றிருந்தமை, கற்பகத் தருவின் மேல், வேறு ஒரு கற்பகத்தரு வந்து அமர்ந்திருப்பது போல் காணப்பட்டதாம்.

'மேரு வெற்பிற் சிகரத்தின்
மன்றல் கமழ் கற்பகத்து இருப்பக் கண்டேன்
மற்றோர் கற்பகம் போல்'

வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் அருள் நிரம்பியவர் காகபுஜண்டர் என்பதை ஆசிரியர் அழகிய உருவகத்தால் மெய்ப்பிக்கிறார்.

## திருமேனி எழில்

*காகபுஜண்டரை நேரில் கண்ட வசிட்டர் அவர் திருவுருவத்தை உள்ளத்தில் பதித்துக்கொண்டு வந்து பின்னர் இராமனுக்கு உரைக்கிறார். பெரிய உடல்: காகக் கூட்டத்துள் மலையைப் போன்ற உயர்ந்த வடிவம்: முழுநிறைவு பெற்ற மனம்: மௌன நிலை: மூச்சுக்காற்று உள்ளிழுத்து வெளியிடுவதால் ஏற்படும் சிறு அசைவுகளும் இல்லாத அமர்வு முதலியன வசிட்டரை ஈர்த்தன. இவற்றை,*

'.. பார உடல் காகத் திரளுள்
சயிலம் போலும் உயர் வடிவம்
.. சால நிறைந்தமனம்: மோனம்:
உயிரின் அசைவும் பிறவாமல்
உள்நோக்கு ஒழியாச் சுகம்'

*உள்ள நிலையில் காகபுஜண்டர் காணப்பட்டார் என அவர் திருமேனி அழகைக் கவிதை நம் உள்ளத்தில் ஓவியமாக முன்னிறுத்துகிறது. 'புனிதமான நன்னெஞ்சப் புசுண்டன்' என்று முனிவரின் மனத்தூய்மையும் இங்கே விளக்கப்பட்டுள்ளது.*

## எமபயம் நீங்கியது எவ்வாறு?

*காகபுஜண்டரை நோக்கி வசிட்டர் நீர் எமபயம் நீங்கியது எப்படி என்று வினவினார். அக்காலைக் காகபுஜண்டர் உரைத்த விடைகளைத் தமிழ் ஞானவாசிட்டம் அழகுபெறப்பதிவு செய்துள்ளது.*

'.. வாதனை நூல்
பிறிந்திடாத குற்றங்கள் முத்தம்
என்னும் பெருமாலை
எறிந்து ஊன்றாது இருக்கின்ற
இதயத்தாரை யமன் அணுகான்'

*மனத்துன்பம் நீக்குக...*

*நிலைபேறு என்ற மரத்தைப் பிளக்கும் அரிவாளாகவும், உடல் என்னும் மென் கொடியை அரிக்கும் புழுவாகவும், சுழலும் மனத்துன்பத்தைப் புறங்கண்டாரைக் காலன் நெருங்கமாட்டான். இதனை,*

'அறுதி மரத்துக்கு ஈர் அரிவாள்
ஆக்கை வல்லிக்கு எரிபுழுவாம்
மறுகு கின்ற மனத் துன்பம்
மருவா தாரை யமன் அணுகான்'

*எனக் காகபுஜண்டர் கூற்றாகக் கவிஞர் பதிவு செய்கிறார்.*

*ஆசையைத் துறக்க...*

*மனித உடலில் தங்கும் மனத்தை ஆசை என்ற பாம்புச் சுற்றாவிட்டால் எமன் அவ்வுடலை மாய்க்க மாட்டான்.*

'இறுதி உடலாம் மரத்தினைச் சூழநது
இரங்கும் மனத்தில் தலை வைத்து

நீண்ட நாள் கழித்து அகத்தியர் அந்நூலைக் காகபுஜண்டரிடம் சேர்ப்பித்தார் என்றும் ஒரு குறிப்புக் காணப்படுகிறது.

## 'காக' அடைமொழிப் பெயர்கள்

மேற்குறித்த ஆதாரங்களைக் கொண்டு, காகபுஜண்டர் அருள் வரலாற்றை வரையறுத்து உரைக்க இயலவில்லை. இந்திய இலக்கியங்களில் காகம் என்ற தொடக்கமுடைய பெயர் அமைந்தோர் பலர் இடம் பெற்றுள்ளனர். காகசங்கன் என்று பிராமணி என்பாளின் மகன் ஒருவன் வருகிறான். சோமதத்தன் என்பான் மகன் ஒருவனுக்குக் காகதத்தன் என்ற பெயர் வழங்கியிருந்திருக்கிறது. இராமனுக்கே காகதத்தன் என்ற ஒரு பெயர் உண்டு. பெருங்கதையில் காகதுண்டகன் என்ற ஒரு பாத்திரம் உள்ளது. காவிரிப்பூம் பட்டினத்தை ஆண்டிருந்த முதல் அரசனுக்குக் காகந்தன் என்ற பெயர் வழங்கி யிருந்துள்ளது. சுகநாகன் என்பான் பெயர் காகபர்ணன் என வருகிறது. சிவகணத்தவருள் ஒருவன் பெயர் காகபாதன் என்பது. கண்ணபிரானுக்கு உபநயனம் செய்தவன் காகமுனி என்று கூறப்பட்டுள்ளான். திருஞானசம் பந்தருடன் நல்லூர்ப் பெருமணத்தில் சிவசோதியில் கலந்து முத்திபெற்ற ஒருவரை ஆச்சாள்புரத் தலபுராணம் காகமுனிவர் என்று குறித்துள்ளது.

## பெயராய்வு

மேற்குறித்த பெயர்கள் பலவற்றுள்ளும் 'காக' என்பது ஒரு அடைமொழியாக, இடு குறியாகவே நிற்பது அறிய வருகிறது. காகபுஜண்டர் என்பதும் அவ்வாறான ஓர் இடுகுறிப் பெயராகவே இருந்திருக்க வேண்டும். புராண காலத்தில் இப்பெயர் பகுத்துப் பொருள் காணப்பட்டு, அவற்றின் பொருள்களுக்கு ஏற்பச் சம்பவங்களோடு கதைகள் பின்னப்பட்டிருக்கக் கூடும். அல்லது அவை உண்மையாகவும் இருந்திருக்கலாம். எங்ஙனமாயினும், பெயராய்விற்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் ஞானியாக, காலத்தை வென்று நின்ற ஒரு யோகியாக, மனிதகுல ஈடேற்றத்திற்காக அறிவுரைகள் வழங்கிய ஒரு கருணைக் கடலாகக் காகபுஜண்டரைப் போற்றி நிற்பதே ஏற்புடையது.

அடுத்துக் காகபுஜண்டர் அருளியனவாகத் தமிழ் மொழியில் நிலவிவரும் நூல்களையும், நூல் தரும் செய்திகளையும் அடுத்துவரும் பகுதியில் ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

# 4. காகபுஜண்டர் - நூலாராய்ச்சி

## பதிப்பில் குறைபாடுகள்

காகபுஜண்டர் நூல்களாகத் தமிழில் நிலவிவரும் நூல்களைப் பற்றிய செய்திகள் முதல் இயலில் தொகுத்துக் காட்டப்பட்டன. இந்நூல்கள் பற்றிய ஆய்வு ஒன்றும் தமிழில் இதுநாள் வரை மேற்கொள்ளப்படவில்லை. நூல்களையும், பாடல்களையும் பதிப்பித்தவர்களும், உரிய கவனம் செலுத்தி அவற்றைப் பதிப்பிக்காமை பெருங்குறை. பாடல்களைப் பகுத்து உள் தலைப்புக்கள் வழங்கியோர், உள்ளீடுகளை முழுமையாக ஆய்ந்தறியாது மேலெழுந்த வாரியாகத் தலைப்பிட்டுள்ளனர். சித்தர் பாடல்கள் மேல் மக்களுக்கு விருப்பம் ஏற்பட்ட காலை, விற்பனை நோக்கில் அவசர அவரசமாகவே நூல்கள் அச்சிடப்பட்டன. பதிப்புத்துறை, பன்முக வளர்ச்சி பெற்றிருந்தும், பெரும்பாலான சித்தர் பாடல் தொகுப்பில் பாடல் முதற் குறிப்பு அகராதி கூட

இணைக்கப்படவில்லை. பாடல்களின் யாப்புப் பற்றியோ, சீர்தளைகளை ஒழுங்குபடுத்திப் பதிப்பிக்க வேண்டும் என்றோ பதிப்பாசிரியர் கவலை கொண்டிருக்க வில்லை. தரமான பதிப்பகங்கள் கூட, சித்தர் பாடல் பதிப்பில் கவனம் செலுத்த வில்லை என்பது வியப்பைத் தருகிறது.

## யாப்புக்குறை

காகபுஜண்டர் பாடல்களிலும், அவற்றின் பதிப்புக்களிலும் மேற்குறித்த குறைபாடுகள் நிறைந்தே உள்ளன. நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள் பட்டியலில் காகபுஜண்டர் பெயர் இடம் பெறாமையால் இவரது நூல்களும், பாடல்களும் இதுநாள் வரை ஆய்வுக்கு உட்படுத்தப் படவில்லை. பட்டினத்தார் பாடல்கள், திருமூலர் பனுவல்கள், ஔவையாரின் குறள் முதலியன போல், காகபுஜண்டர் பாடல்களை ஆசிரியரின் வாக்கு என்று கொள்ள முடியவில்லை. பல பாடல்கள் அயல் கூற்றாகவும், சில பாடல்கள் மட்டும் அவரே பாடுவது போல் தன் கூற்றாகவும் வந்துள்ளன. ஆசிரிய விருத்தங்களிலும், குறள்களிலும் யாப்பு ஒழுங்கு முறையாக இல்லை. சித்தர் பாடல்களுக்கு உரை கண்டு, உட்பொருள் விளக்கம் காண்பதற்கு முன்னாகத் தெளிவான நல்ல பதிப்புக்களை வெளிக்கொணரச் சித்தர் ஆய்வாளர்கள் முயலவேண்டும்.

## காலக்கண்ணோட்டம்

தமிழில் நிலவும் காகபுஜண்டர் பாடல்களின் காலம் இன்னது என்பதைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. பல்வேறு சித்தர் பாடல்களில் காணப்படுவது போல், இவர் பாடல்களிலும், பாமரர் சொற்களும், பேச்சு வழக்கும் மலிந்துள்ளன. எதுகை, மோனைகளுக்காக விரும்பியவாறு சொற்கள் திரித்துக் கொள்ளப்பட்டுள்ளன. சில இடங்களில் வரிகளின் எண்ணிக்கைகளும் கூடுதல் குறைவாக உள்ளன. தமிழில் நிலவி வந்த காகபுஜண்டர் வரலாறு மற்றும் தத்துவக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு, மிகு புலமை இல்லாதவர்கள் இவற்றைப் பாடியிருக்கலாம் என்றே தோன்றுகின்றது. பாடல்கள் கி.பி. 18 அல்லது 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகலாம். பல சொல்லாட்சிகள் இம் முடிபுக்கு வரக் காரணமாக உள்ளன. பட்டினத்தார், திருமூலர் போன்ற தமிழ் நாட்டுச் சித்தர்களில் காணப்படும் பொருள் ஒழுங்கைப் பல சித்தர் பாடல்களில் காணமுடியவில்லை. என்றாலும், காகபுஜண்டர் பெயரில் இவை வழங்கப்பட்டு வருவதால் இவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவது வேண்டத்தக்க தாகிறது.

## நூல் அமைப்பு

காகபுஜண்டர் பாடல்களாகத் தமிழில் 1144 ஆசிரிய விருத்தங்களும், 16 குறட்பாக்களும் கிடைத்துள்ளன. ஆசிரியவிருத்தங்கள் பெரும்பாலும் அறு

சீராக அமைந்துள்ளன. ஒருசில இடங்களைத் தவிரப் பெரும்பாலான இடங்களில் பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. வடசொல் ஆட்சி மிகுதி. மிகப் பிற்காலத்தில் ஏற்பட்ட பிறமதங்களின் கலப்பால், அம்மதத்தார் வழங்கிய சில சொற்களும் இடையிடையே காணப்படுகின்றன. பல சொற்களின் மூல வடிவத்தை அறிவது கடினமாக உள்ளது. குரு தம்சீடனை முன்னிலைப் படுத்தி உரைப்பனவாகவே கவிதைகள் நடையிடுகின்றன. கவிதைகளின் போக்கில் எந்த ஒரு கருத்தும் நிரலே ஆய்வுக்கு உட்படுத்தப்படாது, தனித்தனிச் செய்திகளின் தொகுப்பாகவே பாடல்கள் நடையிடுகின்றன. யோகம், ஞானம் பற்றிய விளக்கங்கள் ஒரே வரிசையில் விளக்கப்பெறாது, பல இடங்களில் தொடர்ச்சியற்று விளக்கப்பட்டுள்ளன.

## உள்ளீடுகளுள் சில

இறைவணக்கம், தன் வரலாற்றுக் குறிப்பு, அறம் உரைத்தல், உலகியல் கூறுதல், சித்தர் நெறி, யோகம், ஞானம், மருத்துவம் எனப் பாடல்களின் உள்ளீடுகள் பலவாக அமைகின்றன. தமிழ் நாட்டுச் சித்தர்களில் ஒருவராக அறியப்படாத இவரது பாடல்களில் தமிழ்நாட்டுச் சித்தர்கள் பலரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. பல்வேறு கடவுளர்கள் குறிக்கப் பட்டுள்ளனர். சித்தர் வரலாறுகளில் இடம் பெற்றுள்ள சில சம்பவங்கள் விளக்கப்பட்டுள்ளன. வருணாசிரமம், ஜாதீயம் பற்றிய செய்திகள் ஏராளம்

காணப்படுகின்றன. கண்டனங்களுக்கும் குறைவில்லை. காகபுஜண்டர் வரலாறு குறித்துத், துளசி இராமாயணத்திலும், ஞான வாசிட்டத்திலும் குறிக்கப்பட்ட செய்திகளோடு, காகபுஜண்டர் பாடல்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள் ஒத்து அமையவில்லை. இராமாயணத்தோடு அவருக்கு இருந்த நெருக்கம் பற்றியும் தமிழ்ப் பாடல்களில் குறிப்புக்கள் இடம் பெற்றிருக்கவில்லை.

## ஔவை குறள்

காகபுஜண்டர் பனுவல்களில், முன் குறித்தவாறு பதினாறு குறள் வெண்பாக்கள் காணப்படுகின்றன. 'ஆத்திசூடி' என்ற ஒரு வரிப்பாடல்கள் அறிமுகமான காலம் வரை, தமிழ் யாப்பியலில் குறளே மிகச் சிறிய கவிதை வடிவமாகத் திகழ்ந்திருந்தது. உயரிய செய்திகளை மனத்தில் சென்று பதியுமாறு சுருங்கிய வடிவில் சொல்வதற்குக் குறள் யாப்புப் பெரிதும் உதவியாக நின்றது. அறம் உரைக்க வந்த வள்ளுவர் இந்த யாப்பினைப் பற்றி நின்றே தம் அறநூலைப் படைத்தார். சைவ சமயத்துறையில் உமாபதி சிவாசாரியார் தம் திருவருட்பயனைக் குறள் யாப்பில் படைத்து வெற்றி கண்டார். வள்ளுவருக்குப் பின்னும், உமாபதி சிவத்தின் காலத்திற்கு முன்னும் வாழ்ந்திருந்த ஔவையார் ஒருவர் குறள் யாப்பில் 310 குறள்களை யாத்தளித்தார். வள்ளுவரின் அதிகார அமைப்பில் அமைந்த இந்த நூலை 'அவ்வைகுறள்' எனப்பின் வந்தோர் அழைத்தனர். வீட்டு நெறிப்பால்,

திருவருட்பால், தன்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டிலங்கும் இந்நூல், உயிரின் ஈடேற்றம் குறித்த வழி முறைகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. மீ.ப. சோமு நிறைவில் அமைந்துள்ள பத்துக் குறட்பாக்களை நூற்பயன் என்று குறித்துள்ளார். இந்நூல் யாப்பியல் வடிவத்திலும், தத்துவச் செறிவிலும் பெரிதும் சிறந்து நிற்பது. சித்தர்கள் அதிகம் கையாளாத குறள் யாப்பில் காகபுஜண்டர் குறள் அமைந்திருப்பது எண்ணத்தக்கது.

## சித்தர் அல்லர்

இப்பகுதியில் அமைந்துள்ள பதினாறு குறட்பாக்களும் காகபுஜண்டர் அருளியன என்று கருத, ஆறாவது குறள் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.

> 'சித்தர் பதினெண்மர் செய்கையில் தோன்றாத
> அத்தனரு ளும்புசுண்டன் யான்'

இக்குறள் மூலம், சித்தர் பதினெண்மரில் ஒருவராகக் கருதத்தக்கவர் அல்லர் காகபுஜண்டர் என்பதும், அவர்களிலிருந்து வேறுபட்டவர் என்பதும், இறைவன் திருவருள் பெற்றவர் என்பதும் விளங்குகின்றன. இது பற்றியே வடநாட்டார் இவரை இருடிகளில் ஒருவராகக் குறித்துள்ளனர். வள்ளுவரோ, உமாபதி சிவமோ, ஔவையாரோ, தத்தம் நூல்களில் தன் வரலாறு உரைத்திலர். மாறாக இக்குறளில் ஆசிரியர் தன் கூற்றாக 'அத்தனருளும் புசுண்டன் யான்' எனக் குறித்துள்ளமை நோக்கத் தக்கது.

### ஓர் அகச்சான்று

காகபுஜண்டர் என்ற பெயர் பற்றி, இவர் காக்கை வடிவினர் என வடபுலத்தார் கதை நடத்தினர். தென்னாட்டாரும் காகம் என்பது கொண்டு இவ்வருளாளரைக் காக வடிவினர் என்றே சித்தி ரித்தனர். ஆனால், இவரது ஒரு குறள்,

'நேத்திரத்தைக் காகம்போல் நிச்சய மாம் நிற்க
ஆத்துமத்தில் ஆனந்த மாம்'

என வருகிறது. ஆன்மா எனப்படும் உயிர் இன்பத்தில் நிலைபெற வேண்டுமென்றால், காக்கைத் தன் கண்களைப் பயன் கொள்வது போல், நீயும் பயன் கொள்வாயாக என்று உரைத்து நிற்கிறது. 'பொறிவாயில் ஐந்தவித்தான்', என்று இறைவனைக் குறிப்பார் திருவள்ளுவர்.

'சுவை ஒளி ஊறுஓசை நாற்றம் என்ற ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு'

எனப் புலன்களை ஆள்வாரிடம் உலகம் வசப்படும் என்றும் அவரே எடுத்துரைப்பார். தீமை தன்னை வந்து சூழ்ந்து விடாது நாலாபுறத்தும் தன் விழிகளைச் சுழற்றி, ஆபத்து வாராது பரிகரித்து ஒழுகுவதில் காக்கை விழிப்புணர்வு கொண்டது. அதனைப் போல் மனிதனும், பொறிகள் புலன் வழி சேராது பரிகரித்து வாழ்ந்தால் உயிர் இன்பமடைதல் ஒரு தலை என்பதை இக்குறள் அழகுற எடுத்துரைக்கிறது. காகத்தை

உவமை கூறியதற்கும் இவரது பெயருக்கும் ஏதும் தொடர்பிருந்திருக்கக் கூடுமா என்பது புலனாக வில்லை. ஔவையாரும் தம் குறளில்

'ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைப் படுத்தும் அளறு'

என்று புலன்களே ஆசையின் வாயில்கள் என்று குறித்துள்ளார்.

## நீடுவாழ வழி காட்டுதல்

ஞானிகளும், இருடிகளும், 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர் நோக்கு உடையவர்கள். தாம் அரிதின் கண்டு தெளிந்த ஞான அனுபவங்களையும், தவம் கிடந்து பெற்ற இறையருள் ஈட்டத்தையும் மனித குலத்திற்கு எடுத்துரைத்து, அதனை நல்வாழ்வு வாழ வழிகாட்டிய வள்ளன்மை உடையவர்கள். 'சேரவாரும் செகத்தீரே' என்று அறைகூவி அழைத்து உலகவருக்கு ஞானம் வழங்கிய கருணாமூர்த்திகள். யுக முடிவிலும், பிரய காலங்களிலும் மரணத்தை வென்று நின்ற சிரஞ்சீவி காகபுஜண்டர். உலகத்தவர் நீண்ட வாழ்நாள் பெற்று, மகிழ்ந்து வாழ்வதற்குரிய வழிமுறைகளைத் தம் பனுவல்கள் வாயிலாக உலகவருக்கு எடுத்துரைக்க முன் வந்தவர் அவர் என்பதை,

'சொன்னேன் அறிந்து சுகமாய் உலகோருக்கு
எந்நாளும் வாழ்க வென்றே யான்'

என்ற குறள்வழி அறியமுடிகிறது. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற தாயுமானார் கருத்தும் காகபுஜண்டர் கருத்தோடு ஒத்திருத்தல் ஒப்பு நோக்கத்தக்கது.

## நாதனடி நம்பு

தாம் எவ்வளவு இறையருள் பெற்றிருந்த போதும், இறைவன் பேரருளை மறவாது பற்றி நிற்பவர்கள் ஞானிகள். சித்திகள் பல கைவரப் பெற்று, இறைவனுக்கு ஒப்பாக ஐந்தொழில்கள் நிகழ்த்தும் ஆற்றல் கைவரப் பெற்றிருப்பினும். தம்மை வணங்கி வழிபட்டால் போதும் என்று அன்னார் உரைத்திலர். அப்போதும் இறைவனையே முன்னிறுத்தினர். நம்பிக்கையே சமய வாழ்வின் அடித்தளம். இறைவன் ஒருவன் உளன். அவன் யாவரினும் மேலானவன். அவன் அருள் நம்மைக் காக்க வல்லது. நம்பினோர் கெடுவதில்லை என்ற உணர்வு தலைப்படும்போது இறையருள் பெறுதல் எளிதாகிறது. அருளாளர்கள் வரலாறுகளிலும், சித்தமூர்த்திகளின் வாழ்விலும், இந்த நம்பிக்கையே அவர்களின் மூலதனமாகத் திகழ்ந்திருப்பதைக் காண முடிகிறது. பிரகலாதன் நம்பிக்கையை மகிழ்வுடன் போற்றித் திருமால் நரசிங்கமாகத் தூணிலிருந்து வெளிப்பட்டான். பாண்டவர் நம்பிக்கையில் கண்ணன் தன் நிலையில் தாழ்ந்து நின்று அவர்களுக்கு வாழ்வளித்தான். மார்க்கண்டேயன் உறுதி கண்டு, சிவபெருமான்

பாணத்தைப் பிளந்து வெளிப்போந்து காலனைக் காய்ந்தார். இந்த உலகம் பொய்: உற்றார் உறவு, நட்பு என்பன எல்லாம் மாயத் தோற்றங்கள். அவற்றை எல்லாம் உண்மை என நம்பி ஏமாற்றமடையும் மனித குலத்திற்கு எளிய இனிய குறளில் காகபுஜண்டர் அறிவுரை கூறுகிறார்.

> 'உலகமே மாயமென உன்மனதில் கண்டு
> நலமாக நாதனடி நம்பு'

எவ்வளவு பெரிய தத்துவத்தை, நம் ஞானக்குருமார்கள் எவ்வளவு எளிதாகச் சொல்லிச் சென்றுள்ளனர் என்பதை நினைக்கும்போது வியப்பு மேலிடுகிறது.

### காரணமாய் நின்றான்

இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையே நிலவும் உறவு இன்னது என்பதை உறுதி செய்வதில், வேத வழிப்பட்ட வைதிக மதங்கள் தங்களுக்குள் கலாம் விளைத்துக் கொண்டன. ஒரு சாரார் கருத்தைப் பிறிதொரு சாரார் ஏற்க மறுத்தனர். தம் தனித்திருக் குறுந்தொகையுள் திருநாவுக்கரசர்,

> 'விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
> முருக வாங்கிக் கடையமுன் னிற்குமே'

என்றுஇறைவனின் புலப்பட்டுத்தோன்றாத இருப்பை, உவமைகள் வாயிலாகப் புலப்படுத்தி நிறுவுகிறார்.

விறகிடைத் தீ இருப்பது புலனாவதில்லை: பாலில் நெய் மறைந்தே நிற்கிறது. மத்தால் கடையும் போது வெண்ணெய் வெளிப்படுதல் போல், தன்னுள் மறைந்திருக்கும் இறைவனை, மனிதன் தன் சாதனைகளால் முயன்று உள்முகமாகக் கண்டு மகிழ முடியும் என்கிறது தேவாரம். உலகுக்கு மூல காரணன் இறைவன். தன் மேலான கருணை காரணமாகவே, உயிர்கள் உய்ந்து, மலபரிபாகம் பெற அவன் தனு, கரண, புவன, போகங்களை ஆக்கி அளிக்கிறான். இவ்வரிய உண்மையைக் காகபுஜண்டர் 'காரணமாய் நின்றான்' என்ற தொடரால் வெளிப்படுத்துகிறார். அவன் உயிரோடு கலந்து நிற்கும் நிலையைக் 'கண்ணுள் மணியாகி' என்ற அரிய தொடர் வழித் தம் குறளில் எளிமைப்பட எடுத்துரைக்கிறார். 'கண்ணுள் மணியாகிக் காரணமாய் நின்றான்' என்பது அவ்வரிய தொடர். இக்குறளின் பின்னடி பிழையாக அமைந்துள்ளது. என்றாலும், அத்தகு இறைவனை உள்ளவாறு உணர்ந்து, உயிர்கள் போற்றி உய்ய வேண்டும் என்பதே அவர் கருத்தாதல் கூடும் என உணர முடிகிறது.

## உலகியல் போற்றுக!

அறிவனவற்றுளெல்லாம் மேலான அறிவு உலகியல் அறிதலேயாகும். உலகியல் கல்லாதவர், பலகற்றும் அறிவுடையராகக் கருதப்பட மாட்டார் என்பர் வள்ளுவர். 'உலகம் தழீஇயது ஒட்பம்' என, உலகத்தவரை நட்பாக்கிக் கோடலே அறிவு என்பதும்

அவர் மதிப்பீடுகளுள் ஒன்று. உலகத்தவர் 'உண்டு' என்று ஏற்றுக் கொண்ட ஒன்றை, 'இல்லை' என்று சாதிப்பானை, அவன் மனிதனே யாயினும், அவன் 'பேய்' என்றே கருதப்படுவான் என்று, உலகத்தோடு ஒட்ட ஒழுகலைத் திருவள்ளுவர் பெரிதெடுத்துப் பேசுகிறார். உலகியல் என்பதையே, பெரியோர் மரபு என்றனர். சமய வாதிகள் 'ஆன்றோர் ஆசாரம்' எனக் கூறினர். முன்னே வாழ்ந்திருந்த அறிஞர்களின் அனுபவ வெளிப்பாடுகள், பின்னே வாழ்வாருக்குக் கைவிளக்குகளாகத் திகழ்வன. 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' என்கிறது அறநூல். காகபுஜண்டர் உலகியல் அறிந்து வாழ வற்புறுத்துகிறார். அறநூல்களும், சமயநூல்களும் உலகியலை ஒட்டி நின்றே நடையிடுகின்றன. மனித வீழ்ச்சிக்கு, உலகியல் அறியாமை ஒரு காரணம் என்றால், ஒன்றில் பற்றி நில்லாது அலைபாயும் மனமும் ஒரு காரணமாகிறது. இதுபற்றியே சித்தர்கள் மனத்தைக் 'குரங்கு' என்றும், 'பேய்' என்றும் உருவகித்துப் பாடினார். காகபுஜண்டர் இவற்றை எல்லாம் உள்ளடக்கி

> 'உலகியல் அறிந்தோர் ஒரு நாளும் மாளார்
> பலநினைவை விட்டுநீ பார்'

'மாளார் ' என்பதை நீண்ட வாழ் நாளாகவும் கொள்ளலாம். அல்லது புகழுடம்புடன் வாழ்வர் என்றும் கொள்ளலாம்.

## தொண்டு செய்து பெற்ற சுகம்

இறைவனோடு தொடர்பு கொண்டு வாழும் சீரடியார் உலகில் பலர். நல்ல ஞான குருவின் உதவியோடு இறையனுபவம் அவர்களுக்கு வாய்த்திருக்கும். குருநாதனை அணுகி, அவனுக்குத் தொண்டு செய்து, அவன் ஏவல் வழி நின்றோர் இறையருள் பெறுதல் எளிது. குருவும் இறைவனும் வேறல்லர் என்பது வைதிக மதங்களின் துணிபு. 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்பது திருமூலர் வாக்கு. மணிவாசகருக்குத் திருப்பெருந்துறையில், குருந்தமரநிழலில், குருவடிவாக வந்து இறைவன் ஞான உபதேசம் செய்தான். குருவழி நின்று இறையனுபவம் எய்தப் பெற்றவர்கள் தாம் பெற்ற அருளின்பத்தைப் பிறருக்கு உரைத்திலர். அது உரைக்கவும் ஒண்ணாதது. திருவாசகம் போன்ற ஞானநூல் கருத்துக்கள், அநுபவம் பெற்றார்க்குப் புலனாகுமே அன்றிச் சொற்பொருள் அறிந்தாருக்கெல்லாம் புலனாதல் இல்லை. இது பற்றியே, திருவாசகம் முதலிய அநுபவ நூல்களுக்கு நம் முன்னோர், உரை காணாது விட்டனர். சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகத்தின் பொருள் தில்லை நடராசனே என்று உரைத்தல் நோக்கத்தக்கது. காகபுஜண்டரும் இவற்றை எல்லாம் உள்ளடக்கி,

'கண்டோருஞ் சொல்லார் கருத்தால் பெரியோரைத்
தொண்டு செய்து பெற்ற சுகம்'

என்று கூறிப் போந்தார். தாய் ஒருத்தித் தன் மணாளனோடு கூடிப்பெற்ற சுகத்தை மகளுக்கு உரைக்க இயலாதது போல், இறையநுபவங்களை ஞானிகள் விண்டுரைக்க மாட்டார்கள் என்பது புலனாகிறது.

## யோகமும் கற்பமும்

மேலும், தம் குறள் வெண்பாக்களில் சிவராஜயோகம் பற்றியும், பிராணாயாமத்தின் சிறப்புப் பற்றியும், அறுபத்து நான்கு வகை யோகக் கூறுகள் பற்றியும் பல அரிய குறிப்புக்களை வழங்குகின்றார். இப்பதினாறு குறள்களில் தாம் உரைக்கவந்தன இவை இவை என்பதை அவரே,

'யோகமுடன் கற்பம் உரைத்தேன் ஈ ரெட்டினில்
வேகமுடன் கண்டுணரு வீர்'

என்று குறித்துச் செல்கிறார். யோகம் என்பது முன்னரே விளக்கப்பட்டது. கற்பம் என்பதற்குப் பொருள் பலவாயினும், இங்கே ஆயுளை நீட்டிக்கச் செய்யும் வழிமுறை அல்லது மூப்பு வாராமல் செய்யும் மருந்து என்று கொள்வது பொருத்தமாகலாம். நிறைவுக் குறளில்

'வாசிமுனி மைந்தா மருவு பிரமத்தில்
மோசம்வா ராகுறள்முற் றும்'

தாம் உரைத்த குறள் பகுதி நிறைவடைந்து விட்டதாக ஆசிரியரே இவ்வாறு குறித்துள்ளார்.

## காப்புச் செய்யுள்

இனி சித்தர் பாடல் தொகுதியில் காகபுஜண்டர் பாடல்கள் என்று தலைப்பிட்டுத் தொகுக்கப்பட்டுள்ள 79 பாடல்களை ஆராயலாம். இவற்றைப் புசுண்ட உபநிடதம் எனவும் கூறுகின்றனர். இரண்டாவதாக வரும் பகுதியில் 65 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியின் முதற்பாடல் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது.

'ஆதிஎனை ஈன்றகுரு பாதம் காப்பு
அத்துவிதம் பிரணவத்தின் அருளே காப்பு
நீதியாம் ஆரூட ஞானம் பெற்ற
நிர்மலமாம் சித்தருடைப் பாதங் காப்பு'

என வரும் காப்புச்செய்யுளில், இறைவன், பிரணவம், சித்தர் காப்புகள் இடம் பெற்றுள்ளன.

## யோகச் சிறப்புரைத்தல்

காகபுஜண்டர் வரலாற்றுக் கூறுகள் பல இவ்விரு உபநிடதப் பகுதிகளில் காணப்படுகின்றன. விண்வெளியில் காகபுஜண்டர் நிர்விகர்ப்பச் சமாதி நிலை பெற்று நீண்ட நாள் உயிர் வாழ்ந்த திறம் அவர் கூற்றாகவே அமைந்துள்ளது. காகபுஜண்டர் என்ற பெயர் பெற்றமை குறிக்கப்பட்டுள்ளது. இறைவனை நெஞ்சத்தில் இருத்தி வெகுகோடி காலம் அவர் வாழ்ந்திருந்த திறமும் விளக்கப்பட்டுள்ளது.

'காணாத காட்சியெல்லாம் கண்ணில் கண்டு
காகமடா புசுண்டரெனும் பேரும் பெற்றேன்'

என்றும்,

'...... மனம ஒனறாக
ஏகபரமாம் பொருளை இருத்தி ஒன்றாய்
நிறுத்தியே வெகுகோடி காலம் மட்டும்
நிருவிகருப்பச் சமாதியிலே நிறைந்து..'

என்றும், தாம் வாழ்ந்திருந்ததாகவும், தன் கூற்றாக அநுபவ நிலைகள் உரைக்கப்பட்டுள்ளன. அவர் பிரமதீத முத்திபெற்றதாகவும், பிரமாண்டத்தின் முடிபு வரை சென்றதாகவும், அனேக சொரூப சித்தி பெற்றதாகவும், தம்மினும் மேலான பெரியோர் அன்பு தமக்குக் கிடைத்ததாகவும், பல அண்டங்களை சில நொடிகளில் கடந்து சென்றதாகவும், இவையாவும் யோகத்தால் கைகூடி வந்தன என்றும் காகபுஜண்டர் உரைத்தருளுகிறார்.

'ஆச்சப்பா எத்தனையோ கோடி காலம்
அந்தப் பிரளயத்துக்கு அதுவாய் நின்றேன்
மூச்சப்பா ஓடவில்லை பிரம தீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற் சென்றேன்'

என்றும்,

'பேர்கொண்டேன் சொரூபசித்தி அனேகம் பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்கு பிரிய னானேன்

வேர்கண்டேன் ஆயிரத்தெட்டு அண்ட கூடம்
வீதியெலாம் ஓர்நொடிக்குள் விரைந்து சென்றேன்'

*என்றும், கூறும் பகுதிகள் வரலாற்று அகச்சான்றுகளாக அமைகின்றன.*

## *பிறப்புரைக்கும் பேராளர்*

*காகபுஜண்டர் வசிட்டரைச் சந்தித்தபோது, நீர் பிறந்து இறந்து, இந்த அண்டத்தில் தற்போது எட்டாவது முறை பிறந்துவந்துள்ளீர்கள் என்று அறிவுறுத்துகிறார். பல கோடி காலம் பலர் பிறந்து இறக்கவும், தாம் இறவாது வாழ்ந்திருந்த இந்த முனிவர் பெருமகனார், ஒவ்வொரு வரை எதிர்ப்படும் போதும், அவருக்கு இது இத்தனையாவது பிறப்பு என்று கூறி அவரை வியப்பில் ஆழ்த்துகிறார்.*

'.. வசிட்டரே நீர்
பிறந்து இறந்தே எட்டாங்கால் பிறந்து வந்தீர்'

*என்று குறிப்பிடும் பகுதி காகபுஜண்டரின் வியப்பூட்டும் யுகங்கடந்த பெரு வாழ்வைக் குறித்து நிற்கிறது.*

## *சிவனார் முத்தம் பெற்றது*

*காகபுஜண்டர் வரலாறு குறித்த சில செய்திகள் இவ்விரண்டு உபநிடதப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. இமயமலையில் ஒருமரக்கிளையில்*

அமைநத கூடடில, தாம காக வடிவத்துடன் வாழ்ந்திருந்த செய்தியை,

'.. காகமென்ற ரூப மானேன்
வடவரையின் கூடுதொத்தி இருந்தேன்..'

என்று பகுதி எடுத்துக்காட்டுகிறது. இன்று உலகில் பேசப்படும் சித்தர்கள் பலருக்கும் முன்னே பிறந்து வாழ்ந்த ஆதிசித்தர் காகபுஜண்டரே என்பதை,

'ஆரடா' என்னைப்போல் அறிவா ருண்டோ
ஆதியென்ற சித்தருக்கும் ஆதி யானேன்'

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. இவர் சிவபெருமானைக் காக வடிவில் சந்தித்ததாகவும், அப்போது அவர் இவரைக் கைகளில் எடுத்து முத்தமிட்டதாகவும் ஓர் அரிய செய்தி இப்பகுதியில் காணப்படுகிறது. வடஇந்திய மொழி நூல்களில் இச்செய்தி இடம் பெறவில்லை.

'.. விமலரிடம் செல்லும்போது
வெற்றியுடன் எனை எடுத்து முத்த மிட்டார்'

என்றும்,

. கயிலையின்மேல் இருக்கச் சொன்னார்
காகமென்ற ரூபமாய் இருந்தேன்..'

என்றும் வரும் தொடர்கள் இதனை உரைத்து நிற்கின்றன.

## குடும்ப வரலாற்றுப் பதிவுகள்

மேலும், காகபுஜண்டர் வரலாறு குறித்து வேறுசில செய்திகளும் இப்பகுதியில் காணப் படுகின்றன. 'வடசாளிமைந்தன்' என்றும், 'கன்னி யுடை மைந்தன்' என்றும் இவர்தம்மைக் கூறிக் கொள்கிறார். இவர் உடன் பிறந்தார் ஐவர் என்றும், அவருள் இவரே மூத்தவர் என்றும் குறிப்புக் காணப்படுகிறது. இவர் பிரம குலத்தவர் என்று தம்மைக் குறித்துக் கொண்டாலும், சாதிகள் ஏதும் தமக்கு இல்லை என்கிறார். சாதி பேதம் பேசுவாருக்குச் சாபமும் இடுகிறார்.

'... என்குலந்தான் சொல்லக் கேளு
பார்தனிலே பிரம்மனுடை விந்து வாலே
ஆரப்பா பிறந்துவிட்டோம் ஐந்து பேரும்'

என்றும்,

'... சாதிகுலம எங்கட் இல்லை
கருத்துடனே என்குலம் சுக் கிலந்தான் மைந்தா
தோணப்பா தோணாமல் சாதி பேதம்
சொல்லுவான் சுருக்கமாகச் சுருண்டு போவான்'

என்றும் வரும் தொடர்கள் அகச்சான்றுகளாக அமைகின்றன. இவர் கண்டன் என்ற காகத்துக்கும், அன்னத்துக்கும் மகனாகப் பிறந்தார் என்றும், இவருடன் பிறந்தார் இருபதின்மர் என்றும் கூறும் ஞானவாசிட்ட வரலாற்றுடன் இவ்வரலாறு முரண்படுகிறது.

**வாலைக் கண்ணி**

தமிழ் நாட்டுச் சித்தர்கள் பலரும் உமையை 'வாலை' என்று பெயரிட்டு அழைத்து வழி பட்டு வந்துள்ளனர். கொங்கணச்சித்தர் 'வாலைக்கும்மி' என்றே ஒரு பகுதி பாடியுள்ளார். அதில் அவர் அம்மையை, 'கல்வி நிறை வாலைப்பெண்', 'சக்தி சடாதரி வாலைப்பெண்', 'சித்தர்கள் போற்றிய வாலைப்பெண்', 'அந்தரி சுந்தரி வாலைப்பெண்' என்றெல்லாம் பலபடப் பாராட்டுகிறார்.

'காலனைக் காலால் உதைத்தவளாம்-வாலை
ஆலகாலவிடம் உண்டவளாம்
மாளாச் செகத்தைப் படைத்தவளாம் – இந்த
மானுடன் கோட்டை இடித்தவளாம்'

என்றும்,

'சிரித்து மெல்லப் புரமெரித்தாள் – வாலை
செங்காட்டுஞ் செட்டியைத் தானுதைத்தாள்
ஒருத்தி யாகவே சூரர் தமை – வென்றாள்
ஒற்றையாய்க் கஞ்சனைக் கொன்றுவிட்டாள்'

என்றும் நீளும் வாலைக்கும்மி, எல்லாத் தெய்வமாகவும் நிற்பாள் வாலை ஒருத்தி மட்டுமே என்று உறுதிப்படுத்துகிறது. கொங்கணச் சித்தர் வாலைக்கும்மியில் *111* கண்ணிகள் இடம் பெற்றுள்ளன.

## வாலை வழிபாடு

*காகபுஜண்டர் பாடல்களிலும் வாலையின் சிறப்பெடுத்துப் பேசப்பட்டுள்ளது.*

'இடப்பாகம் இருந்தவளும் இவளே மூலம்
இருவருக்கும் நடுவான திவளே மூலம்
தொடக்காக நின்றவளும் இவளே மூலம்
சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளே மூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளே மூலம்
ஐவருக்கும் குருமூலம் ஆதி மூலம்
வடக்கோடி கற்பமதில் நின்ற மூலம்
கன்னியவார் சிறுவாலை கன்னி தானே'.

*எனவரும் பாடல் உமையின் பெருமைகளைப் பரக்கப் பேசி நிற்கக் காண்கிறோம். பெருநூல் காவியத்தின் காப்பிலும்,*

'பாதிமதி அணியீசன் உமையாள் காப்பு
பக்தியுள்ள வாலையின் தன்பாதம் காப்பே'

*என வாலையை வாழ்த்தித் தொடங்குகின்றார். வாலையை இவர் 'சிவமேகன்னி'; மாது கலியாணி; 'தாமான சிறியவாலை' என்றெல்லாம் குறித் தருளுகின்றார்.*

## 'நமசிவாய' நுட்பம் உரைத்தல்

*'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தைப் பஞ்சாட்சரங்கள் என்று சித்தாந்திகள் குறிப்பர். இதில்*

ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொன்றின் குறியீடாக நிற்றலைத் திருமந்திரம் முதலிய நூல்கள் விரித்துரைக்கும். இவற்றை முன் பின்னாக இடம் மாற்றி அமைப்பதன் மூலம் பல நுட்பப்பொருள்கள் தோன்றும். இவற்றை உமாபதி சிவத்தின் சாத்திரநூல்களும் விரித்துரைக்கும். இவற்றை எல்லாம் உட்கொண்ட நுண்ணிய கருத்தமைந்த பாடல் ஒன்று உபநிடதப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதன் நுட்பம் குருமுகமாகக் கேட்டுணர்தல் வேண்டும். அந்த அரியபாடல்,

'காண்பேனே நகாரமது மகாரம் புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம் புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம் புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம் புக்கும்
கோண்பேனே வகாரமது சுடரிற் புக்கும்
குருவான சுடரோடி மணியிற் புக்கும்
நாண்பான மணியோடிப் பரத்திற் புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்கும் சிவத்தைக்கேளே'

என அமைந்துள்ளது.

## அறவுரைகளுள் சில...

தத்துவ நூல் கருத்துக்களோடு, நல்லறங்களும், மனித குலத்துக்குத் தேவையான அறிவுரைகளும் உபநிடதப் பகுதியில் காணப்படுகின்றன. உலகில் தாம் என்ற அகந்தை கொண்டலையும் மனிதர்களை விட்டு விலகி வாழவேண்டும். மிக ஊண் விரும்புதல்

*கூடாது. ஒரு பக்கமாக நின்று உண்மைக்குப் புறம்பாகச் சாட்சியம் உரைத்தல் வேண்டாம். பிரணவத்தை மறவாது போற்றவேண்டும். சோம்பித்திரிதல் கூடாது. காமப்பேய் கொண்டு அலைவாரொடு இணங்கி வாழாதே என்றெல்லாம் காகபுஜண்டர் அறிவுரை கூறுகிறார்.*

**'தாம் என்ற உலகத்தில் மனித ரோடே**
**சஞ்சாரஞ் செய்யாமல் தனித்து நில்லே**
**ஓமென்ற ஊண்மிகுத்து உண்டி டாதே**
**ஓரமாய் வழக்கதனை உரைத்தி டாதே**
**ஆமென்ற அட்சரத்தை மறந்தி டாதே**
**ஆயாச மாகவுந்தான் திரிந்தி டாதே**
**காமப்பேய் கொண்டவனோ டிணங்கி டாதே**
**காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே'**

*தண்டுமுண்டு செய்து மனம் வேறானால் தற்பரமாகிய இறைவனை அறிதல் இயலாது. பெரியோருக்குத் தொண்டு செய்து தத்துவ நூற்பொருளை அறிதல் வேண்டும். அவர்கள் ஒருவேளை விரித்துரைக்கத் தயங்கினால் மனவடக்கம் கொண்டு உற்று நோக்கினால் தத்துவ நூற்பொருள்கள் விளங்கி நிற்கும் என்றெல்லாம் இப்பகுதி அறிவுரைகளின் அணி வகுப்புகளாக அமைகிறது.*

## போலிக்குருவை இகழ்தல்

*போலிக் குருமார்களையும், தத்துவம் உணர்ந்தார் போல நடித்து நிற்பாரையும் இனங்காட்டி*

இந்நூற்பகுதி நடையிடுகிறது. நிட்டை கூடுதல், சமாதிநிலை கைவருதல் இலராய், வேத, புராணங்களும், காவியங்களும், மந்திரங்களும் உலகில் கோடிக்கணக்கில் உண்டென்று சொல்லியும், கோயில் என்றும், தீர்த்த மென்றும் நம்பிக்கை யூட்டியும் ஏய்ப்பார் பலர் அக்காலத்தும் வாழ்ந்திருந்தனர் போலும்! அவர்களை எல்லாம் காகபுஜண்டர் சாடத்தவறவில்லை.

'நிட்டையுடன் சமாதியுமே பொருந்தாமல்தான்
வல்லவர் போல் வேதபுராணம் காவி யங்கள்
மந்திரங்கள் கோடான கோடி யென்றும்
சொல்லுவார் கோவிலென்றும் தீர்த்த மென்றும்
திருடர்கள்தாம் அலைந்தலைந்து திரிவார்..'

எனச் சாடுகிறார். போலிக்குருமார்கள் சிலர்,

'விரிவான வேடமிட்டுக் காவி பூண்டு
வெறும் பிலுக்காய் அலைந்திடுவான் நாயைப்போலே
பரியாச மாகவுந்தான் தண்டு மேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான் பாரே'

என்று போலிச் சாமியார்களை இகழ்ந்துரைக்கிறார்.

### கபட 'வாய்ஞானம்'

சித்தர்கள் பலர் பூடக மொழிகளால் ஞானம் உரைத்துச் சென்றனர். அவற்றின் உண்மை அறியும் வலிமையில்லார் திரிபுபட உணர்ந்து பிழைபட்டனர். பலர், பிறர் அறிந்துகொள்ளக் கூடாதென்றே

*பரிபாஷைகளால் நூல் உரைத்தனர். நம் நாட்டில் சித்தர் உரைத்த ஞானங்களும், மருத்துவமும் மக்களை முழுமையாகச் சென்றடையாமைக்கு மறைத்துக் கூறும் சித்தர்கள் போக்கே காரணமாய் அமைந்தது. இவற்றை எல்லாம் கண்டிக்கிறார் காகபுஜண்டர்.*

'நாட்டுவார் சித்தரெல்லாம் பேத மாக
நலம்போலே சாத்திரங்கள் காட்டி னார்கள்
பூட்டியே மனிதரெலாம் நூலைப் பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாரா மற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப் போலே
கபடமாய் வாய்ஞானம் பேசு வார்கள்
காட்டிலே அமைந்திருக்கும் குயிலைப் பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப் பாரே!'

*சித்தர் நூல்களை முழுதும் உணராத சிலர், எல்லாம் அறிந்தவர் போல், வாய் ஞானம் பேசித் தருக்கித் திரிவதை ஆசிரியர் ஏளனம் செய்கிறார்.*

**தூலத்துள் சூட்சுமம்**

*ஆணவத்திலிருந்து விடுபட்டு, சாதனங்கள்வழி முறையாக முயன்றால் குறைவற்றதான ஞானமும், அதன்வழி திருவடிப்பேறும் வாய்த்தல் ஒருதலை. தூலமாகப் புலப்பட்டுத் தோன்றும் ஒவ்வொரு பொருளிலும், சூட்சுமமாக இறைவன் மறைந்து நிற்கிறான். இதனை உணர்வார் வீடுபேறு எய்துதல் எளிதாகும். இவற்றை எல்லாம் உள்ளடக்கி நிற்கிறது ஓர் அரிய பாடல்.*

'வேணுமென்றால் எள்ளுக்குள் எண்ணெய் போலும்
வித்தினிடத் தடங்கிய விருட்சம் போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம் போலும்
கன்றாவின் பாலிலுள்ள நெய்யைப் போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வன்னம் போலும்
தூலமதில் சூட்சுமந்தான் துலங்கி நிற்கும்
ஆணவத்தால் சாதனத்தை மறந்தா யானால்
அபரோட்ச ஞானமுத்தி அரிது தானே'

என நடையிடுகிறது, உபநிடதப் பகுதியில் இடம்பெற்றுள்ள இப்பாடல்.

## வழக்குச் சொற்கள்

*உபநிடதப் பகுதியில் ஆங்காங்கே அழகிய பல கவிதைகள் காணப்பட்டாலும், பல பாடல்கள் பாமரர் வழக்காகவே அமைந்துள்ளன. பேச்சுவழக்குச் சொற்களும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. எதுகை மோனை கருதி அமைக்கப்பெற்ற பல சொற்கள் பொருள் நிரம்பாதவை. வழக்குச் சொற்களும் ஏராளம் இடம் பெற்றுள்ளன. பாரப்பா, கேளப்பா, பாரடா, போமடா, தண்டு முண்டு, பரியாசம், ரோசமற்று, வெகுபேர்கள், சமுசாரம், என்னவே, எட்டுவிசை, முதலிய இவ்வாறான சொல்லாட்சிகள் பலவிடங்களிலும் வருகின்றன. இவற்றை எல்லாம் கடந்த அறிவுக்களஞ்சியமாய்க் காகபுஜண்டர் உபநிடதம் மேற்குறித்தவாறு பல அரிய செய்திகளை எடுத்துரைத்து நிறைகிறது.*

## பெருநூல் காவியம்

காகபுஜண்டர் பனுவல்களுள் நிறைவாக ஆய்வு மேற்கொள்ள வேண்டிய நூல் 'காகபுஜண்டர் பெருநூல் காவியம்' ஆகும். முன்குறித்தவாறு ஆயிரம் ஆசிரிய விருத்தங்களால், பெரும்பாலும் அந்தாதித் தொடையால் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

'நீதியுடன் தாள்பணிந்து பெருநூல் தன்னை
நிகழ்த்துதற்கு ஐங்கரன்தன் பாதங்காப்பு'

என்று வரும் நூலின் முதல் காப்புச் செய்யுளில் 'பெருநூல்' என்று குறிக்கப் பெற்றிருப்பது கருதி இப்பாடல் தொகுதி 'பெருநூல்' என்று வழங்கப் பட்டிருக்கலாம் என்று அறிய முடிகிறது. கதைபொதி நூல்களையே காப்பியம், காவியம் என்று கூறுதல் வழக்கு. காப்பியங்கள் பலவும் அளவால் பெரிதாக இருப்பது போல் ஆயிரம் பாடல்கள் இடம் பெற்றிருப்பது கருதிப் பின் வந்தோர் காவியம் என்ற அடைமொழியைத் தந்திருக்க வேண்டும். சித்தர் பாடல் தொகுதிகளுக்குக் காவியம் என்ற அடைமொழி வேறெங்குங் காணப்படவில்லை. இது ஆராயப்பட வேண்டுவது. பேரிலக்கண நூலாகிய தொல்காப்பியம், 'காப்பியம்' என்ற குறியீடு பெற்றது போல் இந்நூல் பெயரும் அமைக்கப் பட்டிருக்கலாம்.

## காகபுஜண்டர் ஞானபாகம்

ஆயினும், இந்நூலின் 291 ஆவது பாடலில், இந்நூற்பெயர் பற்றிய ஒரு சிறுகுறிப்புக்

காணப்படுகிறது. மாணாக்கனை முன்னிலைப் படுத்தி ஆசிரியர் உரைப்பனவாக அமைந்துள்ள இந்நூல் அமைப்பு, வினவப்படாத வினாக்களை உளத்திருத்திக் கொண்டு, கருணை மிகுதியால் ஆசிரியர் விடை இறுப்பதாகவே காணப்படுகிறது. சைவ சித்தாந்தச் சாத்திரங்களில் இம்முறை காணப்படுகிறது. அருணந்தி சிவாசாரியாரின் இருபா இருபஃது, திருவதிகை மனவாசங்கடந்தாரின் உண்மை விளக்கம் முதலியன வினா-விடையாக அமைந்தன.

'ஏனென்று கேட்டுபதில் சொல்லுமிந்த
ஏகவெளி சூரியன்தன் ஞானபாகம்
தானென்று இதற்குப் பேர்'

என்று வரும் அகச்சான்றால் இந்நூலுக்குக் 'காகபுஜண்டர் ஞானபாகம்' என்றே பெயர் வழங்கியிருந்திருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது. விண்ணில் பல நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்த காகபுஜண்டரையே 'ஏகவெளி சூரியன்' என்ற தொடர் குறித்ததாகக் கொள்ள இடம் உள்ளது. திருவள்ளுவர் ஞானம், ஞானக்குறள், ஞானக்கும்மி என்றெல்லாம் சித்தர்கள் அருளிய பாடல்களை ஞானம் என்று குறிக்கும் மரபு இருந்துள்ளமை புலனாகிறது. எனவே, இந்நூற்றொகுதியை காகபுஜண்டர் ஞானபாகம் என்று வழங்குதலே நேரிது.

## தலைப்பில் குழப்பம்

முன் சுட்டியவாறு இந்நூல் பாடல்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உள்தலைப்புகள் ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் வழங்கப்பட்டன அன்று. மேலெழுந்த வாரியான இத்தகு தலைப்புக்கள் நூலின் உள்ளீட்டை அறிய உதவுவனவாக அமைந்தில. அந்தாதித் தொடையில் பாடல்கள் அமைந்திருப்பதால் வரிசை முறையில் தவறு நேர்ந்திருக்க வாய்ப்புகள் இல்லை. தாமரை நூலகம் பதிப்பித்துள்ள, எஸ்.பி.இராமச்சந்திரன் பதிப்பில் 'காப்பு' முதல் 'வாதமுப்பு' ஈறாக 94 உட்தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 'யோகம்' என்ற ஒரே தலைப்பு ஆறு இடங்களிலும், 'ஞானம்' என்ற தலைப்பு மூன்று இடங்களிலும், இவ்வாறே 'வாலை' என்பது மூன்றிடத்தும் திரும்பத் திரும்ப அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களை ஆழ்ந்து நோக்கியிருந்தால் வெவ்வேறு தலைப்புகள் அமைத்திருக்க முடியும்.

## வாழ்த்தும் வருபொருளும்

முதற்பாடலாகிய காப்பில் முதற்கண் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம் போற்றப்படுகிறது. இரண்டாவதாக 'ஓம்' என்ற பிரணவம் பேசப்படுகிறது. அடுத்து ஐங்கரனாகிய விநாயகர் காப்பு வேண்டப்படுகிறது. அடுத்துப் பிறைச்சந்திரனை அணிந்த சிவனும்-உமையும்

நெடுங்காலம் வாழ்ந்திருந்தமைக்கான உண்மைகளை எனக்கு உரைத்தருளவேண்டும் என்று வேண்டினார். இதனை,

... வசிட்ட ருந்தான்
வருந்தியே வந்தென்றன் முன்னே நின்று
வாய்திறந்து கோடியுகம் கல்லால் தன்னில்
பொருந்தியே இருந்துதான் வந்தீ ரையா
புகழாக இருந்துவந்த விதங்கள் தம்மை
திருந்தியே சொலவேணும் என்று கேட்க'

என வரும் பாடல் பகுதி எடுத்துரைக்கிறது. வசிட்டருடன் சித்தர் பலரும் உடன் வந்து வணங்கி,

'... ஞானம் தன்னை
தேனென்று அமுர்தம்போல் சொல்ல வேண்டும்
திருவருளால் கடைத்தேறச் செய்ய வேண்டும்'

என்று வேண்டி நின்றனர். அக்காலைக் காகபுஜண்டர் வசிட்டருக்கும் சித்தர்களுக்கும் 'குறிப்பாக ஞானத்தை' உரைக்கத் தொடங்கினார் என்று பாயிரம்போல் இப்பகுதி நூல் தோன்றியவிதம் பற்றி எடுத்துரைக்கிறது.

## நூல் உரைக்கும் செய்திகள்

அவர்களுக்குக் காகபுஜண்டர் ஞான மார்க்கத்தையும், அதனைச் சென்றடைவதற்கான வழி முறைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

கல்லாலின் மேலிருந்ததாகவும், அதனால் சேதம் ஏதுமின்றி மவுனம் காத்து 'வேதம்' என்ற பிரமத்தில் அடங்கிக் கொண்டு பல கோடியுகங்கள் வாழ்ந்திருந்ததாகவும் ஆசிரியரே கூறிக் கொள்கிறார்.

'பாதமதைச் சிரசில்வைத்து யுகங்கள் தோறும்
பண்பாகத் தானிருந்து கோடி காலம்
சாதகமாய்ப் பிரளயங்கள் முடியும் போது
தனியாகக் கல்லாலின் மேலி ருந்து
சேதமொன்றும் இல்லாமல் மவுன முற்றுச்
சிறப்பாக எத்தனையோ யுகங்கள் கண்டு
வேதமென்ற பிர்மத்தில் அடங்கிக் கொண்டு
வெகுகோடி யுகங்கள்வரை யிருந்திட் டேனே'

என்ற பாடலும்,

'இருந்திட்டேன் காகத்தின் சொரூபமாக...'

என்ற அடுத்த பாடலின் முதல் வரியும் காகபுஜண்டர் அருள் வரலாற்றுக்கு அகச்சான்றுகளாக அமைகின்றன.

### ஞானம் உரைக்க வேண்டுதல்

காகவடிவில் இம்முனிபுங்கவர் ஒருமுறை கயிலையை அடுத்த கல்லால மர நிழலில் தங்கியிருந்த போது, வசிட்ட மாமுனிவர் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் காகபுஜண்டரை வணங்கி, 'ஐயா! தாங்கள் கோடி யுகங்கள் இந்தக் கல்லால மரத்தில் தங்கி வாழ்ந்து வந்துள்ளீர்கள். புகழுடன் தாங்கள் இவ்வாறு

நெடுங்காலம் வாழ்ந்திருந்தமைக்கான உண்மைகளை எனக்கு உரைத்தருளவேண்டும் என்று வேண்டினார். இதனை,

... வசிட்ட ருந்தான்
வருந்தியே வந்தென்றன் முன்னே நின்று
வாய்திறந்து கோடியுகம் கல்லால் தன்னில்
பொருந்தியே இருந்துதான் வந்தீ ரையா
புகழாக இருந்துவந்த விதங்கள் தம்மை
திருந்தியே சொலவேணும் என்று கேட்க'

என வரும் பாடல் பகுதி எடுத்துரைக்கிறது. வசிட்டருடன் சித்தர் பலரும் உடன் வந்து வணங்கி,

'... ஞானம் தன்னை
தேனென்று அமுர்தம்போல் சொல்ல வேண்டும்
திருவருளால் கடைத்தேறச் செய்ய வேண்டும்'

என்று வேண்டி நின்றனர். அக்காலைக் காகபுஜண்டர் வசிட்டருக்கும் சித்தர்களுக்கும் 'குறிப்பாக ஞானத்தை' உரைக்கத் தொடங்கினார் என்று பாயிரம்போல் இப்பகுதி நூல் தோன்றியவிதம் பற்றி எடுத்துரைக்கிறது.

## நூல் உரைக்கும் செய்திகள்

அவர்களுக்குக் காகபுஜண்டர் ஞான மார்க்கத்தையும், அதனைச் சென்றடைவதற்கான வழி முறைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

'முப்புமுறை வகையோடு ஆறா தாரம்
முப்பாழும் அப்பாழாய் முடியு கின்ற
அப்புவுடன் ஞான திருஷ்டி தூர திருஷ்டி
அடைவான ரவிமதிமுச் சுடரின் நேர்மை
இப்புவியில் அண்டபிண்டம் காயசித்தி
இன்னதென்று'

நிரல்பட எடுத்துரைக்கத் தொடங்கினார். இதன்படி இந்நூலுள் முப்புமுறை, ஆறாதாரங்கள், முப்பாழ், ஞானதிருஷ்டி, தூரதிருஷ்டி, முச்சுடர் இயல்பு, அண்ட பிண்ட நிலை, காயசித்தி முதலியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. மேலும், திரிகால இயல்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ உலகின் ஏற்பு

இனி, காகபுஜண்டர் பெருநூல் காவியத்தில் காணக்கிடக்கும் அரிய, மருந்துவம் சார்ந்த குறிப்புக்கள் சிலவற்றைக் காணலாம். பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தெரிந்து கொள்வதில் பெற்றோர்களுக்கு ஆர்வம் மிகுதி. விரும்பியவாறு ஆண்குழந்தை அல்லது பெண்குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்ள எல்லாருக்குமே விருப்பம் உண்டு. சித்தர் நூல்களில் இவை பற்றிய அரிய குறிப்புக்கள் உள்ளன. இவை இன்றைய மருத்துவ உலகத்தால் ஓரளவு மெய்மையானவையே என்று ஏற்கப்பட்டும் வருகின்றன.

## திருமந்திரம்

திருமூலர் ஒரு தவராஜயோகி. அவர் கண்ட உண்மைகள் திருமந்திரமாக மலர்ந்தது. இந்நூல் ஆகமவழி வந்த தென்னாட்டு அறிஞர் ஒருவரின் கலைக் களஞ்சியமாகத் திகழ்வது. இந்நூல் இன்று வரை முற்றாக ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டிலது. இதனுள் புதைந்து கிடக்கும் அரிய செய்திகளை உரியவாறு அறிவியல் கண்ணோட்டத்துடன் நிறுவிக்காட்ட வேண்டிய கடமை தமிழ் அறிஞர்களுக்கும் அறிவியலார்க்கும் உரியது. திருமந்திரம், இரண்டாம் தந்திரத்தின் பதினான்காம் பிரிவு 'கரு உற்பத்தி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 41 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

## ஆண் குழந்தை வேண்டுமா?

பிள்ளைப் பேற்றுக்காகக் கணவன்-மனைவி கூடும் காலை, கணவன் மனைவி இருவரது சுவாசமும் மூக்கின் வலத்துவாரம் வழியாக நிகழும் போது கருத்தறித்தால் பிறக்கும் குழந்தை ஆண். இடத்துவாரம் வழி நிகழின் பிறக்கும் குழந்தை பெண். தாய் வயிற்றில் மலம் மிகுந்திருக்கும் காலைக் கருத்தறித்தால் பிள்ளை மந்தனாக இருக்கும். தாய் வயிற்றில் நீர் மிகுந்திருக்கக் கரு உற்பத்தியானால் பிள்ளை மூங்கையாக அமைவான். இரண்டும் மிக்கிருக்கும் போது கருத்தறித்தால் குழந்தை குருடாகப் பிறக்கும். இவைபோல் 'அலி' யாகக் குழந்தை அமைவது எதனால்? நாடாளும் பேறு

வாய்க்கும் குழந்தை உருவாக வழி என்ன? நூறாண்டு, எண்பதாண்டு வாழும் பிள்ளையைப் பெற்றெடுக்கும் மார்க்கம் எவை? குழந்தைகள் குறளாக, முடமாக, கூனாகப் பிறப்பது எதனால்? பேரழகுக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டா? கரு தாய்வயிற்றில் தங்காது சிதைதல் எதனால் போன்ற அடுக்கடுக்கான வினாவிற்கு மூச்சுப் பயிற்சி முதலியவற்றை முன்னிறுத்தித் திருமூலர் வழங்கும் தெளிவுரை அருமைப்பாடு மிக்கது.

## கருவில் இருப்பதை அறியவழி

பெருநூல் காவியத்தில் தாய்வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை உறுதியாக அறிந்து கொள்ள வழி முறைகள் கூறப்பட்டுள்ளன. நம் குடும்பங்களிலும், கருவுற்ற பெண்ணின் வயிறளவு, அவள் இடப்புறம் அல்லது வலப்புறம் சாய்ந்து படுக்கும் நிலை, அமர்ந்து எழும்போது எந்தக்கையை ஊன்றி எழ முயல்கிறாள் என்ற குறிப்புகள் இவற்றைக் கொண்டு, வயிற்றில் இருக்கும் குழந்தை இன்னது என்பதை ஓரளவு அனுமானித்துச் சொல்லும் பெரியோர்கள் உள்ளனர். ஓரளவு தாய்வயிற்றில் வளர்ந்த குழந்தை, தாயின் விலாப்புறத்தில் இருகைகளையும் ஊன்றியும், அதன் பாதம் இரண்டும் தாயின் தொப்புள் மத்தியில் ஊன்றியும் நிற்குமானால் குழந்தை ஆண்தான் என்கிறது இந்த நூல். மேலும் சில அடையாளங்களும் ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

'ஆண் என்றால் தாய்மார்பு பள்ளம் நெஞ்சு
அடிவயிற்றின் மேல்தொப்புள் மேலே தானும்
ஆண் என்றால் தாய்விலாவில் யிருகை யுந்தான்
அமைந்திருக்கும் பாதம்ரெண்டும் தொப்புள் மத்தி
ஆண் என்றால் கீழ்மேலும் ஏறும் பாரு
ஆண்புழுவும் இப்படியே அங்க சேட்டை
ஆண் என்றால் தாய்மூலம் நெஞ்சின் தீயும்
அமைதிகொண்டு வேகும்காண் கனலின் தீயே'

*என்ற இந்தப் பாடல் மேலும் விரிவாக ஆராயப்படவேண்டிய பல அரிய குறிப்புக்களை உள்ளடக்கி நிற்கிறது.*

## *பெண்குழந்தை அடையாளம்*

*இவ்வாறே தாய் வயிற்றில் இருக்கும் குழந்தை பெண் தான் என்பதை உறுதி செய்யவும் பெருநூல் காவியம் வழி காட்டி நிற்கிறது. இதன் திறம் சித்தர் நூல்பயிற்சி மிக்கார் வழி அறிந்து தெளிய வேண்டும்.*

'சாந்தமே சொல்லுகின்றேன் பெண்ண ணங்கு
தாய்வயிற்றி லேயுதிக்கும் மார்க்கம் தன்னை
சாந்தமே முன்சொன்ன கெற்பப் பூச்சி
சாய்ந்துதலை விலாவொட்டி விலாக்கால் நீட்டி
சாய்ந்துமே முன்புறத்தை நோக்கித் தானே
தலைகாலும் விலாவயிற்றில் சார்ந்த கூறு
சாய்ந்துமே பெண்புழுவும் தந்தை நீரை
தானுண்டு வளர்ந்தது கனல்தீ யாலே'

இவ்வாறான மருத்துவ நூல் குறிப்புக்களைச் சித்தர் நூல் பயிற்சி உடையார், மருத்துவ நூல் வல்லார், தமிழ் அறிவிற் சிறந்தார் ஒருங்கிணைந்து ஆய்வுக்கு உட்படுத்தி உலகுக்கு உண்மை தெளிவித்தல் வேண்டும். இத்தகு அரிய முயற்சிகள் இதுநாள்வரை மேற்கொள்ளப் படாமை பெருங்குறை.

### கனாத்தோன்றக் காரணம்

கனாக்களும் அவற்றின் பயன்களும் பற்றி உலகம் முழுவதுமே ஆராய்ந்து வருகிறது. மேலை நாடுகளில் சிக்மன்ஃபிராய்டு முதலிய பல அறிஞர்கள் கனவு பற்றி விரிவாக ஆராய்ந்து பல நூல்களை வழங்கியுள்ளனர். தமிழில் 'கனா நூல்' என்ற பெயரில் ஒரு நூல் வழங்கியதாகக் குறிப்பு உண்டு. தமிழில் சங்க இலக்கியங்களிலும், திருக்குறள், சிலப்பதிகாரம், ஆண்டாளின் நாச்சியார் திருமொழி முதலாய பல நூல்களிலும் கனவுகள் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியும் பல அரிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கனவு தோன்றுவதற்கான காரணத்தைப் பெருநூல்காவியம் ஒரு கோணத்தில் சுட்டிக் காட்டுகிறது. பிராணவாயு வேகமாக இடவிலாப் புறத்தில் மோதி, கீழ் இறங்கி, வயிற்றில் மலக்குடலை அழுத்தும். அப்போது பித்தநீர் சுரந்து கீழ்நோக்கிப் பாயும். அந்நீர் வாய்வரை வந்தவுடன், நினைவு தப்பும். அக்காலைக் கனாக்கள் தோன்றும்.

'நோக்கியே சொல்லுகிறேன் கனவின் செய்கை
நுண்ணறிவால் கண்டகனா சொல்வேன் கேளு
தாக்கியே பிராணனது யிடவி லாவில்
தானிறங்கி மலசலத்தைத் தொடும்போ தெல்லாம்
ஆக்கியதோர் பித்தநீர் கீழி றங்கும்
அதுவாயில் வந்தவுடன் நினைவு தப்பும்
ஏக்கியே நடுநினைவை மாற்றிக் கண்ணை
யிருக்கிவிடு மேயறிவு மாறுஞ் சொல்லே'

*வாத, பித்த, சிலேத்துமத்தை நீக்கிக் கொண்டால் கனவு வாராது என்பதும் இங்கே கூறப்பட்டுள்ளது.*

### வேடங்கள் வேண்டா!

*தமக்குற்ற துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் மனவலிமையும், எந்த ஒரு உயிருக்கும் தீங்கு செய்யாமையும் தவத்திற்கு இலக்கணமென்பார் வள்ளுவர். இந்தத் தவம் முயல்வாராகிய பெரியோரை நீத்தார் என்றும், அவர் பெருமை அளவிட்டு உரைக்க இயலாதது என்றும் அவர் புகழ்ந்துரைப்பார். துறவு நெறி நிற்பார், உலகத்தார் துறவிகளுக்கு இதுகூடாது என்று கருதும் செயல்களைச் செய்யாதிருத்தல் போதுமானது. புறக்கோலங்களாகிய முடி வளர்த்துச் சடை முடித்தலோ, முடிகளைந்து மொட்டையாக நிற்றலோ துறவுக்கு அடையாளம் ஆகிவிடமுடியாது. பொய்வேடம் தாங்கி ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபட்டு வந்த போலித் துறவிகள் வள்ளுவர் காலத்திலும் வாழ்ந்திருந்தனர் போலும். பசுவின்*

தோலைப் போர்த்துக்கொண்டு புலி உயிர்களை வேட்டையாடும் தன்மையை, ஒழுக்கமற்ற போலித்துறவிகளின் செயல்களுக்கு உவமை காட்டுகிறார். இறைவன் திருநெறியை உலகினர்க்கு உணர்த்தி உய்விக்க வல்ல துறவிகள் அருளாளப் பிறந்தவர்கள். புறக்கோலங்கள் அத்துணை இன்றியமையாமை அன்று என்பது வள்ளுவர் கொள்கை.

## போலித்துறவைச் சாடுதல்

தூய, துறவு நெறியைப் போற்றும் காகபுஜண்டர் இல்லறவாழ்வைக் குறை கூறிற்றிலர். உலகத்தவருக்கு வழிகாட்ட வேண்டிய துறவிகள் போலி வேடங்களில் நாட்டம் செலுத்துதலை அவர் கண்டிக்கவே செய்கிறார். காவி அணிதல், காலில் மிதியடிக் கட்டை பூணுதல், தாடியை நீள வளர்த்து முடிந்து கொள்ளுதல், சத்தமிட்டு உபயோகமற்ற சொற்களால் பூசனை செய்தல், உடலில் எட்டிடத்தில் திருநீறு அணிந்து குங்குமம் இட்டுக்கொள்ளல் போன்ற துறவின் புற அடையாளங்களைப் போலியாக அணிந்து, தருக்கித்திரிவாரை அவர் எள்ளி நகையாடி, ஏளனம் செய்கிறார். இல்லறத்தார் இத்தகு போலிகளிடம் ஏமாந்து விடுதல்கூடாது என்று நல்லெண்ணத்துடன் எச்சரிக்கிறார்.

'சாவியதில் யோகபதர் காவி கட்டி
தன்காலில் குறடிட்டுத் தாடி கட்டி

கூவியே சொல்லரியாப் பூசை பண்ணி
குங்குமமும் வெண்ணீறும் பொட்டு மெட்டும்
மேவியதில் மொட்டையிட்டு கொறடு மொன்று
விறகுதலை சும்மாடு குடுமி யிட்டு
தாவியதி லேநடந்து உலகம் பூராய்த்
தான்மறந்த பாவனைபோற் கூவு வாரே'

*இத்தகு பொய்யோகிகளால் உலகிற்குப் பயன் ஏதும் இல்லை. மக்கள் இத்தகு போலிகளிடம் ஏமாந்து விடுதல் கூடாது என்று எச்சரிக்கும் ஆசிரியரின் அருள் உள்ளத்தை இப்பாடல் எடுத்தியம்புகிறது.*

## *சித்தர்கள் பற்றிய குறிப்புகள்*

*காகபுஜண்டர் பெருநூல் காவியத்தில் தமிழ்நாட்டுச் சித்தர்கள் பலர் பெயர் - செயல்-சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. முன்குறித்தவாறு தமிழ்நாட்டுச் சித்தர் பற்றிய அறிமுகம் காகபுஜண்டருக்கு எவ்வாறு வாய்த்தது என்பதை அறியக் கூடவில்லை. உலகெங்கும் செல்லும் ஆற்றலும், பலவூழிக்காலம் வாழ்ந்த வாழ்வும் இதனைச் சாத்தியமாக்கி யிருத்தல் கூடும். இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல் எண் 142, 143, 153, 154, 155, 278, 279, 280, 281, 282, 283, 284, 440, 773, 782, 783, 784 ஆகிய பாடல்களில் இருபத்திரண்டு சித்தர்கள் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. வள்ளுவநாதன், திருமூலர், அகத்தியர், வசிட்டர், விசுவாமித்திரர், கொங்கணவர், போகநாதர், காசிநாதர், ததீசி நாதர், கூர்மர், கிருட்டிணக்கோணார், வியாசர், அத்திரி, புலத்தியர்,*

இடைக்காடர், கலைக்கோட்டர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, மச்சேந்திரர், கோரக்கர், இராமதேவர் முதலியோருடன் காகபுஜண்டருக்குத் தொடர்பிருந்திருத்தல் வேண்டும் என்று அறிய முடிகிறது. எவ்வாறான தொடர்பு நிலவிய தென்பதை அறியக் கூடவில்லை.

## அகத்தியர் சிறப்புரைத்தல்

தமிழ்நாட்டுச் சமய, இலக்கிய, சித்தர் வரலாறுகளில் அகத்தியருக்கு ஒரு பேரிடம் உண்டு. புராணங்களில் அவர் பெருமை விரிவாகப் பேசப் பட்டுள்ளதைப் பலரும் அறிவர். அவர் பெயரில் வழங்கும் சித்தர் நூல் தொகுதிகள் பலவாகும். அவற்றுள் மருத்துவம் குறித்த நூல்கள் பெரிதும் போற்றப்படுபவை. நாம் கருதுவது போல் சித்தர்கள் தொகை ஓர் எண்ணிக்கையில் அடங்குவது அன்று. இதனைப் பெருநூல்காவியம்,

கோடியென்றால் கோடியல்ல கோடா கோடி
கொங்கணவன் சொல்லி வைத்தான்

என்று விதந்துரைக்கிறது. அகத்தியரின் பெருமை இந்நூலுள் பெரிதெடுத்துப் பேசப்பட்டுள்ளது.

அகத்தியரே பெரும்பேற்றை அடைந்தோ ராவர்
அம்மம்மா வெகுதெளிவு அவர்வாக் குத்தான்
அகத்திலுறை பொருளெல்லாம் வெளியாய்ச் சொல்ல
அவர்வாக்குச் செவிகேட்க அருமை யாகும்

அகத்தியரின் பொதிகையே மேரு வாகும்
அம்மலையும் அகத்தியரின் மலையு மாகும்
அகத்தியரின் அடையாளம் பொதிகை மேரு
அவர்மனது மலரைப்போல் பெரியா ருண்டோ?

*சித்தர்கள் பற்றி இவ்வாறு வரும் குறிப்புக்கள் மேலும் பல இந்நூலுள் உள்ளன.*

## *பணத்தின் சிறப்புரைத்தல்*

*தத்துவங்களின் சிறப்புரைத்தலோடு, உலகியல் கூறுகளும் நிறைவாக இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. உலகியல் வாழ்வுக்குப் பொருள் மிகவும் இன்றியமையாதது. வள்ளுவரும் 'பொருள் செயல் வகை' என்று இதன் சிறப்பைப் பத்துக் குறள்களால் எடுத்துரைத்தார். துறவிகளுக்கும் கூடப்பணம் இன்றியமையாதது என்பதை, 'முனிவரும் உன்னுவபொன்னால் முடியும்' என்று முன்னோர் உரைத்தனர். அன்பின் வெளிப்பாடு அருள். அந்த அருள் சிறப்பதும் கூடப் பொருளால்தான் என்பர் வள்ளுவர். பொருள் இல்லாதவனை ஈன்ற தாயும் விரும்ப மாட்டாள் என்பர் அறநூலார். 'பணம் பத்தும் செய்யும்', 'பணம் பாதாளம் வரை பாயும்' என்பன பழமொழிகள். 'ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக் கோனே, காசு காரியத்தில் கண்வையடா தாண்டவக் கோனே' என்று பணத்தின் சிறப்புரைத்தனர் சித்தர்கள். காகபுஜண்டர்.*

தரித்திரம் வந்தபின்பு சினேகம் உண்டோ? என்று வினா எழுப்புகிறார். மேலும் பொருட்சிறப்பை,

உண்டுண்டு பொருளிருந்தால் எல்லா முண்டு
ஊருண்டு காடுண்டு மலைதா னுண்டு
தொண்டுண்டு தீபவொளி மேடை யுண்டு
சுடுகாடு போமளவும் மேன்மை யுண்டு
தண்டுண்டு பொருளிலார்க் கென்ன வுண்டு?

என்று விதந்துரைக்கிறார். பணம் படைத்தாருக்குச் சுடுகாடு போமளவும் மேன்மை யுண்டு என்று கூறுவதன் வாயிலாக அதன் கடைசி எல்லை இன்னது என்பதை நயம்பட எடுத்துரைக்கிறார்.

### பிராமணர் செயல்கள்

வருணாசிரமம், சாதியம் பற்றிய பல குறிப்புக்களும், அவற்றை ஏற்காது சாடும் சித்தர் நெறியும் இந்நூலுள்ளும் நிறைவாகவே இடம் பெற்றுள்ளன. நால் வருணத்தாருள் முதல் வருணத்தார் என்று கூறப்படும் பிராமணர்களைச் சாடும் போக்கு இங்கே நிலவக் காணலாம். பல வரலாறுகளை உண்மைபோல் எழுதி, முத்தி என்றும் மோட்சம் என்றும் குறிப்பிட்டுத் தங்களுக்குப் பாதுகாவல் செய்து கொண்டனர் பார்ப்பனர். பிறரை எல்லாம் வேறுவேறு வருணத்தாராக இனங்காட்டி அடக்கியதும் அவர்கள் தாம். தங்களுக்கு என்று சில ஆசாரங்களையும், மற்றவர்களுக்கு என்று சில ஆசாரங்களையும் வகுத்தனர் அன்னோர்.

ஐயர்களைப் பிராமணனென்று உரைக்கல் ஆமோ என்று அவர் வினா ஒன்றையும் எழுப்புகிறார். வேறுபல குறைகளும் பிராமணர்கள் மேல் இந்நூலுள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை விரிப்பதால் பயன் ஒன்றும் இல்லை. தமிழ் இலக்கியங்களிலும், சித்தர் நூல்களிலும் பிராமணர் செயல்களை ஆதரித்தும், எதிர்த்தும் நின்று குரல் கொடுக்கும் போக்குக் காணப்படுகிறது. நெடுநாள் இத்தகு போராட்டம் தமிழகத்தில் நின்று நிலவியிருந்தமைக்குச் சான்றுகள் பலவுள்ளன. பிராமணர், பிராமணர் அல்லாதாருக்கு இடையே நிலவிய நீண்ட போராட்டங்களின் விளைவாகவே, பிராமணர் அல்லாதார் தலைமையில் பல சைவசித்தாந்தத் திருமடங்கள் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் தோற்றம் கொண்டன. தமிழ்நாட்டுச் சைவத் திருமடங்களின் வரலாறு உணர்ந்தவர்கள் இதனை நன்கு அறிவர்.

## சாதியப் பதிவுகள்

மேலும், தமிழ் நாட்டில் நிலவியிருந்த பல்வேறு சாதிகளைப் பற்றிய குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன. முன் குடுமிச் சோழியர், பெரிய மீசை படைத்த இராயர், பிணம் சுமக்கும் சவண்டிகள், நாயக்கர், சேர்வைகாரர், அம்பட்டன் என வழங்கும் நாவிதன், காலி எனப்படும் வண்ணான், சக்கிலியன், தோட்டி, தேவடியாள் எனப்படும் தாசி, ரெட்டி, நாயுடு, மறவர், தேவர், துலுக்கர், சாயபு, பட்டு நூல் செட்டியார் (சாலியர்?) கைக்கோளர் என்னும்

முதலியார் (செங்குந்தர்) சாணார் எனப்படும் நாடார், ஆசாரி என்று இவ்வாறு பல சாதிகள் இந்நூலுள் குறிக்கப்பட்டுள்ளன. உலகம் இவ்வாறு சாதிகளால் பிரிவுண்டு. அவரவர் இயற்றும் தொழில்களால்தான் நடையிடுகிறது என்று, பார்ப்பனருக்கு எடுத்து ரைப்பதாகப் பாடல்களின் போக்கு அமைந்துள்ளன. பட்டியலில் காணப்படும் பல சாதிகள் கி.பி.15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே பெயர் அறியப்பட்டன. இவ்வாறான குறிப்புக்கள் இந்நூலின் காலத்தை அறிய உதவி நிற்கின்றன.

### மனத்தின் இயல்பு கூறல்

மனிதனை அறிவாளியாக்குவதும், ஆட்டிப் படைப்பதும் மனம் என்னும் அகக் கருவியே யாகும். மனத்தின் இயல்பு பற்றி அறநூலாரும், சமய நூலாரும், தத்துவ ஆசிரியர்களும் பலவாக ஆய்ந்து முடிபுகள் கூறியுள்ளனர். சித்தர்கள் மனத்தைப் பேய் என்றும், குரங்கு என்றும் குறித்தனர். 'கோடான கோடி சித்து மனதினாலே' என்கிறது இப்பெருநூல் காவியம்.

இடமென்பார் தலமென்பார் தீர்த்த மென்பார்
எல்லோரும் நாமிருக்கு மிடமா மென்பார்
கடமென்பார் புந்திநடு சித்த மென்பார்
கடத்தறிவு பெருயூகம் தெளிவா மென்பார்
குடமென்பார் குருவுடலே மனமா மென்பார்
கோடான கோடிசித்து மனதி னாலே
அடமென்பார் வயிராக்கியஞ் சமமா மென்பார்
ஆர்கண்டு சொல்வார்கள் மனதின் பேற்றே

மனதின் இயல்பு பற்றிப் பலரும் சொன்ன விளக்கங்களை எல்லாம் தொகுத்துச் சுட்டும் அரியபாடல் இது.

## நதி மூலம் ஆராய்தல்

எவை எவை எங்கிருந்து பிறந்தன என்ற வினாவை எழுப்பிக்கொண்டு, இந்நூலுள் ஒரு பாடல் விடை சொல்லி நிற்கிறது. வேதத்திலிருந்து மந்திரங்கள் பிறந்தன. திறமைமிக்க பேச்சாற்றல் உயிரிலிருந்து பிறந்தது. தந்திரங்கள் பூசை முறை கூறிப்பிறந்தன. இவ்வாறு வேறுபல பிறந்த மூலங்களையும் இப்பாடல் அறிமுகம் செய்விக்கிறது.

மந்திரங்கள் பிறந்தவிடம் வேத மோடு
வாய்ச்சொல்லு வல்லபங்கள் உயிரி னோடு
தந்திரங்கள் பிறந்தவிடம் பூசை யோடு
தானான இடம்பிறந்த அறிவி னோடு
யந்திரங்கள் பிறந்தவிடம் மணிநா வோடு
அறுத்தடைத்த வாசலொடு நாசி யூடு
உன் திறங்கள் என்திறங்கள் பொதுவி னோடு
ஊடாடி உயிர்விளக்கும் செபத்தி னோடே

அறிவு முளைத்தெழுந்த போதே 'தான்' என்ற ஆணவம் பிறக்கிறது என்பது ஓர் அரிய குறிப்பு.

## பாடுபட்டால் பலன் உண்டு

சித்தர்கள் தம் நூலுள் உரைத்த மருத்துவ முறைகள் பலவாகும். இவற்றை உள்ளவாறு

உணர்ந்து, நம்பிக்கையுடன் முயன்றால் வெற்றி எளிதாகும். இவற்றை உள்ளடக்கி,

உண்மையென்று செய்வோர்க்கு எல்லா மாகும்
ஒன்றுமில்லை என்போர்க்கு எதுதா னாகும்
நுண்மையுடன் சாத்திரத்தை அறிய வேணும்
நுணுக்கமுடன் பரிபாஷை தெரிய வேணும்
தண்மையுடன் விட்டக்கால் எல்லாம் போச்சு
தவறியே நடந்தபின்பு ஒன்றும் ஆகா
எண்மையென்று நினைப்போர்க்கு எதுவு மாகா
எப்பொருளும் பாடுபட்டால் கிடைக்கும் பாரே

என்ற அரியபாடல் அமைக்கப்பட்டுள்ளது. சித்தர் வழங்கும் மருத்துவக் குறிப்புக்களில் பரிபாஷைச் சொற்கள் பலவுண்டு. அவற்றை எல்லாம் உள்ளவாறு நுனித்தறிந்து உண்மைகண்டு, பாடுபட்டு முயன்றால் யாவும் கைகூடும் என நம்பிக்கை யூட்டுகின்றது இப்பாடல்.

## வல்லவனாக வழி

வானவர் போற்ற நிலவுலகில் வல்லாளனாக வாழ வழி உண்டா என்றால், உண்டு என்கிறது பெருநூல்காவியம். தான தர்மங்களை முறையாகச் செய்க. ஆணவத்தையும் அதனால் எழும் கோபத்தையும் அறவே நீக்குக. மானம் அபிமானம் பார்த்துத் தருக்குதல் வேண்டா. உலகில் உள்ள உயிர்க்குலங்கள் யாவற்றையும், தன்னைப்போல் எண்ணி அன்பு செய்க. மோனநிலை கைகூடுமாறு சக்தியைப் பூசித்து

*வருக. இவற்றை எல்லாம் முறையாகச் செய்தால் வானவர் போற்றும் நிலை வந்து எய்தும். வல்லவனாய் நிலவுலகில் வாழலும் ஆகும்.*

தானமுடன் தருமத்தை வகையாய்ச் செய்து
ஆணவமும் கோபமும் அறவே தள்ளி
மானமுடன் அபிமானம் மறையச் செய்து
மற்றுமுள சீவனெல்லாம் தானா யெண்ணி
மோனநிலை சூடிடவே வாலை பூசை
முறையாகச் செய்தக்கா லெல்லா மாச்சு
வானவரும் போற்றுகின்ற நிலையு மாச்சு
வல்லவனா யாவதற்கு வழியு மாச்சு

*இத்தகு முயற்சிகளை முறையாகச் செய்து வந்தால் மேலும் மேலும் உயரலாம். அப்போது,*

ஞானநிலை அடைவதற்கு வழியு மாகும்
ஞாலமெலாம் உந்தனது கைக்கு ளாகும்

*என்று ஞாலம் கருதினும் கை கூடும் நிலைமை எய்த இந்நூல் வழிகாட்டி நிற்கிறது.*

## நூலுள் உரைக்கப்பட்டவை

*காகபுஜண்டர் பெருநூல் காவியத்தின் 994 ஆவது பாடல் நூலுள் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துச் சுட்டும் பாங்கில் நடையிடுகிறது. யோகம், கற்பம், மருத்துவம் இவற்றை விளக்குவதோடு, இதனுள் சூத்திரங்கள் எண்பது, ஞானம் முப்பது, உபநிடதமும் சுருங்க உரைக்கப்பட்டுள்ளன என்று பேசுகிறது அப்பாடல்.*

கிடைப்பதுவோ இந்தநூல் ஆயி ரத்தில்
கிருபையுடன் யோகமுதல் கற்பஞ் சொன்னேன்
மடைதிறந்த வெள்ளம்போல் வயிந்தி யந்தான்
வகையோடே ஆயிரமும் சொல்லி வைத்தேன்
சடையாமல் சூத்திரமெண் பதுவுஞ் சொன்னேன்
சங்கையற ஞானமுப் பதுவுஞ் சொன்னோன்
விடையமுடன் உபநிடதம் சுருக்கிச் சொன்னோன்
வேணுமென்று முப்பூசூத் திரமுஞ் சொன்னேன்

*இவ்வாறு இப்பாடல் பட்டியலிட்டிருப்பினும் மேற்குறித்த எண்ணிக்கைகளை நூலுள் பொருத்தி இனங்காண இயலவில்லை.*

## மேலும் மேலும் ஆய்வோம்

*மேற்குறித்தவாறு காகபுஜண்டர் பெயரில் வழங்கும் பெருநூல் காவியம் பல அரிய செய்திகளை விளக்கி நிறைகிறது. பிராணாயாமம் என்று கூறப்படும் மூச்சுப் பயிற்சி, சரியை முதலிய நான்கு படிநிலைகள், மூலிகைக் குறியீடுகளால் சுட்டப்படும் மருத்துவக் குறிப்புக்கள் முதலிய பலவாய செய்திகள் இந்நூலுள் நிறைந்து கிடக்கின்றன. காகபுஜண்டர் வரலாறு கண்டு காட்டும் முயற்சியில் அவர் பெயரில் வழங்கும் நூல்களின் மேலான ஆய்வை ஓர் எல்லைக்குள் நின்றே மேற்கொள்ள இயல்கிறது. காலப்போக்கில் இந்நூல் குறித்த விரிவான ஆய்வுகளுக்கு இச்சிற்றாய்வு ஊக்கம் தருவதாக அமையக்கூடும். சித்தர் நூல்களின் உண்மைப் பொருள் அறிவார் தொகை அருகிவருகிறது. தொடர்புடையவர்கள் விரைந்து இத்தகு நூல்களின் மேல் ஆய்வைத் தொடங்க முன் வரவேண்டும்.*

# 5. காகபுஜண்டர் ஆலயம்

## திருப்பட்டினம்

சைவநாயன்மார் அறுபத்து மூவர். இவர்தம் வரலாறு சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. அறுபத்து மூவருள் பெண்கள் மூவர். அவருள்ளும் காலத்தால் மூத்தவர் புனிதவதி என்ற பெயர் கொண்ட காரைக்கால் அம்மையார். இவர்கள் திருவவதாரம் செய்து அற்புதங்கள் நிகழ்த்திய திருத்தலம் காரைக்கால். இந்நகரின் பெருமைகளைச் சேக்கிழார்,

மானமிகு தருமத்தின்
வழிநின்று வாய்மையினில்
ஊனமில் சீர் பெருவணிகர்
குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து
கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம்
பெருகுதிரு காரைக்கால்

என்று புகழ்ந்துரைப்பார். இந்நகரிலிருந்து தெற்கே நாகப்பட்டினம் செல்லும் பேருந்துத் தடத்தில் காரைக்காலிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் கடற்கரை நகரம் திருமலைராயன் பட்டினம். இதனைச் சுருக்கித் திருப்பட்டினம் என்றும் அழைப்பர்.

## புனித பூமி

திருமலைராயன் பட்டினம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்னகரமாகும். ஆசுகவி என்று போற்றப்படும், சிலேடை பாடுவதில் வல்லவரான கவி காளமேகம் வாழ்ந்திருந்த நகரம் இது. சைவ-வைணவ ஆலயங்களும், அருள்மிகு. காளித்தாயும், சிறு தெய்வக் கோயில்களும் நிறைந்திலங்கும் இந்நகரத்தில் சோழ நாட்டுச் சைவ வேளாளர்கள் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். இசுலாமியப் பெருமக்களும் நிறைந்து வாழும் இந்நகர் சமய-சாதி பேதமற்ற அன்பில் பிணைப்புண்டு சிறந்து நிற்பது. சித்தர் வரலாற்றில் நன்கு அறியப்படாத அருள்நிறை. குண்டுசாமி, குருசாமி, சௌரிசாமி, புண்ணாக்கு சாமி, மேலமடத்துசாமி, ரெங்கையசாமி, சீமான்சாமி முதலாகிய எண்ணற்ற சித்த மூர்த்திகள் வாழ்ந்து மறைந்த புனித பூமி திருமலைராயன் பட்டினம். உலகில் வேறு எங்கும் இல்லாத சிறப்புடன் கருணைக்கடல் காகபுஜண்டருக்கு இந்நகரில் ஒரு கோயில் அமைந்துள்ளது. இந்திய நாடு முழுவதும் அறியப்பட்ட காகபுஜண்டருக்கு ஓர்

ஆலயம் இந்தச் சின்னஞ் சிறு நகரில் அமைய மூல காரணமாகத் திகழ்பவர் அருளாளர். நற்பவீயானந்த அம்பாஜி என்பவர். யார் இந்த அம்பாஜி? இவருக்கும் காகபுஜண்டருக்கும் என்ன தொடர்பு? இத்தலத்தில் இப்படி ஒரு கோயில் எவ்வாறு அமைந்தது? நம்முள் வியப்புக் கலந்த வினாக்கள் பல எழுகின்றன.

## பொன்னுசாமிப் பிள்ளை

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருப்பட்டினத்தில் ஏறத்தாழ நூற்று எழுபது ஆண்டுகளுக்கு முன் சோழிய வேளாளர் குலமரபில் திருவாளர். பொன்னுசாமிப் பிள்ளை என்ற நல்லுணர்வு மிக்கார், பெரிய தெருவில் வாழ்ந்து வந்தார். அவர் தம் அன்பு மனைவியார் திருமதி. செல்லத்தம்மாள். 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்ற முதுமொழிக்கு ஏற்பத் தம் குலத் தொழிலாகிய விவசாயத்தில் சிறந்திலங்கிய பொன்னுசாமிப் பிள்ளை விருந்தோம்பலில் தலைநின்றார். மேலும், துணை வருவாய் அமையுமாறு கட்டிடங்கள் கட்டித் தரும் தொழிலையும் செய்து வந்தார். சைவ பக்தியும், அடியவர்களையும், அருளாளர்களையும் போற்றி வாழும் பண்பாடும் மிக்க இத்தம்பதியருக்கு கி.பி. 1853 ஆம் ஆண்டு, திரு. ரெங்கசாமிப் பிள்ளை அருமகவாகத் தோன்றினார்.

## ரெங்கசாமிப் பிள்ளை

ரெங்கசாமிப் பிள்ளைக்குப் பள்ளிப்படிப்பு இல்லை. என்றாலும், அனுபவ ஞானத்தால் கணித

அறிவில் சிறந்திருந்தார். வடநாட்டிலிருந்து திருப்பட்டினம் வந்து இவர் இல்லத்தில் தங்கிய ஒரு துறவியின் அன்பாலும், ஆசியாலும் ரெங்கசாமிப் பிள்ளைக்கு ஆருடம் சொல்லும் அரிய கலை கை வந்தது. காளித்தாயின் திருவடிகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த இவருக்குக் காளி உபாசனையும் கைகொடுத்தது. இரத்தினக் கம்பளத்தில் அமர்ந்து சோழிகளைக் குலுக்கி வீசி, அவற்றின் எண்ணிக்கைக்கு ஏற்பப் பலன் சொல்லும் ரெங்கசாமிப் பிள்ளை வீட்டை மக்கள் முற்றுகையிட்டனர். இவரது துல்லியமான ஆருட அறிவைப் போற்றாதார் இல்லை. இரண்டு அல்லது மூன்று நாள் கழித்து இன்ன ஊரிலிருந்து, இன்ன பெயர் உடைய ஒருவர், இன்ன காரணத்திற்காக என்னிடம் வருவார் என்று முற்கூட்டியே உணர்ந்து உரைக்கும் இவர் ஆருட அறிவை, அருகிலிருப்பவர்கள் உண்மை என உணர்ந்து மகிழ்ந்துள்ளனர்.

## ஆரூட அறிவு

ரெங்கசாமிப் பிள்ளையின் ஆரூடம் கூறும் திறமை கேட்டுத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திருப்பட்டினம் வரத்தொடங்கினர். பில்லி மற்றும் சூனியத்திற்கு ஆட்பட்டவர்களை அவற்றிலிருந்து விடுபட இவர் மார்க்கம் உரைத்தார். வறுமை மிக்கவர்களின் வறுமை நீங்கத் திருவருள் துணையுடன் வழிகாட்டியருளினார். செட்டிநாட்டுப் பகுதியிலிருந்து தன வணிகர்களும்,

கேரளாவிலிருந்து பலதரப்பட்டவர்களும் ரெங்கசாமிப் பிள்ளையை நாடிவந்து ஆரூடம் கேட்டுப்பயன் அடைந்தனர். ஒருமுறை திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அழைத்து ஆரூடம் கேட்டு இவர் ஆற்றலை மெச்சி வரிசை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

## பஞ்ச அவதானம்

ஒரே நேரத்தில் பலவற்றை நினைவில் கொண்டு வெளிப்படுத்தும் பேராற்றலை 'கவனம்' என்பர். வடமொழியில் இதனை 'அவதானம்' என உரைப்பர். ஒரே நேரத்தில் ஐந்து செயற்பாடுகளை நினைவு கூர்ந்து உரைக்கும் பஞ்ச அவதானத் திறன் ரெங்கசாமிப் பிள்ளையிடம் நிலவியிருந்தது. 'செல்வர்க்கு அழகு செழுங்கிளைத் தாங்குதல்' என்ற முதுமொழிக்கு ஏற்பச் சுற்றம் தழுவி இவர் வாழ்ந்து வந்தார். ஐந்து அல்லது ஆறு குடும்பங்கள் இவர் வருவாயில் வாழ்வு பெற்றுச் சிறந்தன. ஆரூடத்துடன், சோதிடம் மற்றும் மாந்திரிகமும் கை கொடுக்க, இவற்றால் வரும் வருவாயைத் தான தருமங்கள் செய்வதற்கென்றே இவர் செலவிட்டார். ஊரே இவரைத் தருமவான் என்று போற்றி மகிழ்ந்தது. அறக்குடும்பம் இதுவே என்று மக்கள் அன்பும் மரியாதையும் கொண்டு இக்குடும்பத்தைப் போற்றி நின்றனர்.

## கணபதியாப் பிள்ளை

ரெங்கசாமிப் பிள்ளைக்கு மூன்று மனைவியர். இவர் முதல் மனைவி திருமதி. அமிர்தத்தம்மாள்

இத்தம்பதியருக்கு ஓர் ஆண்மகவும், ஒரு பெண்மகவும் பிறந்தனர். கி.பி. 1892 ஆம் ஆண்டு பிறந்த அந்த ஆண் குழந்தை தான் காகபுஜண்டர் ஆலயம் அமைத்த நற்பவியானந்த அம்பாஜியின் தந்தையார் திரு. கணபதியாப்பிள்ளை என்பவர். ரெங்கசாமிப் பிள்ளையின் இரண்டாவது மனைவி திருமதி. மாணிக்கம் அம்மையார். இவர்கள் குமாரர் திரு. சிவசுப்பிரமணியபிள்ளை பிரஞ்சு ஆட்சிக்கு உட்பட்ட திருப்பட்டினம் கொம்யூன் மேயராகவும், புதுவை மாநில அமைச்சராகவும், சமுதாயத்தில் வேறுபல உயர்ந்த பதவிகளையும் வகித்து இக்குடும்பத்திற்குப் புகழ் சேர்த்தார். மூன்றாவது மனைவி. திருமதி. கோமளம் அம்மையாருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. ஆலமரமாய், அளப்பரிய ஆற்றல்களுடன் வாழ்ந்திருந்த ரெங்கசாமிப்பிள்ளை கி.பி. 1930 ஆம் ஆண்டு அமரரானார்.

## அம்பாஜி அவதாரம்

'மகன் அறிவு தந்தை அறிவு' என்பதற்கு ஏற்ப, கணபதியாப் பிள்ளை; தம் தந்தை காட்டிய வழியில் நின்று ஆருடம் கூறிவந்தார். வாட்டசாட்டமான தோற்றமும், செக்கச் சிவந்த மேனி அழகும் மிக்க இவர் அமைதியும் அடக்கமும் மிக்கவர். தந்தை வழி, நேர் வழியில் பொருள் ஈட்டிப் பெருஞ் செல்வத்துடனும், மிக்க புகழுடனும் கணபதியாப் பிள்ளை வாழ்ந்து வந்தார். இவருக்கு இருமனைவியர். மூத்த மனைவி திருமதி. நாகரத்தினத்தம்மாள்.

இவர்களுக்கு ஆண்கள் இருவர். பெண் ஒருவர் பிறந்தனர். கணபதியாப்பிள்ளையின் இளைய தாரம் திருமதி. மதுரவள்ளி அம்மாள். இத்தம்பதியரின் முதல் ஆண் மகவாக கி.பி. 1944 ஆம் ஆண்டு, மேத்திங்கள் 18 ஆம் நாள் ரேவதி விண்மீன் கூடிய நன்னாளில் நற்பவீயானந்த அம்பாஜி வந்துதித்தார். குழந்தைத் திருநாமம் சிவராஜன் என்பது. பிற்காலத்தில் இவருக்கு, சிவஜெய்குமார், நற்பவீ சுவாமி, நற்பவீ ஆனந்த சுவாமி, நற்பவீ யானந்த அம்பாஜி எனப் பல பெயர்கள் வழங்கலாயின. நற்பவீ என்பது நல்+பவீ என்று இரண்டாகப் பிரிக்கப்படும். நல் என்றால் நல்லது அல்லது நன்மை எனப் பொருள்படும். பவீ என்று வடசொல்லுக்கு - பவிக்கட்டும், அல்லது உண்டாகட்டும் என்பது பொருள். எல்லாருக்கும் நன்மையே பெருக வேண்டும் என்று விரும்பிய சிவராஜன் பெயர், நற்பவீ என்று அழைக்கப்பட்டது பொருத்தமாகவே அமைந்தது. நற்பவீயானந்த சுவாமிகளுடன் உடன் பிறந்தோர் சகோதரி மூவர், சகோதரர் இருவர். இவர்கள் பெயர். திருமதியர். யமுனா, சுலோச்சனா, இந்திராணி, திருவாளர்கள். சௌந்தரராஜன், அமிர்தலிங்கம் என்போர்.

## நாத்திக வாதம்

கணபதியாப்பிள்ளை ஆருடம் உரைத்துப் பெருவாழ்வு வாழ்ந்ததுடன் திருப்பட்டினம் கொம்யூன் மேயராகவும் இரண்டாண்டுகள் பணியாற்றி மக்கள் தொண்டிலும் ஈடுபட்டிருந்தார். நற்பவீயானந்த

அம்பாஜியின் பதினொராவது வயதில் 28.8.1955 ஆம் ஆண்டு கணபதியாப்பிள்ளை அமரரானார். தந்தை மறைவுக்குப்பின் வறுமை சூழ்ந்தது. தாயையும், உடன் பிறந்தாரையும் மிகுந்த சிரமத்திற்கு இடையேயும் பாதுகாத்து உயர்த்தி நின்றார். உறவினர் உதவியால் அம்பாஜியின் கல்வி முயற்சியும் சிறந்து வந்தது. தந்தை மறைவு, குடும்ப வறுமை இவற்றின் காரணமாகவும், நல்ல வழிகாட்டுவார் இன்மையானும், உண்மையை உள்ளவாறு அறிய விரும்பிய ஞானவேட்கைக் காரணமாகவும் நாத்திக வாதம் இவரைப் பற்றி நின்றது. நாத்திக நெறி நின்றபோதும், தனிமனித ஒழுக்கத்திலும் அறநெறிச் சிந்தனைகளிலும் அம்பாஜி உறுதியாக நின்றிருந்தார். சகோதர-சகோதரிகளின் உதவியோடு தொழிற் கல்வியும் கற்றுத் தேர்ந்தார்.

**கனவில் இராமபிரான்**

சுவாமிகள் அக்காலத்தில் தமிழகமெங்கும் நாத்திக வாதத்தை விதைத்து, சுயமரியாதைக் கொள்கையைப் பரப்பி வந்த பெரியவர் ஒருவரை அணுகி, தம்மை அவர் இயக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டினார். அவரோ சுவாமிகளை இணைத்துக்கொள்ள முன்வரவில்லை. மாறாகக் கடவுள் மறுப்பை உண்மையாக ஆராய்ந்து அறிந்து தெளிய நீ முதலில் சமய நூல்களையும், புராண-இதிகாசங்களையும், சித்தர் நூல்களையும் படித்து வா! படித்த பின் கடவுள் மறுப்பு

உறுதியானால், உளமார உன் நெஞ்சில் உறுதி வந்தால் இயக்கத்தில் இணைத்துக் கொள்வேன் என்று கூறி நெறிப்படுத்தினார். அவர் கருத்தை ஏற்று உண்மை காணும் வேட்கையுடன் அம்பாஜி எண்ணற்ற சமய நூல்களை அக்கரையுடன் படித்து உண்மை காணும் முயற்சியில் ஈடுபட்டார். அமரர். இராஜாஜி தமிழில் எழுதி வழங்கிய இராமாயண மொழிபெயர்ப்பாகிய 'சக்கரவர்த்தித் திருமகன்' என்ற நூல் அம்பாஜியைப் பெரிதும் பாதித்தது. கடவுள் என ஒருவர் உண்டா இல்லையா என்ற தீவிரமான தேடலுடன் படித்த அம்பாஜிக்கு ஓர் இரவில் இராமபிரானே கனவில் காட்சி தந்து, இவரது ஐயங்களுக்கு விளக்கம் தந்ததை உணர்ந்தார். என்றாலும் அவர் தேடலுக்கு உரிய விடை கிடைத்த பாடில்லை. உண்மை கண்டு தெளியாமல் ஊருக்குள் நுழையக் கூடாது என்ற வைராக்கியம் அவர் உள்ளத்தில் தோன்றியது. தம் பத்தொன்பதாவது வயதில் ஞானவேட்கை மீதுர எங்கே செல்கிறோம் என்ற உணர்வே இல்லாது வீட்டைவிட்டு அம்பாஜி வெளியேறினார்.

## உள்ளத்தில் உறுதி

நாடு, மலை, காடு, கடல்பகுதி என அம்பாஜி சுற்றித்திரிந்தார். ஆசிரமங்கள், மடங்கள், கோயில்கள் எல்லாம் கால்பதித்துத் தம் குருநாதரைத் தேடினார். சந்தித்த அருளாளர் ஒருவரும் இவர் ஐயம் தீர்க்க முன் வரவில்லை. நீ என்னசாதி? நீ என்ன வருணம் என்ற வினாவும், விடையை ஒட்டிய புறக்கணிப்பும்

அம்பாஜியை வருத்தின. உண்மையை ஓரளவு உணர்ந்தாரும் தெரிவிக்க முன் வரவில்லை. பரம இரகசியம் என்று பாதுகாத்து விரட்டினர். என்றேனும் ஒரு நாள் உண்மை புலப்படும். இறைநிலை கை கூடும். ஞானம் விளக்கமுறும். அக்காலை அவற்றை கரவு இல்லாமல் நான் உலகவருக்கு உரைப்பேன் என்ற நல்லெண்ணம் அம்பாஜி உளத்தில் ஊற்றெடுத்தது.

## மதங்கடந்த அன்பு

வறுமையும், பசியும் ஞானப் பயணத்திற்குத் தடையாகவில்லை. என்றாலும், வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூர் சுவாமிகளுக்கு அடைக்கலம் தந்தது. ரப்பர் கம்பெனி ஒன்றில் பணியாற்றி, அதில் வரும் சிறு வருவாயில் வாழ்வை நடத்திக் கொண்டே ஞான ஆராய்ச்சியில் தலைப்பட்டு நின்றார். உழைப்பைப் பெருமளவில் சுரண்டிக் கொண்டு, ஊதியத்தைக் குறைத்து வழங்கும் செல்வர்கள் போக்கில் அம்பாஜி மனம் வாடினார். அம்மை நோயும், மஞ்சட் காமாலையும் அவரை வருத்தின. இறைவன் ஒருவனே துணை எனக் கொண்டு நோயுடன் போராடி வெற்றி கண்டார். கேரள மாநிலத்தைச் சார்ந்த இசுலாமியப் பெரியவர் ஒருவர் அம்பாஜிக்கு உடனிருந்து உதவி, அவர் நலம் பெறத் துணை நின்றார்.

## சாயிபாபா அருள் பெறல்

ஒரு நாள் தற்செயலாக அம்பாஜியின் கல்விச் சான்றிதழ்களைப் பார்த்து அதிர்ச்சியுற்ற அந்த இசுலாமியப் பெரியவர்,கல்வித் தகுதிக்குக் குறைவான இந்த வேலையை விட்டு விட்டுத் தகுதியான வேலைக்கு ஆற்றுப்படுத்தினார். பல இடங்களுக்கும் சென்று வேலை தேடிக் களைத்த அம்பாஜி, கடைசியில் புட்டபர்த்திச் சென்றடைந்தார். மகான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவைச் சந்தித்து ஆசிபெற்றுத் தம் ஐயத்தை நீக்கிக் கொள்ள விரும்பிக் காத்திருந்தார். அடியவர்களோடு அமர்ந்திருந்த அம்பாஜிக்கு அருள் தலைப்படும் நேரம் கூடி வந்தது. ஸ்ரீ சத்திய சாயிபாபா ஒரு நாள் அடியார் கூட்டத்தின் நடுவில் அமர்ந்திருந்த சுவாமிகள் மீது திருக்கண் பார்வை செலுத்தினார். விரல்சுட்டி அன்பு ஒழுக 'சிவராஜா' இங்கே வா என்று பெயர் கூறி அழைத்தருளினார். அம்பாஜி உடல் சிலிர்த்தார். மயிர்க்கால்கள் குத்திட்டன. கண்களிர் நீர் அருவியாகப் பெருக்கெடுக்கப் பாபாவின் அருகில் சென்று வணங்கி எழுந்தார்.

## விஜயவாடாவிற்குப் போ

பார்வை ஒன்றாலேயே மாணாக்கனை ஆட்கொள்ளும் ஞானகுருவாக அம்பாஜியை ஆட்கொண்டு, அவர் உரைக்காமலேயே அவர் தேடிவந்தது இன்னது என்பதை பாபா உணர்ந்தார். 'சிவராஜா' உன் குறிக்கோளை அடைய, இறைவன் பற்றிய உன் ஐயங்கள் யாவும் அகல உனக்கு உபதேசம்

செய்யவல்ல உன் குருநாதன் விஜயவாடாவில் உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். நீ உடனே விஜயவாடா புறப்படு என்று பாபாவின் அருள் உரை அமுதக் கடலாக வெளிப்பட்டது. விஜயவாடா ஆந்திர மாநிலத்தின் பெரிய நகரங்களுள் ஒன்று. பல லட்சம் மக்கள் வாழும் ஊர். குருநாதன் யார்? இப்பெரிய நகரில் அவனை எங்கே தேடிக் காண்பது என்ற எண்ணம் சிறிதும் இல்லாது அம்பாஜி, பாபா பணித்தவாறு விஜயவாடா சென்றடைந்தார்.

## குருநாதன் தரிசனம்

பலநாள், பலவாரம், பலமாதம் உருண்டோடின. ஞான குருவை அம்பாஜி நகர் எங்கும் தேடினார். ஒருநாள் அன்பர் ஒருவர் விஜயவாடா மலைக் குகை ஒன்றில் ஓர் அருளாளர் வாழ்கிறார் அவரை நீ சென்று பார். என்று ஆற்றுப்படுத்தினார். அம்பாஜி மலைக்குகைக்குச் சென்றடைந்து அங்கே வாழ்ந்து வந்த ஞானி ஒருவரைக் கண்டு வணங்கினார். அடுத்த கணம் உள்ளுணர்வில், பாபா நெறிப்படுத்திய என் ஞான குரு இவரே என்ற உறுதி மலர்ந்தது. நெஞ்சம் இனம் புரியாத ஒரு பரவச நிலை அடைந்தது. தாயைச் சென்றடைந்த கன்றின் மனநிலை பூத்தது. வீழ்ந்து வணங்கி எழுந்ததும் இருவர் கண்களும் கலந்தன. அருள் பூத்தது. ஆன்மிக உறவு கனிந்தது. குருநாதர் சொல்லி வைத்தது போல் சிவராஜனைச் சீடனாக ஏற்றுப் போற்றினார். சீடர் ஆனந்தக்கடலில் திளைத்தார். குருநாதர் திருநாமம் ஸ்ரீ பிரபாகர

ஆநந்தராவ் என்பது. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். தெலுங்கு மொழியிலும், சமஸ்கிருதத்திலும் முதுகலைப் பட்டம் பெற்ற பெரிய கல்விமான் அவர். இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதம் கைவரப்பெற்றவர். வாத-ரோக வைத்தியங்களிலும் திறமை மிக்கவர். தூய பிரமச்சரிய நிலை நின்றவர்.

## வித்தைகள் கை கூடல்

அம்பாஜியைத் தம் சீடனாக ஏற்றுக் கொண்ட ஸ்ரீ பிரபாகர ஆநந்த ராவ், தம்மிடமிருந்த நாடி ஏடுகளைப் பிரித்து அம்பாஜியின் பூர்வாங்கத்தைக் கண்டு அறிந்தார். அம்பாஜியின் பூர்வீக வாழ்க்கை, எதிர்காலத்தில் அவர் அடையப் போகும் சிறப்பு நிலை, எத்தகு சக்திகள் அவரை வந்தடையும் என்பனவற்றை எல்லாம் குருநாதர் தம் சீடரிடம் குறிப்பாக எடுத்துரைத்தார். வாழ்விற்காக ஒரு பணியில் இணைந்து கொண்டு, ஒரு சிறு இடத்தில் குடி புகுந்து, அவ்வப்போது குருநாதரிடம் சென்று அவருக்கு உரிய பணிவிடைகள் செய்து கொண்டு அம்பாஜி நம்பிக்கையுடன் நாள்களைக் கழித்து வந்தார். குருநாதரிடமிருந்து பல வித்தைகள் இவருக்குக் கை வரத் தொடங்கின.

## தேவதா உபாசனை

ஸ்ரீ பிரபாகர ஆநந்தராவ் ஒரு சிறந்த ஸ்ரீ வித்தியா உபாசகர். முதல் ஐந்து ஆண்டுகள் தம் சீடருக்குத்

தேவதா உபாசனைகளையும், மாந்திரீக வித்தைகளையும் படிப்படியாகக் கற்பிக்கலானார். தம் உள்ளத்தில் கேள்விக் குறியாக நின்ற இறைநிலைத் தத்துவங்கள் குறித்து அவ்வப்போது இருவரும் உரையாடி மகிழ்ந்தனர். பிரமச்சரியத்தில் தலை நின்ற தம் குருநாதர் பிற உணவு கொள்ளாது, பல பகல் இரவுகள் வெறும் தேனீரை மட்டும் பருகிக்கொண்டு, இறையனுபவங்களை எடுத்துரைக்கும் திறம் கண்டு அம்பாஜி வியப்படைந்தார்.

## இல்லறம் ஏற்றல்

ஒரு நாள் குருநாதரிடமிருந்து ஓர் உத்தரவு வந்தது. இறையனுபவம் பெறத் துறவு மட்டுமே மார்க்கம் அன்று. இல்லற நெறி நின்றும் இறையருள் பெறத் தடை ஏதும் கிடையாது. எனவே, நீ முறையாகத் திருமணம் செய்து கொண்டு இறைவனை உணரவேண்டும் என்று கட்டளையிட்டார். நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும், தம் இருகண்களாகக் கொண்டு பிரமச்சரியத்தில் பற்றுறுதி கொண்டு அதுநாள்வரை வாழ்ந்திருந்த அம்பாஜி, தம் முப்பத்தி இரண்டாம் அகவையில் குரு ஆணையைத் தலைமேல் கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டார். ஆந்திர மாநிலம் திரு. இராமராவ், திருமதி. இராமுலு அம்மையாரின் தவப்புதல்வி. திருமதி. வெங்கடரமணா அம்மையார் அம்பாஜியின் தர்மபத்தினியாக அமைந்தார். மணமக்களை ஆசீர்வதித்த குருநாதர், நீ உன் துணைவியோடு

ஒன்றரை ஆண்டுக்காலம் இல்லற இன்பத்தை அனுபவித்துவிட்டு அதன் பின் நான் அழைக்கும் போது என்னிடம் வா என்று உத்தர விட்டார். அம்பாஜியும், தியான-யோகங்களில் பற்றுக் கொண்டவராய், குருவை நாளும் நினைவு கூர்ந்து வணங்கியவாறே இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். ஒன்றரை ஆண்டுக் கழித்துக் குருநாதரை அம்பாஜி சந்தித்த போது, அடுத்த ஓர் ஆண்டு நம் சந்திப்பில் உரையாடல் கிடையாது. மௌனமாகவே சந்தித்துப்பிரிய வேண்டும் என்று புதுவழி காட்டியருளினார்.

## மோனம் விளைத்த ஞானம்

'மோனம் என்பது ஞான வரம்பு' என்பர் பெரியோர். சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு மோனநிலை நின்றே உபதேசித் தருளினார். 'சும்மா இரு சொல்லற' என்று முருகன் தனக்குக் கட்டளை இட்டதாக அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் குறித்துள்ளார். குருதரிசனத்தோடு, ஓராண்டு மேற்கொண்ட மௌனச் சந்திப்புகளால் அம்பாஜிக்கு ஞானம் கை வரத் தொடங்கியது. பல்வேறு இறைநிலைத் தத்துவங்கள் புரிய ஆரம்பித்தன. இயற்கை இரகசியங்கள் புலப்பட்டுத் தோன்றின. அவர் பத்தொன்பது வயதில் தேடத் தொடங்கிய வினாக்களுக்கு விடை கிடைக்க ஆரம்பித்தது. நாத்திகவாதம் தலைசாய்ந்தது. இறைவனின் அளப்பரிய ஆற்றலும், 'அவனன்றி ஓரணுவும்

*அசையாது' என்ற உண்மையும் புரியலாயின. வித்தைகள் பலவும், குலவழி வந்த தாயினும், குருவின் அருளால் முழுமையாக அம்பாஜியிடம் தஞ்சம் புகுந்தன.*

## காகபுஜண்டர் வழி வந்தாய்

*அம்பாஜியின் இல்லறப்பயனாய் அடுத்தடுத்து சில ஆண்டுகளில் திரு. சிவபிரேம் குமார், திரு. சிவநந்தகுமார், செள. சிவதுர்க்காதேவி என்ற ஆண்மக்கள் இருவரும், பெண் ஒருவரும் தம்பதியருக்கு அரு மகவுகளாய்ப் பிறந்தனர். ஒருநாள் குருவின் கட்டளை கிடைத்தது. 'நீ ஞானம் யாவும் கைவரப் பெற்றாய்: அனைத்து வித்தைகளுள் கிடைக்கப்பெற்றனை. எனவே, நீ பிறந்த இடத்திற்குச் சென்று உனது பணிகளை நிறைவேற்றக் கடவாய்' என்று கட்டளை இட்டார். மேலும் தேவ இரகசியம் ஒன்றையும் வெளிப்படுத்தினார். தம்மிடம் உள்ள நாடி ஏடுகளைப் பிரித்துப் பார்த்து,*

> 'அன்பனே! அளவற்ற அன்புடைய வரும், கருணைக் கடலும், பல்லூழிக் காலம் நிலவுலகில் வாழ்ந்து, பலயுகங்களைக் கண்டவரும், மகரிஷியுமாகிய ஸ்ரீ காகபுஜண்டர் வழியில் வந்தவன் நீ! இரண்டு ஜென்மத்திற்கு முன் கேரளநாட்டில் நீ வாழ்ந்திருந்த போது ஒரு முனிவரிடம் சிறுபிள்ளைத் தனத்தால் ஒரு தவறு செய்து விட்டாய்! அவர் உன்னை முனிந்து சிறு சாபம் இட்டார். அடுத்தடுத்த பிறவிகளில் சாபம்

குறைந்தது. இப்பிறவியோடு அவர் சாபம் முற்றிலும் அகன்று விடுகிறது. இதுவே, உனக்கு இறுதி ஜென்மம். இனி நீ தாய் வயிற்றில் கரு இருந்து நிலவுலகில் பிறவாது இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலப்பாய்!'

*கேட்ட அம்பாஜியின் உள்ளம் வியப்பில் ஆழ்ந்தது. மனம் பழம் பிறவியில் இழைத்த தவறு நினைந்து வருந்தியது. குருநாதர் மேலும் தொடர்ந்தார்.*

'உன் சாபம் முற்றிலும் அகல, இந்த இறுதிப் பிறப்பில் ஸ்ரீ காகபுஜண்டப் பெருமானின் மூல மந்திரத்தைத் தொடர்ந்து ஜெபித்து வர வேண்டும். அவரைத் தந்தையாகவும், குருவாகவும் கருதிப் போற்றி வழிபடவேண்டும். இவற்றால் உன்சாபம் நீங்குவதோடு, உன் வழியில் வருவோர் அனைவரும் மிக்க நற்பலன்களை அடையப்பெற்று மகிழ்வார்கள். மேலும், இதுபற்றி நீ அறிய விரும்பினால் 1990 ஆண்டு வாக்கில் காகபுஜண்டர் நாடி உனக்குப் பல உண்மைகளைத் தெரிவிக்கும். எல்லா இரகசியங்களையும் இப்போதே நான் வெளிப்படையாகக் கூற இயலாது'

*என்று குரு ஆணை பிறந்தது. குரு ஆணையைத் தலைமேல் கொண்டு மனைவி மக்களுடன் நற்பவீயானந்த அம்பாஜி குருவிடம் விடைபெற்றுக் கொண்டு, நிறை தவத்தவராகத் திருப்பட்டினம் வந்து சேர்ந்தார்.*

## சகோதரியின் அன்பு

திருப்பட்டினத்தில் தொடங்கிய வாழ்க்கை இன்பமுடையதாக இல்லை. எல்லாச் சூழ்நிலையிலும் உடனிருந்து வழிகாட்டியருளும் இறைவன், அம்பாஜியின் சகோதரி திருமதி. இந்திராணி, மைத்துனர் திரு. நாகராஜன் வழி நேசக்கரம் நீட்ட வைத்தார். இறையருளும், குருவருளும் துணை நிற்க, அம்பாஜி சுயமுயற்சியால் படிப்படியாக வாழ்வில் முன்னேற்றப்பாதையில் அடி எடுத்து வைத்தார்.

## படிப்படியான முன்னேற்றம்

கி.பி. 1950 முதல் தன் தந்தை வழியும், தம் குருநாதர் வழியும், தாமே முயன்றும் கற்ற அருங்கலைகள் அவர் வாழ்விற்கு ஒளி விளக்குகளாக அமைந்தன. தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு சோதிடப் பலன்களைத் துல்லியமாக ஆராய்ந்து எடுத்துரைத்தார். அவர்களது நோய் நீங்கவும், மனத்துன்பங்கள் அகலவும் வழிமுறைகளை விளக்கி நின்றார். நேர்மை உணர்வோடு, மற்றவர்களுக்கு இயன்றவாறெல்லாம் உதவுதலை அம்பாஜி ஒரு வேள்வியாகவே செய்தார். அன்பும்-மெய்ம்மையும் கொலுவிருக்கும் இடத்தில் அழகிருக்கும். தெய்விகம் சுடர்வீசும். அம்பாஜியை நாடி மக்கள், கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினர். ஒரு கணப் பொழுதையும் வீணடிக்காது உலக நலம் கருதிப் பூஜைகளையும், பல்வேறு ஹோமங்களையும்

இயற்றியதோடு, இடையறாத தியானத்தையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

## ஆலயம் அமைக்க உறுதி

இறைவன் உள் நின்று உணர்த்த, தன் தவ வலிமையால், வாடகை வீட்டில் வாழ்ந்து வந்த காலத்திலேயே தாம் வாழவேண்டிய இடம் இது என்பதையும், தம் வழிபடு தெய்வங்களுக்கு ஆலயம் அமைக்க வேண்டிய இடங்கள் இவை இவை என்பதையும் உணரலானார். இறையன்பும், சத்தியமும் வழிகாட்ட அளவற்ற உழைப்பால் திருப்பட்டினம் எடத்தெருவில் மனை ஒன்று வாங்கித் தற்போது வாழ்ந்து வரும் சிறு இல்லம் ஒன்றை அமைத்தார். அவர் வாழிடமாகிய வீடே கோயிலாகத் திகழ்ந்தது. என்றாலும், தன்னை நாடி வரும் அன்பர்கள் வழிபடுவதற்கு ஆலயம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் துளிர்த்தது.

## பிரணவ ஜோதி ஆலயம்

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்று பெரியோர் உழைப்பைச் சிறப்பித்துப் பேசினர். முதன் முதல் பிரணவ ஜோதி ஆலயம் ஒன்றை நிறுவினார். நாகப்பட்டினம் அன்பர், ஆர்.ஜி.ஆர். ஜுவல்லரி உரிமையாளர் திரு. இராமசாமி, அவர் துணைவி திருமதி. சகுந்தலா ஆகியோர் நேசக்கரம் நீட்டினர். ஓர் ஆலயம் அமைக்கப்பொருள் உதவி செய்யும் பேறு அவ்வளவு எளிதாகக் கிடைத்தல் இல்லை. கி.பி. 1989

ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் முதல் நாள் ஸ்ரீ பிரணவ ஜோதி ஆலயக் குடமுழுக்கு நிகழ்ந்தேறியது.

## அருட்சேய்கள் வருகை

மரம் பழுத்தால், பறவைகளுக்கு அழைப்பு விடுக்கத் தேவை இல்லை. நல்ல ஞானமும், சீரிய ஒழுக்கமும் மிக்க அருளாளர்களை நாடி, ஆன்மிக நாட்டமுடைய இளைஞர்கள் வருதல் இயற்கையே. இல்லறத்தில் இருந்தவாறே அறநெறி வழுவாது, நல்லொழுக்கத்தில் தலைநின்றார் அம்பாஜி. அருட்சேய்கள் பலர் அவரை நாடி வந்து சீடர்கள் ஆயினர். அம்பாஜியின் தெய்விகப் பணிகளுக்குத் தொண்டு பூண்டனர். தம் பிள்ளைகள் வேறு: அருட்சேய்கள் வேறு என்று கருதாது அன்பு செய்த அம்பாஜியின் அன்பில் அருட்சேய்கள் கரைந்து நின்றனர். 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்ற அறவுணர்வுடன், தானத்தில் சிறந்த அன்னதானத்தை அம்பாஜிப் பெரிதாகப் போற்றிச் செய்யலானார். தன்னை நாடி வந்தவர்கள் உணவருந்தாமல் செல்ல அவர் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. அம்பாஜி அருட்கூடத்து அனைத்துப் பூஜைகளிலும் அன்னதானமே சிறப்பிடம் பெற்றது.

## என் வழி வந்த மைந்தன்

தம்மை நாடிவரும் அன்பர்களின் முகம்பார்த்தே 'இவர்குறை இது' என்று உணரும் ஆற்றல் பெற்ற அம்பாஜி, அவர்கள் குறைகளைப் பொறுமையாகக்

கேட்டறிந்து, தம் உள்ளத்தில் இறையருளாலும், குருவருளாலும் பிறக்கும் ஒளியின் துணையோடு, அன்னார்குறை நீங்கும் வழிகளை எளிய நடையில் எடுத்துரைப்பார். தம் உள்ளத்தில் ஒளிவிடும் தீப சக்தியினால் தற்போது அருட்கூடம் அமைந்திருக்கும் புனித இடம் பல யுகங்களுக்கு முன்னர் ஸ்ரீ காகபுஜண்டரும், ஏனைய ரிஷிகளும் வாழ்ந்திருந்த இடம் என்ற உண்மை அவர் உள்ளத்தில் புலப்படலாயிற்று. மேலும், உண்மை உணர, முன்னரே குருநாதர் உரைத்தவாறு, புள்ளிருக்கு வேளூர் என்ற பழம் பெயர்கொண்ட வைத்தீஸ்வரன் கோயில் சென்று அம்பாஜி, அங்கே காகபுஜண்டர் பெயரில் நாடி ஜோதிட நிலையம் அமைத்திருந்த திரு. ஜெமினி செல்வராஜ் என்பவரிடம் நாடி சோதிடம் கேட்டார். ஸ்ரீ காகபுஜண்டர் அருள்துணையோடு, பல தத்துவ விளக்கங்களும், பூஜை முறைகளும், ஞான வாயில்களும் நாடி வாயிலாகப் புலப்பட்டு நின்றன. அம்பாஜியின் முன்னை வாழ்க்கை பற்றிய இரகசியங்கள் நாடி வழி வெளிப்பட்டன. நாடியில் அம்பாஜியை 'என்வழி வந்த மைந்தன்' என்று எழுதப்பட்டிருந்த அரிய குறிப்பும் காணப்பட்டது. பலமுறையும் நாடி பார்த்து, அம்பாஜி பல அரிய உண்மைகளை ஸ்ரீ காகபுஜண்டர் அருளால் உணரலானார்.

## வாழ்ந்து காட்டுதல்

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறு ஒன்றும் அறியேன் பராபரமே' என்றார் தாயுமானார். நற்பவியானந்த அம்பாஜியின் எண்ணம், பேச்சு, செயல், ஒவ்வொன்றிலும் இப்பண்பு வெளிப்படுதலைக் காண முடியும். மனிதர்களைத் தேடி வெற்றிகள் வருவதில்லை. வெற்றிகளை நாடி மனிதன் முயலவேண்டும். மந்திரத்தில் மாங்காய்ப் பழுக்கும் என்பது பேதமை. சாதனைகள் மட்டுமே வெற்றிக்கனியைப் பறிக்க ஏணிப்படிகளாக முடியும் என்பது அம்பாஜியின் திடமான நம்பிக்கை. இல்லறத்தில் இருந்து கொண்டே இறைநிலையை எய்த வேண்டும்: எய்தவும் முடியும் என்று அவர் மற்றவர்களுக்கு அறிவுரை மட்டும் கூறவில்லை. வாழ்ந்தும் காட்டினார். வாழ்ந்து காட்டியும் வருகிறார்.

## தியான மண்டபம்

மனத்தை மனத்தால் உணர்தலும், உணர்ந்த மனத்தின் துணையோடு ஆன்மாவை அறிதலும் வழிமுறைகள் என்பதை உணர்ந்த சுவாமிகள், மனப்பயிற்சிக்கு அதிக இடம் தர வேண்டும் என்று கருதினார். தம்மை நாடி வந்து இறைபணியில் ஈடுபடும் அருட்சேய்களுக்கு ஆன்மாவின் உண்மை கண்டு தெளிய நீண்ட தியானப் பயிற்சிகளைக் கற்பிக்கலானார்.

## ஆயில்ய நாள் பூஜை

சமயம் என்பது மக்களை எல்லாம் இறைவன் திருவடியில் கொண்டு சேர்ப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டது அன்று. அது மக்கள் 'மண்ணில் நல்லவண்ணம் வாழவும்' வழிகாட்ட வேண்டும். பசித்தோருக்கு உணவும், நோயுற்றோருக்கு மருந்தும், அறிவற்றோருக்குக் கல்வியும், திக்கற்றோருக்குப் புகலிடமும் வழங்குவதே சமயவாழ்வின் அடித்தளமாக அமையவேண்டும். தாம் வாழும் திருப்பட்டினப் பகுதியில் வாழும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறவும், அவர்கள் வறுமை நீங்கி வாழ்வு சிறக்கவும், இப்பகுதி ஒரு தொழில் நகரமாக வளர வேண்டும் என்று எண்ணிய அம்பாஜி ஸ்ரீ காகபுஜண்டரிடம் நாளும் தம் விண்ணப்பத்தைப் படைத்தார். பல தொழிற்சாலைகள் குருவருளால் அடுத்த ஆண்டுகளில் உருவாகத் தொடங்கின. மக்கள் எல்லோரும் ஸ்ரீ காகபுஜண்டரின் கருணையை உணரவும், அவரது அளப்பரிய ஞானத்தை உணரவும், திங்கள் தோறும் ஸ்ரீ காகபுஜண்டர் அவதார நாளாகிய 'ஆயில்யத்' திருநாளில் பெரும் பூஜைகளையும் வழிபாட்டு நிகழ்வுகளையும் உலக நலம் கருதி நிகழ்த்தலானார். மக்கள் திரளாகக் கலந்து வழிபட்டுப் பேறு பெறலானார்கள்.

## ஸ்ரீ துர்க்கா பூஜை

ஸ்ரீ காகபுஜண்டர் பூஜை நாளில் ஸ்ரீ துர்க்கா பூஜையும் மேற்கொள்ளப்பட்டது. தீமைகளை அழித்து நன்மைகளை வாழவைத்த வெற்றித் தெய்வம் கொற்றவை. பூஜை நாளில் எளியோருக்கு அன்னதானமும், வஸ்திர தானமும் நிகழ்த்தப்பட்டன. நாடி வரும் அன்பர்களுக்கு மருத்துவசேவையும் வழங்கப்பட்டது. இயன்ற வரை இலவசமாக மருந்துகளும், இரத்தப்பரிசோதனை முதலியனவும் இங்கே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த அரிய சேவையைத் தம் குழுவினருடன் புதுவை. டாக்டர். திரு. உதயகுமார் இயற்றி வருகிறார். பூஜைக் கட்டளைகளையும் அன்பர் பலர் உபயமாக மனமகிழ்ச்சியுடன் தம் பொறுப்பில் ஏற்றுச் செய்து வருகின்றனர். திருப்பட்டினத்தில் வாழும் திரு. எஸ். ஆர். ஆனந்தன் சகோதரர்கள் செய்து வரும் உதவிகள் போற்றப்பட வேண்டுவன. இவர்கள் அனைவரும் ஸ்ரீகாகபுஜண்டரின் திருவருளுக்கும், அம்பாஜியின் குருவருளுக்கும் பாத்திரர்களாகத் திகழ்கின்றனர்.

## ஸ்ரீ நற்பவி விநாயகர்

ஒருமுறை அம்பாஜி வைத்தீஸ்வரன் கோயில் சென்று நாடி பார்த்த போது,

**'உன்தடம் என் தடமாக வளரும்: உன் வளர்ச்சியுடன் என் ஆலயமும் அமையும்: முதல்**

முயற்சியாக உன் இல்லத்தில் விநாயகருக்கு ஆலயம் ஒன்றை உருவாக்கு'

என்று ஸ்ரீ காகபுஜண்டரின் அருளாணை வெளிப்பட்டது.

அம்பாஜி ஸ்ரீ காகபுஜண்டர் கட்டளையை ஏற்று விநாயகர் ஆலயம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டார். அதே சிந்தனையில் இருந்த அவருக்கு, ஒருநாள் பூஜை நிறைவில் தியானம் மேற்கொண்டபோது, விநாகர் திருமேனி முற்றிலும் புதிய முறையில், புதிய உலோகக் கலவை கொண்டு, பாதரசம் மற்றும் மூலிகைக் கலவைகளோடு ஐந்து பாஷாணத்தில் அமைக்கப்படவேண்டும் என்ற திருவருட் குறிப்பு வெளிப்பட்டது. தியானத்தில் வந்த ஆணைப்படி ஸ்ரீ விநாயகர் திருமேனியைத் தவ வலிமையின் துணையால் நற்பவீயானந்த சுவாமிகள் வடிவமைத்தார். புதிய ஆலயம் உருவாயிற்று. 19.3.1992 இல் நற்பவீ விநாயகர் ஆலயக் குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடந்தேறியது. விநாயகர் திருமேனி பார்ப்பதற்குச் சிறிதாகத் தோன்றினாலும் 16 கி.கிராம் எடை கொண்டது. வெள்ளி உலோகத்தால் செய்யப்பட்டதோ என எண்ணுமாறு ஒளி வீசும் வடிவழகு மிக்கது. நாள்தோறும் அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஆயில்யத் திருநாளில் வெகுசிறப்பான ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அளவற்ற அருட்சக்தி கொண்ட ஸ்ரீ நற்பவீ விநாயகர் அருளால் அருட்கூடம்

தழைத்தது. அடியவர் வருகை அதிகரித்தது. அம்பாஜியின் புகழ் எங்கும் பரவியது.

## அம்பாஜி நிகழ்த்திய அற்புதம்

ஒரு உயிரைப் பிறக்க வைக்கவும், மரணத்திலிருந்து காப்பாற்றிச் சாகாவரம் தரவும் எந்த ஞானியாலும் முடியாது. அவை தேவ இரகசியங்கள். இறைவன் ஒருவனே ஐந்தொழில் இயற்றும் ஆற்றல் மிக்கவன். அவன் அருள் பெற்ற ஞானிகள். அறிவு நிரம்பிய குழந்தை பிறக்க ஆசீர்வதிக்க வல்லவர்கள். மரணத்தைத் தடுத்து நிறுத்தாவிடினும் வாழ்நாளைத் தம் தவ வலிமையால் நீட்டிக்கும் வல்லமை அவர்களுக்கு உண்டு. அம்பாஜி அத்தகு அற்புதம் ஒன்றை நிகழ்த்தினார். மருத்துவர்கள் கைவிட்டு, மரணத்தின் வாயில்வரை சென்ற தன் அன்னையார் திருமதி. மதுரவள்ளி அம்மையாரைத் தம் தவ வலிமையால் மேலும் பல ஆண்டுகள் உயிரோடு வாழும் வகை செய்தார். மருத்துவர்களுக்கே வியப்பளித்த அற்புதம் இது. அம்மையார் 18.7.1993இல் இறைவனடி சென்று சேர்ந்தார்.

## அருள் ஜெயந்திப் பெருவிழா

ஸ்ரீ நற்பவீ அருட்கூடத்தில் ஸ்ரீ வீரனாருக்கு ஒரு தனிச் சந்நிதியும், துளசி மாடமும் அமைக்கப்பட்டன. அன்பர்கள் பலரது வேண்டுகோளின்படி ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ காகபுஜண்டரின் திருவவதாரத் திருநாளில், பங்குனி ஆயில்யத்தில் 'அருள் ஜெயந்தி'

விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்பர்கள் பலரும் தம்தம் வசதிக்கு ஏற்பப் பொருள் உதவி செய்து ஜெயந்தி விழாவைச் சிறப்பித்தனர். ஸ்ரீ காகபுஜண்டர் புகழ் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாயிற்று இவ்விழாவில் பல விதமான ஹோமங்களும், சிறப்புப் பூஜைகளும் நிகழ்த்தப்பட்டன. தக்க அறிஞர்களைக் கொண்டு, திருவருளையும், குருவருளையும் மக்கள் அறியுமாறு ஆன்மிக அருளுரைகள் அமைக்கப்பட்டன. கி.பி. 1993 முதல் அருள் ஜெயந்தி விழா, ஸ்ரீ சண்டி ஹோமம், ஸ்ரீ ருத்ர ஹோமம், ஸ்ரீ மாதங்கி ஹோமம், ஸ்ரீ சொர்ணாக்ரக்ஷண பைரவர் ஹோமம், ஸ்ரீ சப்தரிஷி ஹோமம் முதலியன பல்லாண்டுகளாக ஸ்ரீநற்பவீ அருட்கூடத்தில் நிகழ்த்தப்பட்டன. திருச்சிராப்பள்ளி, அந்த நல்லூர் தவத்திரு பிரணவானந்த சுவாமிகளும், அவர் தம் சீடர் ஸ்ரீ சாம்பசிவ யோகீசுவரரும் மேற்குறித்த ஹோமங்கள் அனைத்தையும், தம் ஆசிரமத்தில் நடத்தும், அதே சிறப்புடன் நடத்தித்தந்தமை குறிப்பிடத்தக்கது. ஹோமப் புகையும், மந்திர ஒலியும் அப்பகுதியையே திருவருள் மணம் கமழச் செய்தன.

## அருட்சேய்கள் சிறப்பு நிலை

திரைச்சீலையில் ஓவியமாக இருந்த ஸ்ரீ காகபுஜண்டருக்குத் திருமேனி அமைத்து அருளாலயம் ஒன்றை உருவாக்கும் எணணம அம்பாஜியின் உள்ளத்தில் மெல்ல மெல்ல வளர்ந்து

உறுதியடைந்தது. அம்பாஜி உடன் உறையும் அருட்சேய்கள் பலரும் அம்பாஜியுடன் பல ஜென்மங்களில் உடன் உறையும் பேறு பெற்றவர்கள். ஒவ்வொருவரும் அற்புதங்கள் பல நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள். அம்பாஜியுடன், மறுபிறப்பு இனி இல்லாமல் இறையடிகளில் கலக்கப்போகும் புண்ணியப் பேறு பெற்றவர்கள். அம்பாஜியைப் போல் அவர்கள் உள்ளத்திலும் ஸ்ரீ காகபுஜண்டர் ஆலயம் காண வேண்டும் என்ற ஆர்வம் சிறந்திருந்தது. அருட்கூடத்து அன்பர்களுக்கும் இதே எண்ணம் மேலோங்கியிருந்தது.

## ஸ்ரீ சிவராஜ மாதங்கி

தம்மை நாடி வரும் அன்பர்களின் தனிப்பட்ட நலன் கருதி, அவர்கள் வேண்டியவாறு சில சிறப்புப் பூஜைகளையும் அம்பாஜி நிகழ்த்தி வந்தார். அனைவர் குறைகளும் நீங்க உலக அன்னையாக விளங்கும் ஸ்ரீ சிவராஜ மாதங்கி அன்னையையும் சுவாமிகள் ஆராதனை செய்து வந்தார். அமாவாசை, மற்றும் பௌர்ணமி நாள்களில் ஸ்ரீ மாதங்கிக்குக் குருதி பூஜையும், அறுபத்து நான்கு பைரவ-பைரவிகளுக்குப் பலி பூஜையும் நிகழ்த்தப்பட்டன. நாடி வரும் அன்பர்களின் குறைகளை உணர்ந்து, அவர்தம் குறை நீங்க எவ்வகையான வழிபாடுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்று தீர்மானித்து, அவ்வாறே நிகழ்த்தி, மக்கள் குறை தீர்த்த அம்பாஜியின் முழுமையான பேரருள் திறத்தில் ஈடுபட்ட அருட் கூட அன்பர்கள்

அனைவரும், ஸ்ரீ காகபுஜண்டர் ஆலயம் அமைக்க முனைப்போடு உதவ முன் வந்தனர்.

## ஸ்ரீ காகபுஜண்டர் ஆலயம்


அம்பாஜியின் விருப்பமும், அருட்சேய்களின் அன்பும், அன்பர்களின் நேசமும் துணையாக ஒரு நல்ல முகூர்த்தத்தில் திருக்கோயில் கட்டும் பணி திருவருள் துணையோடு தொடங்கப்பட்டது. மிக விரைவில் ஸ்ரீ காகபுஜண்டர் அருளாலயம் கட்டி முடிக்கப்பட்டது. ஆலயத்தின் நுழைவாயிலில் ஸ்ரீ சுவர்ணாக்ரக்ஷண பைரவர் திருமேனி பெரிதாக நிறுவப் பெற்றது. நவக்கிரகங்களின் தோஷ நீக்கத்திற்காக, ஸ்ரீ மாலினி ஸ்ரீ சுசீலினி உடனாக ஸ்ரீ செவ்வாயையும், ஸ்ரீ சிம்ஹிசமேதராய் ஸ்ரீ இராகுவையும், ஸ்ரீ சித்திரலேகா உடனாக ஸ்ரீ கேதுவையும் தனித்தனி சிறு ஆலயங்கள், உரிய திசை நோக்கி அமைத்து அவர்களை அம்பாஜி எழுந்தருளச் செய்தார். உலகவர் பசி நீக்கிச் சோறளிக்கும் அன்னை. அன்னபூரணிக்கும் ஒரு தனி ஆலயம் அமைக்கப்பட்டது. பல்லாயிரவர்கள் தரிசிக்க ஒரு நல்ல நாள் பார்த்து 8-6-2000 அன்று ஸ்ரீ நற்பவீயானந்த அம்பாஜி ஸ்ரீ காகபுஜண்டர் மற்றும் சுற்றி அமைந்துள்ள ஆலயங்களுக்குக் குட முழுக்குப் பெருவிழாவை மிகச் சிறப்பாக நடத்திவைத்தார்.

## முதற் கோயில்

ஸ்ரீ காகபுஜண்டர் சிவபரம் பொருளால் ஆசீர்வதிக்கப்பட்டவர். சோதிடம், கணிதம், சிற்பம், மருத்துவம், மாந்திரீகம் முதலிய பல கலை ஞானங்களை எளிய இனிய சூத்திரங்களால் உலகவர்களுக்கு வழங்கிய மாபெரும் கருணைக்கடல். முப்பத்து முக்கோடி தேவர்களின் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவராக இன்றளவும் திகழ்ந்து வருபவர். இவரை ஒரு முறை வணங்கினால், மும்மூர்த்திகளின் திருவருள் கூடிவருவதோடு, பஞ்சபூதங்களும், தேவாதி தேவர்களும், நவக்கிரக நாயகர்களும் வசப்பட்டு நம்மை வாழ்த்துவர். தென்னாட்டில் சில பகுதிகளிலும், வட இந்தியாவில் பல பகுதிகளிலும் ஸ்ரீகாகபுஜண்டர் வழிபாடு நிகழ்ந்து வந்த போதும், உலகில் வேறு எங்கும் இல்லாது அன்னை ஸ்ரீ பகுளா தேவி உடன் ஸ்ரீ காகபுஜண்டப் பெருமான் தனிக் கோயில் கொண்டு அருள்பாலித்து வருவது திருப்பட்டினத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அருளாளரும், அன்பு மிக்கவருமாகிய ஸ்ரீ நற்பவீயானந்த அம்பாஜியின் அளப்பரிய பக்தியில் உருவான ஸ்ரீ காகபுஜண்டர் ஆலயம் தென்னாட்டில் முதன் முதல் ஒரு மகரிஷிக்கு எடுக்கப்பட்ட அருட் கூடமாக விளங்கி வருகிறது. நித்திய நைமித்திக பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

## அம்பாஜி அருள் பெறுவோம்

ஸ்ரீ நற்பவீயானந்த அம்பாஜி வெறும் எண் கணித சோதிடர் மட்டும் அல்லர். ஆரூடம் உரைப்பது மட்டுமே அவர் ஆற்றல் என்று சிலர் கருதியிருக்கக் கூடும். அவர் பெரிதும் தவசக்திகள் கைவரப் பெற்று நிறைஞானியாக விளங்குகிறார். பல்வேறு தெய்வங் களின் அருள் ஆற்றல்களை நிறைவாகப் பெற்ற அருட் கடலாகத் திகழ்ந்து வருகிறார். அவரை ஒரு முறை பார்ப்பவர்கள் அவரது தெய்விகம் கமழும் திருமுகத்தால் ஈர்க்கப்படுவர். அவரது ஒளி மிக்க கண்களின் பார்வையால் நம் நெஞ்சம் அமைதி பெறும். அவர் புன்னகை நம்மை மயங்கவைக்கும். மனித குலம் பசியும், பிணியும் நீங்கி உலகில் வசியும் வளனும் சுரக்க, ஸ்ரீ காகபுஜண்டருக்கு ஆலயம் அமைத்த இந்த அருளாளரால் உலகம் அமைதி பெறட்டும். மக்களின் துன்பங்கள் யாவும் நீங்கி உலகெங்கும் இன்பம் நிலவட்டும். ஸ்ரீ காகபுஜண்டர் தாள் மலர்களை வந்திப்போம். ஸ்ரீ நற்பவீயானந்த அம்பாஜியின் அருளுக்குப் பாத்திரராவோம். அன்புப் பணியில் துணை நிற்கும் அருட்செய்களை வாழ்த்துவோம்.



முனைவர்

## இரா.செல்வக்கணபதி,

எம்.ஏ., பிஎட்., பிஎச்டி.,

என் அண்ணன் முனைவர், திரு இரா.செல்வக்கணபதி தருமையாதீன ஞானப் பண்ணையில் தமிழ்க்கல்வி பயின்று 1965இல் புலவர் தேர்வில் மாநில முதன்மை பெற்று 1000 ரூபாய்ப் பரிசு பெற்றவர்

தருமை ஆதீனம் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், முதல்வராகவும் பணியாற்றியவர்.

தருமையாதீனத் தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்

நாடறிந்த சமய, இலக்கியச் சொற்பொழிவாளர்.

ஒன்பது நூல்களையும், பன்னாட்டு இதழ்களில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்

தமிழ்த் தொல் இலக்கணங்கள், இலக்கண உரைகள், சங்க இலக்கியங்கள், சைவ சமயம் மற்றும் தத்துவ நூல்கள், சிறப்பாகச் சேக்கிழாரில் நிறைந்த ஈடுபாடும் புலமையும் மிக்கவர்

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் அங்கம் வகித்தவர்

இந்திய நாடெங்கும், கடல் கடந்தும் சென்று சமய இலக்கியப் பணி ஆற்றி வருபவர்.

பல்வேறு அமைப்புக்களால் சைவச்செங்கதிர், முத்தமிழ் அரசு, செந்தமிழ் வாரிதி, சைவத் தமிழ்மணி, செந்தமிழ்ச் செல்வர், சித்தர் இலக்கியச் செம்மல், சமய இலக்கியக் கலாநிதி முதலிய பட்டங்கள் வழங்கப் பெற்றவர்.

**இராஜ. இளங்கோ**, பிஏ., பிஎல்.,
நகரக் குற்றவியல் வழக்கறிஞர்,
சென்னை.